Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்




மலர் 12 சௌமிய பங்குனி 2 முஹர்ரம் 6 (15-3-70) ஞாயிற்றுக்கிழமை இதழ் — 33

# பன்றித்தலைச்சி அம்மன் ஆலய நீதிமன்ற உத்தரவுகள்

## விண்வெளி வீரருக்கு பிரதமர் புகழ்மாலை

கோட்டை, சனி

''மனிதர்கள் எல்லாரும் ஒரேகுலம் என்ற பெரும் தத்துவத்தை விண்ணுலகில் காலடி எடுத்துவைத்ததன் மூலம் இந்த மண்ணுலக மாவீரர்கள் எமக்கு உணர்த்தினர்கள். மனிதனின் சாதனையைக் கட்டுப்படுத்தமுடியாது என்ற வகையில் அற்புத சாதனையை நிகழ்த்தியுள்ளார்கள்'' என்று பிரதமர் டட்லி சேனநாயகா நேற்றிரவு கூறினர்.

நேற்றிரவு அலரிமாளிகையில் விண்வெளி வீரர்களுக்கும், அவர்களது துணைவியருக்கும் அளிக்கப்பட்ட இராப்போசன விருந்தில் பிரதமர் உரையாற்றுகையிலேயே இப்படியாகக் கூறினர்.

## கண்டியில் பிரமாண்டமான வரவேற்பு

கண்டி, சனி

அப்பலோ-12 வீரர்களுக்கு இன்று கண்டியில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இன்று காலை 8 மணியளவில் விசேஷ ரயிலில் கோட்டையிலிருந்து புறப்பட்ட இவர்களது ரயில் பொது மக்கள் பார்ப்பதற்காக மெதுவாக ஊர்ந்து சென்றது. பேராதனைச் சந்தியிலிருந்து விண்வெளி வீரர்களும் அவர்களது துணைவியரும் மோட்டார்காரில் கண்டிக்கு ஊர்வலமாகச் சென்றனர். அவர்கள் சென்ற வீதியின் இரு மருங்கிலும் மக்கள் கூட்டம் வெள்ளமாக நின்று வீரர்களை 'வாழ்க' 'வாழ்க' என வரவேற்றது. கண்டியில் இவர்களுக்கு பிரமாண்டமான பொது வரவேற்பு அளிக்கப்பட்டது.

பேராதனைப் பூங்காவிற்கும் விண்வெளி வீரர்கள் விஜயம் செய்தனர். அங்கு இவ்விஜயத்தின் நினைவாக மரமொன்று நாட்டப்பட்டது. தலதா மாளிகைக்கு விண்வெளி வீரர்களும் விஜயம் செய்தனர்.

இன்று நண்பகலுக்குச் சற்றுப்பின்னதாக விண்வெளிவீரரின் உத்தியோகபூர்வமான இலங்கை விஜயம் முடிவடைந்தது.

விண்வெளிவீரர் ஓய்வு எடுத்துக்கொள்கிருர்கள்.

## எக்ஸ்போ-70 ஆரம்பம்

டோக்கியோ, மார்ச். 14

ஜப்பானிலுள்ள ஒஸாக்காவில் 'எக்ஸ்போ-70' உலகப் பொருட்காட்சி இன்றுகாலை ஆரம்பமானது. இலங்கை உட்பட எழுபத்தேழு நாடுகள் இந்தப் பொருட்காட்சியில் பங்கு கொள்கின்றன. ஜப்பானியமன்னர் ஹிரோஹிட்டோ இந்தப்பொருட்காட்சியைஆரம்பித்துவைத்தார்.

இலங்கையின் பழம் பெருமைவாய்ந்த புராதனச் சின்னங்கள் பொருட்காட்சியில் வைக்கப்பட்டுள்ளன.

உலகத்தின் பல நாட்டு உயர்அதிகாரிகளும், பிரமுகர்களும் கலந்துகொண்ட இந்தப் பொருட்காட்சியில் 2,760 நிருபர்கள் கலந்து கொண்டனர்.

மிகப்பெரிய தொகையான நாடுகள் இந்தப் பொருட்காட்சியில் கலந்து கொண்டுள்ளன. செப்டம்பர் மாதத்திலேயே இந்தப் பொருட்காட்சி முடிவடையும்.

---

## சிலை நிறுவப்படும்

உடுப்பிட்டி, சனி

பருத்தித்துறைஸ்ரீ சாரதா நிலைய சேவாச்சிரமத்தில் அன்னை ஸ்ரீசாரதா தேவியின் சிலை நிறுவப்படவுள்ளது.

காலஞ்சென்ற நீச்சல் வீரர் திரு. நவரத்தினசாமிக்கு வல்வையில் சிலை நிறுவப்படவுள்ளது. வல்வை வாலிபர்கள் நீச்சல் வீரர் நவரத்தினசாமிக்குச் சிலைநிறுவும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## நாளை பொங்கல் ஆரம்பம் கதவுகள் மூடியிருக்கும்?

(நமது நிருபர் கு. வி. மா.) —மட்டுவில்நிருபர்

மட்டுவில், ஞாயிறு

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் மீது பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளைத் தொடர்ந்து நாளை ஆரம்பமாகும் வருடாந்த பொங்கல் உற்சவத்தின்போது சென்ற வருடம்போல் ஆலயத்தின் கதவுகள் இம்முறையும் மூடப்படக்கூடுமென்று அறியப்படுகிறது.

எவ்வித வேறுபாடுமின்றி ஆசாரசீலர்களாக ஆலயத்துக்கு வரும் எவரும்உள்ளே சென்று வழிபடலாமென ஆலயத்தின் தற்போதைய தர்மகர்த்தா சமீபத்தில் அறிவித்திருந்தார். அதைத் தொடர்ந்து சிறுபான்மைத் தமிழர்கள் சிலர் ஆலயத்துள் சென்று வழிபட்டனர். இதன் காரணமாக இந்த ஆலயத்தின் இதர தர்மகர்த்தாக்கள். ஆலயக் கதவுகளை சகலருக்கும் திறந்துவிட்டது சரியல்லவென்றும் அதை உடனடியாக மூடிவிடவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டுமென்றும் கோரி சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு மனுவைத் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுவின்மீதே ஆலயக்கதவுகளைப் பூட்டும்படி நீதிபதி உத்தரவு பிறப்பித்திருந்தார். இதே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மற்ருெரு மனுமீது சாவகச்சேரி மாவட்ட நீதிபதி நேற்று ஆலயத்தின் தற்போதைய முகாமையாளருக்கு ஓர் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தார். ஆலயக்கதவுகளை சகலருக்கும் திறந்துவிடக் கூடாது என்பதே இந்த இடைக்காலத் தடை உத்தரவாகும்.

பன்றித்தலைச்சி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம் ஆரம்பமாகும் நாளைய தினமான 16ந் திகதியே இந்த மனுக்கள் மீது விசாரணை செய்வதற்கு ஆலயத்தின் மூன்று தர்மகர்த்தாக்களும் நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

நீதிமன்றத்தில் இப்பிரச்னைக்குத் தீர்வுகாணும்வரை அடுத்து எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப் போவதில்லையென சிறுபான்மைத் தமிழர் சிலர் ஆலோசனை செய்துள்ளனர். வேறு சிலர் இன்று கூடி முடிவு செய்யவுள்ளனர்.

## ''உண்மையில்லை''

புதுடில்லி, மார்ச் 14

ஜம்மு—காஷ்மீரில் ஆட்சி செய்யத் தமகுப் போதிய பெரும்பான்மையிருப்பதாக முதல்வர் திரு. சாதிக் தெரிவித்தார்

தமக்கு ஆதரவு இல்லை என்று காங்கிரஸ்காரர் சிலர் கிளப்பியுள்ள வதந்திகளில் உண்மையில்லையென்று அவர் கூறினர்.

## கடுமையான நடவடிக்கைகளை பொலிசார் எடுப்பார்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

''சமூககுறைபாடுகள் சட்டத்தை மீறுபவர்கள்மீதும் தண்டனைக்குரிய குற்றத்தை கோவில்களில் செய்பவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கையை பொலிசார் எடுப்பார்கள்'' என்று வடபகுதி பொலிஸ் சுப்ரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் இன்று நமது நிருபரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'கோயில்பகுதிகளில் அமைதிக்குப்பங்கம் விளைவிப்பவர்கள் எவராயிருந்தாலும் சரி அவர்களை உடனடி

(2-ம் பக்கம் பார்க்க)

## 'கூப்பிட்டதும் போகவில்லை; ஓடிவந்துகத்தியால்குத்தினர்'

மட்டுவில், சனி

'நாடகம்பார்த்துக் கொண்டிருந்த நானும் மைத்துனரும் இடையில் வெற்றிலை போடக்கடைக்குபோனேம். அப்பொழுது கையில் கிறிஸ் கத்தியை உருவிக்கொண்டு நின்றசிலர் என்னைக்கூப்பிட்டனர். நான்போகவில்லை. உடனே ஓடிவந்து இருமுறை என்வயிற்றில் குத்தினர்கள்'

இவ்வாறு கத்திக்குத்து வழக்கொன்றில் சாட்சியமளித்த பொன்னையா தம்பையா சாவகச்சேரி மாஜிஸ்

(2-ம் பக்கம் பார்க்க)

## ''ஈழநாடு'' பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் **'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

**உதவி வழங்கியோர்:**

| | |
|---|---|
| நேற்றுவரை சேர்ந்த தொகை | ரூபா 4,432-75 |
| பருத்தித்துறை வைத்திய சுகாதார அலுவலக ஊழியரும் அரசினர் ஆஸ்பத்திரி ஊழியரும் | ரூ. 77-16 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார சாரம் — அரசியல் நிருபர்

# மகாவலி மசோதா நிறைவேறிவிட்டது

மகாவலிகங்கையைத் திசை திருப்பும் திட்ட மசோதா இரவுபகலாக இரண்டுநாட்கள் தொடர்ந்து ஆட்சிமன்றத்தில் விவாதிக்கப்பட்டபின் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவை அரசாங்கம் எதிர்பார்த்தபடி விரைவில் நிறைவேற்ற முடியாதபடி நீட்டி முழக்கிப்பேசி நேரத்தைக் கடத்துவதென்ற எதிர்க்கட்சியினரின் நோக்கம் பலிக்கவில்லை. டாக்டர் என். எம். பெரேரா ஐந்துமணி நேரத்துக்கு அதிகமாகப் பேசினார். வலப்பனை எம். பி திரு. ரி. எம். ஹெரத்தும் மணிக்கணக்கில் பேசினார்.

எத்தனைமணிநேரம் பேசுவோம் என்று சொல்வதற்கில்லையென எதிர்க்கட்சியினர் தெரிவித்திருந்தனர். 'ஆட்சிமன்றம் கலைக்கப்படும்வரை பேசிக்கொண்டிருங்கள்'' என்று எதிர்க்கட்சியினரைப் பார்த்து ஆளும் கட்சியினர் கூறியிருந்தனர் ஆமாம் இம்மாதம் 25ந் திகதி ஆட்சிமன்றம் கலைக்கப்படவிருக்கிறது. விவாதத்திற்குப் பதிலளித்துப் பிரதமர் பேசிக்கொண்டிருக்கையில் இதுவே தனது கடைசிப் பேச்சாக இருக்கலாம் என்று குறிப்பிட, 'ஆட்சிமன்றத்தில் கடைசிப் பேச்சா?' என்று எதிர்க்கட்சி அங்கத்தவர் ஒருவர் இடைமறிக்க 'நான் அரசியலில் பிரவேசித்த நாள்முதல் எனது அரசியல் எதிரிகள் சோதிடம் கூறி வருகின்றனர். ஆனால் அவையாவும் பொய்த்துவிடுகின்றனவே'' என்று பிரதமர் பதில் கொடுக்க, இப்படியாகத் தானே தட்டியும் ஒட்டியும் வெட்டியும் அங்கத்தவர்கள் உணவையும், உறக்கத்தையும் மறந்து அடுத்த தேர்தலில் எப்படியிருக்குமோவென்ற அச்சம் அடிவயிற்றில் சில சமயங்களில் புளிகரைத்தது போலிருக்க மகாவலிமசோதாவைப்பிச்சு வாங்கி விட்டனர்.

## கங்கைநீர் வடக்கே திரும்புமா?

மகாவலிகங்கையைத் திசை திருப்புவதைத் தாங்கள் எதிர்க்கவில்லையென்றும் உலகவங்கியின் நிபந்தனைகளுக்குட்பட்டுக் கடன் பெறுவதையே தாங்கள் எதிர்ப்பதாகவும் எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர்.

'நீங்கள் முன்பு உலகவங்கியிடமிருந்து கடன்பெறவில்லையா? திருமதி பண்டாரநாயகா அரசாங்கம் தானே முதலில் உலகவங்கியிடமிருந்து கடன் பெற்றது. இலங்கையுட்பட 110 நாடுகள் அங்கம் வகிக்கும் பொதுஸ்தாபனமான உலக வங்கியிடமிருந்து கடன பெறுமல் வேறு எங்கிருந்து பெறுவது? இந்தப் பொதுஸ்தாபனத்திற்கு நமது நாட்டை எப்படி விற்கமுடியும்? உலக வங்கியிடமிருந்து முதலில் கடன் பெற்றபோது நாடு அதற்கு விற்கப்பட்டு விட்டதா?'' இப்படிப் பல பதிலடிகள் கொடுத்து எதிர்க்கட்சியினரைப் பிரதமர் மடக்கினார்.

சொல்லம்புகளுடன் மட்டும் நிற்காமல் இரு தரப்பினரும் கைகலக்கும் கட்டத்தை, நள்ளிரவில்நெருங்கிய போதுசபைக்காவலர்ஒருவாருக சமாளித்து நமது ஆட்சிமன்றத்தின் மதிப்பைக் காப்பாற்றி விட்டார். ஆனாலும் அடுத்தநாள் நள்ளிரவில் சபைக்கு வெளியே எதிர்க்கட்சியிலுள்ள ஒருவரை ஆளும் கட்சி எம்.பி. ஒருவர் தாக்கியதாகப் புகார் செய்தார் இத்தாக்குதலைப் பார்த்ததாகப் பலாங்கொடைப் பிரதிநிதியான பெண் அங்கத்தவர், சபையில் சாட்சியமும் சொன்னார். கூச்சல், குழப்பம், திட்டுதல் முதலியவைகளுக்கிடையே மசோதா நிறைவேறிவிட்டது.

'மசோதா நிறைவேறிவிட்டாலும் கங்கை வடக்கே திரும்புமா என்ற சந்தேகம் வடபகுதிமக்கள் மனதிலிருக்கத்தான் செய்கிறது. இந்தச் சந்தேகத்தை மசோதா மீது நடைபெற்ற விவாதத்தின் உருவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் காணி அமைச்சரின் பேச்சை ஆதாரம் காட்டி எடுத்துக் கூறியிருக்கிறார்.

ஆட்சி மன்றம் கலைக்கப்படும்போதுதான் அடுத்த பொதுத்தேர்தல் விரைவில் நடைபெற விருப்பதால், இந்த மகாவலி திசை திருப்பும் திட்ட மசோதாவல்ல வேறு எந்த விவாதமாக இருந்தாலும் கூட பிரதிநிதிகள் அதற்கு சூடேற்றி வாக்காளர்களின் கவனத்தை ஈர்ப்பதற்கு முயற்சிசெய்துதானிருப்பர்.

### அறிக்கைகள்

கந்தர்மடத்தில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டமொன்றில் தமிழரசுக்கட்சித்தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசியதாக சில வார்த்தைகளை சில பத்திரிகைகள் பிரசுரித்தன. இதற்கு தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மறுப்பும் விளக்கமும் தெரிவித்து பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்தார். இந்த அறிக்கை வெளிவந்ததும் இதற்கு திரு. செல்வநாயகம் பதில் அறிக்கைவிடுத்தார். அறிக்கைகளும் பதில் அறிக்கைகளுமாக தமிழ் அரசியல் கட்சிகளின் சரித்திரங்களும் சாதனைகளும் கிளறப்படுவது இடையிடையே நடைபெறும் நிகழ்ச்சிதான். என்றாலும் தேர்தல் நெருங்கும்போது இது உச்சக்கட்டத்தையடைகிறது. இதனால் இரண்டு கட்சிகளில் எதற்கு நன்மை; இரண்டு கட்சிகளுக்குமே நன்மையா? நிச்சயமாக தமிழ் மக்களுக்கு நன்மையல்ல.

'ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பார்கள். தமிழர்கள் உரிமைகளை இழந்து சொந்த நாட்டிலேயே சுதந்திரமில்லாமல் சந்தேகப் பிரஜைகளாகவாழ்ந்துவரும் இச்சமயத்தில் கட்சிகள் அதிகரித்து கட்சிப் பிரச்னைகளுக்காக வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடுவது தமிழருக்கு நல்லதல்ல.

தேர்தல் நெருங்கட்டும். இன்னும் எத்தனையோ குற்றச்சாட்டுக்களையும் அறிக்கைகளையும் பார்த்து கேட்டு ரசிக்கலாம்.

பொதுத்தேர்தல் அமைதியாக நடைபெற வேண்டும். வன்முறைச் செயல்களுக்கு இடமளிக்கக் கூடாது. உணர்ச்சியைத் தூண்டி, துவேஷத்தைக் கிளப்பிவிடும் முயற்சியில் அரசியல் தலைவர்கள், கட்சிகள் ஈடுபடாமல் வழிகாட்டினால் தேர்தல் அமைதியாக நடைபெறும். அரசியல் தலைவர்கள் வழிகாட்டுவார்களா? ஆட்சிமன்றத்தில் நடந்த அமளி ஐயம் தருகிறது.

---

# நாவலருக்குப் பின் நமக்கொரு தொண்டன்

நமது நாடு சுதந்திரம் அடைந்ததற்கு பல்வேறுபட்ட அரசியற் தலைவர்கள் காரணர் என்பது நாடறிந்தஉண்மை. இவர்களையெல்லாம் நமது மக்கள் நினைவில் வைத்துக் கொள்வர் என்பதற்கு அவர்கள் தொடர்ந்து செய்துவரும் சேவைகளே காரணமாக அமைய வேண்டியுள்ளது. காலத்தின்கோலத்தினால் இந்தத் தலைவர்களையும் மக்கள் மறந்துவிடுவது சகஜநிகழ்ச்சியாகிவிட்டது. 'நன்றிமறப்பதென்பதுநமது சமூகத்தின் சொத்து' என்ற புதுமொழி இல்லாது போகவேண்டும். அப்போதுதான் நமது பிரச்னைகள் நம்மைவிட்டு நீங்கி நாமும் நமது நாட்டில் நன்மைபெறமுடியும்.

இன்று, நம் மத்தியில் அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் சமுதாயத்தின் மூலவேரான நல்லவற்றிற்குப் பாடுபட்ட பெரியார்களை நாம் நிச்சயம் மறந்துவிடவேகூடாது. சுயமான பிரசாரத்துக்கு இடங்கொடாமல் சமுதாயநலன் ஒன்றையே கருத்தாகக் கொண்டு தொண்டாற்றிய இவர்களாலேதான் நமது சமுதாயம் முன்னேறியுள்ளது.

பிரிட்டிஷ் காலனி ஆட்சியின் போது இந்த நாட்டில் ஆட்சியாளர் மதத்தை கல்வித்தாபனங்களை மூலமாக வைத்தே வளர்த்தனர். பலரும் கல்வி நலன்கருதி-கல்வியினால் உத்தியோகங்களைப் பெறலாம் என்ற உத்வேகத்தில் சுயமதத்தை மறந்து பிறமதங்களைப் பின்பற்ற விழைந்தனர். இக்காலகட்டத்திலேதான் நாவலர் தோன்றி சைவத்தை வளர்க்க கல்வித் தாபனங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயலாற்றினார்.

நாவலர் பணியால் விழிப்புற்ற சைவமக்கள் தொடர்ந்து சைவப்பற்றுடன் வளரஸ்தாபிக்கப்பட்ட இந்து பரிபாலன சபையிற் பிற்காலத்தில் மிகவும் பாராட்டத்தக்க தொண்டுசெய்தவர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள். சைவப்பாடசாலைகள் திரு. இராஜரத்தினம் அவர்களின்நிர்வாகத்தின் கீழ் வளமுற்ற நிலத்துப் பயிரென வளர்ச்சி பெற்றன. அவற்றின்மூலம் சைவமதமும் நிலைபிறழா முறையில் தன்னிறைவுடன் வளரவும் முடிந்தது.

அரசாங்கம் பாடசாலைகளை தன்னுரிமையாக்கும் வரை இந்து பரிபாலன சபையின் கீழ் இயங்கிய பாடசாலைகள் இந்த நாட்டின் கல்விப்பணியில் மிக முன்னேற்றம் கண்டிருந்ததை எவரும் மறுத்துவிட முடியாது. இதற்கு காரணமாக விளங்கியவர் திரு. சு. இராஜரத்தினம் ஆவார். 'இந்துபோட் இராஜரத்தினம்' என்ற பெயரே அவர் மேற்படி சபையுடன் இரண்டறக் கலந்த உண்மைக்கு உதாரணமாகும்.

இப்பெரியார் தமது முதிர்ந்த பராயத்தில் 12-3-70ல் இறைவனடி அடைந்துள்ளார். சைவத்தைப் பேணி, சைவ மக்களின் கல்வி வளர்ச்சிக்குழைத்த அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

---

## 'ஈழநாடு' கிரிக்கெட் புதிர்

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

..........................................

..........................................

கையொப்பம்

---


## வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30, 10-00

பிரிபோயா, போயா 2-30 மணி

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி

நடித்த

### தாய்சொல்லைத் தட்டாதே

(புதிய கொப்பி)


---

## கடுமையான...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாகக் கைது செய்யும்படி உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ராஜகுருவுக்கும், சாவகச்சேரி பொலிஸ் அதிபர் திரு. துரைசிங்கத்துக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்து நாட்களாக கோயிலில் பொலிசார் காவல் புரிந்துவருகின்றனர். இதுவரை காலமும் எவ்வித குழப்பமும் அங்கு நடைபெறவில்லை.''

---

## கூப்பிட்டதும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டிரேட் முன்னிலையில் கூறினார்.

சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்கினராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொண்டவழக்கில், ஒலுமடுவைச்சேர்ந்தபொன்னையா தம்பையா என்பவரை கிறிஸ்கத்தியால் குத்திக்காயப்படுத்தியதாக கற்பலியைச்சேர்ந்த கணபதிப்பிள்ளைகந்தையா, செல்லையா நடேசு ஆகிய இருவர்மீது சாவகச்சேரிப்பொலிசாரால் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. அவர்தொடர்ந்துதனது சாட்சியத்தில்கூறியதாவது:

எனக்கு வல்லிபுரம் தேவராஜாவைத்தெரியும். அவர் என்மைத்துணர். சம்பவதினமான புரட்டாதி 7ந் திகதி கற்பலிக்குஅவர் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அன்றிரவு அவர் வீட்டிற்கு அருகாமையிலுள்ள சாம்பவழி பிள்ளையார்கோவில் வீதியில் நாடகம் ஒன்று நடைபெற்றது. நானும் மைத்துணர் செல்வராஜாவும் நாடகம் பார்க்கச் சென்றிருந்தபோது இச் சம்பவம் நடந்தது'.

எதிரிகளை எனக்கு முன்பு தெரியாது. இவர்கள் என்னை ஏன் இப்படிக் குத்தவேண்டுமென்பதற்கான காரணமும் எனக்கு முதலில் தெரியாது ஆனால் அங்குள்ளவர்கள், எதிரிகளைப் பெயர் சொல்லி அழைத்தபின்புதான் தெரியும்.

மேல் விசாரணை மாஜிஸ்திரேட் வேறொரு திகதிக்கு ஒத்திவைத்தார்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நெற்செய்கை அபிவிருத்தி

## பூமிசாத்திர ரீதியில் புதிய விளக்கம்

— திலகரத்தினம் —

இசைவல்லாளன் இராவணனால் ஆளப்பட்டு குபேரத்தீவென்று அழைக்கப்பட்ட நம் மணித்திருநாடு பண்டைக்காலந் தொட்டு விவசாயத்துறையில் சிறந்து விளங்கிக் கொள்வனவும் கொடுப்பனவும் செய்து செல்வச் செழிப்போடு இந்து சமுத்திரத்தின் மத்தியிலே இலங்கிக்கொண்டிருந்தபடியால் இலங்கையெனப் பெயர் பெற்றது. ஆரியர் இலங்கையில் குடியேறிய காலந்தொட்டு நெற்பயிர்ச்செய்கை இலங்கை மக்களின் பிரதான உணவுப் பொருளுமாகியது. இதனால் அன்றுதொட்டு இன்றுவரை நெற்பயிர்ச்செய்கை இலங்கைமக்களின் பாரம்பரிய தொழிலாக விளங்கி வருகின்றது. அன்று உணவுத் தேவையில் நமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்தோம். ஆனால் இன்று எமது உணவுத்தேவையின் அரைப் பங்கினை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வருகின்றோம். இந்நிலையை அடைய நாம் அன்னியரின் ஆட்சிக்குட்பட்டமையும் ஒரு காரணமாகும். எனினும் இன்று நம் அன்னைநாடு படிப்படியாக முன்னேற்றப்பாதையில் சென்றுகொண்டிருக்கின்றது. இருந்தும் சனத்தொகை அதிகரித்துச் செல்கின்ற விகிதத்தினை நோக்கின் கூடியவிரைவில் தன்னிறைவு பெறுவதென்பது சாத்தியமில்லை. ஆயினும் இங்கு நெற்செய்கைக்குரிய பௌதிக, பண்பாட்டுக் காரணிகள் சிறப்புற்று விளங்குகின்றபடியால் விரைவில் தன்னிறைவைப் பெறலாம் எனப் புவியியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

### பூமிசாத்திர ரீதியில் இலங்கையின் நிலை

இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் பருமட்டாக வட அகலக்கோடு 5—10 பாகைக்கிடையிலும் கிழக்கு நெடுங்கோடு 79-82 பாகைக்கிடையிலும் அமைந்துள்ளது. மத்திய மலைநாட்டையும் தன்னுள் அடக்கிய ஒரு சிறு தீவாக உள்ளது.

இதன் இவ்வமைப்பே இலங்கையின் நெற்செய்கையை பெரிதும் பாதிக்கின்றது. நெல் பிரதானமாக வெப்பப் பிரதேசங்களில் பயிரிடப்படுகின்ற ஒறிசா சற்றீவா (ORIZA SATIVA) என்னும் புல்லினக் கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பயிராகும். இதனல் இப்பயிருக்கு போதியளவு வெப்பம், மழை, ஒருபருவமழை, ஒருபருவ வரட்சி, போதியளவு ஊட்டமுள்ள மண் என்பன தேவைப்படுகின்றன. இக்காரணிகள் எல்லாம் இலங்கையில் அமைந்திருப்பதனல் இங்கு நடைபெறும் நெற்செய்கையை பௌதிகக் காரணிகள் பெரிதும் நிச்சயிக்கின்றன. அவற்றை நோக்குவோம்.

### நெற்பயிருக்கேற்ற சுவாத்தியம்

நம்நாடு மத்திய கோட்டிற்கு அண்மையில் அமைந்திருப்பதனல் ஆண்டுமுழுவதும் 70 பாகைக்கு மேற்பட்ட வெப்பத்தைப் பெறுகின்றது. நெல் மணிகளை விதைக்கும்போதும், அறுவடை செய்யும் போதும் வெப்பம் பெரிதும் தேவைப்படுகின்றது. அத்துடன் சூரியஒளியின் உதவியுடனேயே பயிர்கள் தமக்குத் தேவையான உணவினையும் தயாரித்துக் கொள்கின்றன. அடுத்ததாக நெற்பயிரின் வளர்ச்சிக்குப் போதியளவு நீர் தேவைப்படுகின்றது. குறிப்பாக 5'' நீர் நிலத்தில் தேங்கிநிற்றல் அவசியமாகின்றது. இதனல் 40''க்கு மேற்பட்ட மழை வீழ்ச்சி பெறப்படும் இடங்களில்இப் பயிரைப் பயிரிடுவதுடன் மழைவீழ்ச்சி குறைந்த இடங்களில் நீர்ப்பாய்ச்சல் மூலமும் செய்கை பண்ணக்கூடியதாயும் இருக்கின்றது. நமது நாட்டில் அதிவரண்ட பிரதேசங்கள் மட்டுமே 25-50'' மழைவீழ்ச்சியைப் பெறுகின்றன. ஏனைய பிரதேசங்களெல்லாம் 50'' மேற்பட்ட மழைவீழ்ச்சியையே பெறுகின்றன. ஆகவே மழைவீழ்ச்சியைப் பொறுத்துப் பெரும்பான்மையான பகுதிகளில் நெற்பயிரை விளைவிக்கக்கூடியதாக இருக்கின்றது. இங்கு மேற்காவுகைமழை, மலைத்தடுப்பு மழை, சூருவளி போன்ற மழை என்பன பெறப்படுகின்றன. இப் பரம்பலுக்கும் மலைநாட்டின் அமைப்பே பெரிதும் காரணமாய் அமைகின்றது. மார்ச் தொடக்கம் மேவரை பெரும்பாலும் மேற்காவுகை மழையும் மேதொடங்கி செப்டம்பர்வரை இந்துசமுத்திரத்தின் பரந்த நீர்ப்பரப்பினின்றும் வீசுகின்ற நீரனுப் பொருந்திய தென்மேல் பருவக்காற்றினல் 75''க்கு மேற்பட்ட மழைவீழ்ச்சியும் பெறப்படுகின்றது: இக்காற்று தென்மேல் பிரதேசத்தில் மழைவீழ்ச்சியையும் ஈரத் தன்மையையும் கொடுப்பதுடன் மலைநாட்டின் மறுபுறத்தே வரட்சித் தன்மையையும் கொடுக்கின்றது. டிச-பெப் வரை குறைந்த நீர்ப்பரப்பையுடைய வங்காள விரிகுடாவிலிருந்து வீசுகின்ற வடகீழ்ப் பருவப் பெயர்ச்சிக்காற்றினல் தென்கீழ் பிரதேசமும் வடபிரதேசமும் 25-75'' மழைவீழ்ச்சியினைப் பெறுகின்றன. இவற்றைவிட ஒக்டோபர் தொடங்கியுள்ள காலங்களில் சூருவளியினலும் மழை பெறப்படுகின்றது. பொதுவாகத் தென்கீழ் பிரதேசத்தைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் ஒருபருவ வரட்சியையும், ஒருபருவ மழைவீழ்ச்சியையும் உடையனவாய்க் காணப்படுவதனல் நெற்பயிரை விதைக்கவும் அறுவடை செய்யவும் ஏற்றனவாய் அமைந்திருக்கின்றன. தென்கீழ்ப் பிரதேசத்தில் மழைவீழ்ச்சி பரம்பலாக ஆண்டு முழுவதும் பெறப்பட்டாலும் அங்கு பயிர்ச்செய்கை நடைபெறுகின்றது.

அடுத்து நெற்பயிர் செழித்து வளர்வதற்கு போதியளவு ஊட்டமுள்ள மண் தேவைப்படுக்கின்றது. இப் பயிர் பெரும்பாலும் நீரை உட்கொள்கின்ற பயிராதலால் நீரை உட்புகவிடாமல் மேற்பரப்பில் தேக்கிவைக்கக்கூடிய வண்டல்மண், இருவாட்டிமண், மண் துணிக்கைகள் கலந்த களிமண் என்பன இப்பயிருக்கு சிறந்தனவாய் உள்ளன. மற்றும் இப்பயிர் ஒரு நார்வேர் (Fidrous root) தாவரமாகையால் வேர்கள் ஆழமாகச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படுவதில்லை. அத்துடன் இந்நார்வேர்கள் மூலம் பசளையினைஇலகுவாகவும் பெற்றுவிடுகின்றது. வண்டல் மண்ணிலுள்ள துணிக்கைகளினூடாக இப்பயிரின் வேர்கள் ஊடுருவிச் சென்றுகனிப்பொருட்களைப் பெறுவதற்கு வசதியாய் இருப்பதுடன்பயிர்செழித்து வளர்வதற்கும் காரணமாய் அமைகின்றது. இங்குகூறப்பட்ட மண்ணினங்கள் எல்லாம் பெரும்பாலும் இலங்கையின் எல்லாப்பகுதிகளிலும் காணப்படுகின்றன. குறிப்பாக நதிப்பிரதேசங்களை அண்டிய பகுதிகளில் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன. இதனல் வெள்ளப்பெருக்குக் காலங்களில் இப்பிரதேசங்கள் இயற்கையாகவே வண்டல் மணலினல்பசளையூட்டப்படுகின்றன.

### நெற்பயிருக்கு வாய்ப்பான நிலம்

நிலத்தின் தன்மையைப் பொறுத்தவரையில் நீரைத் தேக்கிவைக்கக் கூடிய தட்டையான சமநிலம் ஏற்றனவாய் இருக்கின்றது. இலங்கையின் சமவெளிகள் எல்லாம் பெரும்பான்மையாகத் தட்டையான சமநிலத்தன்மையைக்கொண்டிருப்பதுடன், எண்ணற்றநதிகளையும் கொண்டிருக்கின்றன. இக்காரணங்களால் இப்பகுதிகளில் நெற்பயிர்ச்செய்கை பெரும்பான்மையாக நடைபெறக்கூடியதாய் இருக்கின்றது. மற்றும் மலைநாட்டில் சிறுபான்மையாக மலைச்சரிவுகளைவெட்டி படிமுறைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் பட்டுவருகின்றது. இங்கு நீரினல் அரிப்பு ஏற்படுகின்றது. இதனல் இம்முறை அதிக பயன்தரக் கூடியதன்று. மேற்கூறியகாரணங்களினல் இலங்கையின் பயிர்ச்செய்கையை பௌதிகக்காரணிகள் நிச்சயிக்கின்றனவென்பதைத் தெளிவாக அறியக் கூடியதாயிருக்கின்றது.

### நெல்லின் வகைகள்

இங்கு மலைநாட்டிலும், தாழ்ந்த பிரதேசங்களிலும் நெல் விளைவிக்கப்பட்டுவருகின்றது என்பதைமுன்னமே கூறினேம். இந்த அடிப்படையில் நெல்லினங்களை மேனிலத்திற்குரிய நெல்லினம் (எல்வி), தாழ்நிலத்திற்குரிய நெல்லினம் என இரண்டு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கலாம். மலைநாட்டில் கைக்கொள்ளப்படும் படிமுறைப் பயிர்ச்செய்கை கடினமானதாகையால் இங்குள்ள மக்கள் குறைந்த பயனைப்பெறுவதற்கு கூடிய உழைப்பை நல்கவேண்டியிருக்கின்றது. தாழ் நிலத்தில்மேற்கொள்கின்றபயிர்ச்செய்கையையும் இரண்டு பெரும் பிரிவுகளாகப்பிரிக்கலாம். அவையாவன: 1. மழையை மட்டும்நம்பிச் செய்யப்படுகின்ற சேனைப் பயிர்ச்செய்கை அல்லது மானவாரி. அடுத்தது 2. மழையையும்நீர்ப்பாய்ச்சலையும்மேற்கொண்டு செய்யப்படுகின்ற ஈரநிலப்பயிர்ச்செய்கை. இன்று இலங்கையில் பெரும்பான்மையான நிலங்களில் மழையை மட்டும் நம்பியே நெற்செய்கை நடைபெறுகின்றது. இதனல் இதைப் பெரும்போகம் அல்லது முன்மாரியெனவும், நீர்ப்பாய்ச்சலை மேற்கொண்டு செய்கைபண்ணப்படும் பயிர்ச்செய்கை சிறுபான்மையாக நடைபெறுவதனல் சிறுபோகம் அல்லது பின்மாரியெனவும் அழைக்கப்படுகின்றது. பெரும்பான்மையான பகுதிகளில் பெரும்போகப் பயிர்ச்செய்கை ஆவணி, புரட்டாதி மாதங்களில் விதைக்கப்பட்டு மாசி, பங்குனி மாதங்களில் அறுவடைசெய்யப்படுகின்றது. சிறுபோகப் பயிர்ச்செய்கை பங்குனி, சித்திரை மாதங்களில் விதைக்கப்பட்டு ஆடிமாதத்தில் அறுவடை செய்யப்படுகின்றது. இருபோகப்பயிர்களின் விளைச்சலைமழைவீழ்ச்சியும், நீர்ப்பாய்ச்சலும் நிச்சயிக்கின்றன. இன்று

[14ம் பக்கம் பார்க்க]

# நானும் ஒரு வாத்தி!

**'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்று கூறும் ஔவையையும், அறநெறி கூறும் வள்ளுவனையும், வீரம் பேசும் கம்பனையும், காலை எழுந்தவுடன் படிப்பு என்று கடமை கூறும் கவிபாரதியையும், 'மலைவாழை அல்லவோ கல்வி' என்று வாயாரக் கூறும் பாரதிதாசனையும் பல மைல்தூரம் சென்று படித்த ஆபிரகாம்லிங்கனையும் கிரேக்கத்தின் அறிவுச்சுடர் சாக்ரடீசையும் வேகமாகப் படி இல்லாவிட்டால் விழுந்துவிடுவாய் என்று எச்சரிக்கை செய்யும் கோர்க்கியையும் சமயம் வளர்த்த நாவலரையும் இசை வளர்த்த விபுலானந்தரையும் வேடிக்கையாகப் பேசும் பெர்னுட்ஷாவையும் எனக்கு முன்னல் இருக்கும் சின்னவாங்குகளில் காண்கிறேன்**

— க. கணேசலிங்கம் —

இயற்கையின் பசுமைச் சிரிப்பு எங்கும் படர்ந்து 'நிற்கிறது. வரிசை வரிசையாக மாணவர்கள் ட்றில் செய்வது போல் சின்னக் குருத்துக்கள் விரித்த புகையிலைக் கன்றுகள் ஒரு புறம், வெங்காயக் கன்றுகளின் சுதந்திர வளர்ச்சி மறுபுறம். வளர்ந்த மண்ணை மறைக்கும் பசுமை இளம் குளிர்மைக் காட்சி. அமைதியான, விவசாயப் புரட்சி கிராமத்து மண் மேடைகளில் நடைபெறுகின்றது 'ஏலேலோ'வுக்குப் பதிலாக எங்கும் என்ஜின்[illegible] தண்ணீர் ஆறாகப் பாய்ந்து இளம் [illegible] அணைக்கும்பொழுது இளமையின் பருவக்கதைதான். அப்படி ஒரு சிலிர்ப்பு!

உயர்ந்த போர்வீரர்களைப் போல் வயல் எல்லைகளில் நிமிர்ந்து வளர்ந்து நிற்கும் நெடும் பனைகளின் காவல், நல்ல பாதுகாவல்.

மலையிலிருந்துவிழும்அருவி போல் மாணவர்கள் நிரை நிரையாக எங்கெல்லாமோ இருந்து அந்தக் கிராமப் பாடசாலையை நோக்கி வரும் [illegible] மனதில் உற்சாக உணர்வை உதயமாக்கும். மனமாசற்று இறைவனை நாடிச் செல்லும் அடியார் திருக்கூட்டம் போல் அறிவை நாடி கண்ணில் ஒளிசிந்த அந்தச் சின்னஞ்சிறிசுகள் வந்துகொண்டிருப்பதைப் பார்க்க, கதிரவனுக்குக்கூட எத்தனை ஆவல்! அவன் தன் தலையை மெதுவாக நீட்டி எட்டிப் பார்ப்பான். இருள் அகலும் பொழுது எங்கும் பிரகாசம் தானே. அது அவனுக்குத் தெரியுமோ என்னவோ!

பாடசாலைக்குப் பக்கத்தே அலைநடனமிடும் குளத்தில் தன் அழகுச் சிறகுகளை சலவைசெய்துகொண்டு பறக்கும் வெள்ளைக்கொக்கும், பச்சைக்கிளிகளும், குயில்களும் மொழி பழக வரும் மாணவர்களிடம் தமக்குத்தெரிந்த மொழிகளைப் பேசிப்பார்க்கும். குயிலுக்குத்தான் இதில்வெற்றி. 'குக்கூ' 'குக்கூ...' மாணவர்களின் குரலும் குயிலின் குரலும் காற்றில் மிதந்து கலக்கும்பொழுது பெயரிடப்படாத ஒரு புதிய ராகம் பிறக்கும். யாழ், குழல் இவற்றைவிட மழலை இனிமையானது தான்.

பிஞ்சுமுகங்கள் சிலசிணுங்கிக்கொண்டே பாடசாலை வாசலில் காலடியைஎடுத்து மெல்ல வைக்கும்.

'வாத்தியார்இவனை அடித்துப் போடாதீங்கோ' ஒரு தாயின் வேண்டுகோள். தானடித்தால் தன் மகனுக்கு நோகாது என்பது அவளுக்குத்தான் தெரியும். பிள்ளையைக் கலைத்து வந்த களைப்புடன் திரும்பும் அவள் தன்கையில் கொண்டு வந்த கம்பை வீசியெறிந்துவிட்டு மகனுக்கு அடிவிழாது என்ற நம்பிக்கையுடன் வீடு செல்வாள்.

(15ம்- பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ஜனதிபதி பாராட்டிய யாழ்ப்பாண மாணவர்!



செல்வன் நஸீர்சுல்தான் வரைந்த ஜனதிபதி கிரியின் ஓவியம். திரு. கிரி கீழே கையெழுத்திட்டிருக்கிருர்

**இந்திய ஜனதிபதி திரு.வி.வி கிரி யாழ்ப்பாணத்து மாணவர் செல்வன் நஸீரை வெகுவாகப்பாராட்டினர்!**

**சமீபத்தில் திரு.கிரி யாழ்ப்பாணத்து க் கு விஜயம்செய்தபோதே அவரின் பாராட்டைப் பெற்ருர். இந்த மாணவர்!**

யாழ். நகர மண்டபத்தில் இந்திய குடியரசு அதிபருக்கு அளிக்கப்பட்ட பொது வரவேற்பு வைபவத்திலேயே அவர் இந்தப் பாராட்டை வழங்கினர்.

யாழ். மத்திய கல்லூரியில் ஜி. ஸி ஈ. உயர் வகுப்பில் பயிலும் பதினறு வயதான செல்வன் நஸீர், இந்திய ஜனதிபதியின் உருவத்தை வரைந்து, அவரிடம் அந்தப் படத்தைக் கொடுத்தார்.

## பாராட்டு

தன்னைப்போலவே-புகைப் படம்பிடித்ததுபோல வரைந்தமாணவரின் ஆற்றலை இரு வார்த்தைகளில் பாராட்டிப் புகழ்ந்துவிட்டு, தன் கையெழுத்தை தனது படத்தின் மீது நினைவாக வைத்துக் கொடுத்தார்.

அவர் அருகே இருந்த இலங்கை நீதி அமைச்சர் அந்தப்படத்தை வாங்கிப் பார்த்துவிட்டு செல்வன் நஸீரைப் பாராட்டிவிட்டு தனது கையெழுத்தையும் அப்படத்தில் எழுதினர்.

## கிறுக்குவார்

சிறுவயது முதலே நஸீர் பேப்பரில் ஏதாவது கிறுக்கிக்கொண்டிருப்பார். அவை கடைசியில் அழகிய காட்சிகளாகவோ, உருவங்களாகவோஇருக்கும்! யாரிடமும் அவர் வரைதல் பாடம் கற்றது கிடையாது!

விஞ்ஞானம் படித்துக் கொண்டிருக்கும் செல்வன் நஸீர், யாழ்ப்பாண நகர பிதாவாகவும் யாழ். மாநகர சபை அங்கத்தவராகவும் பலகாலம் இருந்த முஸ்லிம் பெரியார் குவாஸி எம்.எம். சுல்தானின் புதல்வராவார்.

## லட்சியம்

விஞ்ஞானத்துறையிலேயே உயர்பட்டம் பெறுவதை லட்சியமாகக்கொண்டிருக்கும் செல்வன் நஸீர் கலையை உயிருக்குயிராக நேசிக்கிருர். ஓய்வு நேரத்தில் படம் வரைந்துகொண்டேயிருப்பார்.

கலையையும் விஞ்ஞானத்தையும் இணைத்து, இரண்டுக்கும் சேவைசெய்யத் துடிக்கும் செல்வன் நஸீர் தன் லட்சியப் பாதையில் நிச்சயம் வெற்றிபெறுவார் என்பதில் சந்தேகமில்லை.

-ராஜன்-

## சூரிய காந்தி

- சி. சுதந்திரராஜா -

செங்கதிர் சென்றிடும் திக்கெல்லாம்
சிரித்தே முகத்தைத் திருப்பிடுவேன்
இங்கித மூட்டிடும் வெங்கதிரால்
என்றும் இன்பம் கண்டிடுவேன்.

குமுறுங் கனலைக் கொண்டு மனம்
குளிர நானும் குதூகலிப்பேன்
அமுத மூட்டிடும் ஆதவனின்
அன்பின் அணைப்பில் அகம்நிறைவேன்.

மஞ்சள் வெயிலில் மனந்தளர்ந்தே
மறையும் கதிர்க்காய் நான்அழுவேன்
தஞ்சம் அவனே என மறுநாள்
தலையை தூக்கி நான் மகிழ்வேன்.




## கானகத்துத் தேவதை [9]

— க. கனகலிங்கம் —

அவ்வுணவுப் பொருட்கள் நரமாமிசத்தைக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளதென்பதை அவ்வுணவுப் பொருட்களே பறைசாற்றின. உணவுப் பொருட்களை உண்ண மனமில்லாதவனுய் பொங்கிவரும் பசி மேலோங்காதவாறு அவன்கொண்டு வந்துவைத்த நீர்ப்பானத்தை அருந்தினன். அருந்தியவன் மீண்டும் அறையைச் சோதனையிடலானன். அப்பொழுது 'டங்' கென்று ஓசையெழுந்தது அவன் கால் வைத்த இடத்தில்.

அவ்விடத்தில் நின்றவாறே கையினல் அந்தஓசையெழுந்த அவ்விடத்தைத் தடவிப் பார்க்கலானன். மறுகணம் மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான். அது ஓர் சுரங்க அறையின் கதவாகத்தான் இருக்கவேண்டுமென்று அறிந்துகொள்ளக் கண்ணனுக்கு அதிகநேரம் செல்லவில்லை. உணவு கொண்டு வருபவன் அங்கு வருவதற்குமுன் எப்படியும் இக்கதவைத் திறந்து கொள்ளவேண்டுமென்ற ஆவலில் கையினலும் தனது முழுச் சக்தியையும் பாவித்து கதவை இழுத்தும், தள்ளியும் பார்த்தான். இரும்பினல் செய்யப்பட்ட பொத்தான் போன்ற ஒரு பொருளைக் கண்டு அதையும் அழுத்தினன் 'படங்' என்ற சத்தத்துடன் கதவு உட்புறமாகத் திறபட்டுக் கொண்டது. அங்கு படிகள் கீழ் நோக்கிச் செல்வதைக்கண்டு கொண்டான். முன்பின் யோசியாதவனுய் கடகடவென்று கீழே இறங்கலானன் படிகள் தெட்டத் தெளிவாகத் தெரிவதற்காக அச்சுரங்க அறையில் அங்கொன்று இங்கொன்ருய் தீவட்டிகள் எரிந்தவண்ணமிருந்தன. படிகள் வழியே இறங்கிய கண்ணன் ஓர் அழகிய நந்தவனத்திற்கு வந்து சேர்ந்தான்.

பசியின் கொடூரம் தாங்காது ஓர் மரத்தில் தொங்கிய கனிந்த பழமொன்றைப் பறிக்க முற்பட்டான். அப்பொழுது 'தம்பீ, எங்களைப் பறிக்காதீர்; இப்பொழுது அவன் வரும் நேரமாகிவிட்டது. அதோ தெரியும் அந்தக் கற்பாறையின் கீழ் ஒழிந்து நில்லும் அவன் போனபின் இங்கு வாரும். விபரமாகச்சொல்கின்ருேம். எமக்கு நேர்ந்த இக்கதி உமக்கும் நேராமல் தப்பிக் கொள்ளும் என்றது.

அக்கனி கூறியதுபோல் அவன் அவ்விடத்தைவிட்டு நீங்கிச் சென்று கற்பாறையின்கீழ் ஒழிந்து கொண்டான்.

ஈழத்தின் பண்பை நாட்ட 'ஈழநாடு'
தமிழக தனத்தை ஈட்ட 'தம்பி அன் கோ'

புத்தாண்டில் புது செய்தி!
நாட்டவர்க்கு நற்செய்தி !!

அதிட்ட ஆயிரம் ரூபா சேமிப்பில்
ரூ.1000/- ஆளுக்கு ஓர் ஆயிரம் ரூ.1000/-
ஆண்டுக்கு ஓர் ஆயிரம்

சேருங்கள்

1. வட்டி வருடம் 10 சதவீதம் கொடுக்கப்படும்
இச்சேமிப்பை எப்பொழுதும் எடுக்கலாம்.

2. இத்திட்டத்தில்சேமித்தவர் இறந்தால்சேமிப்புடன்
இனமாகரூ 100உருத்தாளிககு கொடுக்கப்படும்

முக்கிய அறிவிப்பு:

1. ஒவ்வொரு மாதமும் அதிட்டமுள்ள ஆறு ஆட்களுக்கு ஆளுக்கு 20 ரூபா வீதம் கொடுக்கப்படும்.

2. மூன்று மாதத்திற்கு ஒருமுறை அதிட்டசாலி ஒருவருக்கு ஒரு புதிய சைக்கிள் கொடுக்கப்படும்.

அதிஷ்டசாலிகளின் பெயரும் விலாசமும் 'ஈழநாடு' பத்திரிகையில் ஒவ்வொரு மாதமும் பிரசுரிக்கப்படும்.

மறுவிபரங்கட்கு:

தம்பி அன் கோ.,

வண்ணார்பண்ணை :-: யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[பாராட்டுக்கதை]

# மனையறம் இழந்தாள்

# மணமகள் ஒருத்தி

“இவ்வளவும் அங்கு இருந்துவிட்டுத்தான் வருகிறேன். டாக்டர் விசுவலிங்கத்தார் நாளை நான்கு மணிக்கு நேரம் வைத்துவிட்டுப் போயிருக்கிறார். இப்பவோ எப்பவோ என்று கிடக்கிறாள் பாவம்”— மரணப் படுக்கையில் போராடிக் கொண்டிருக்கும் லட்சுமியைப் பார்த்துவிட்டு வந்ததும் வராததுமாகத் தன் மனைவி பார்வதியிடம் இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தார் பரமலிங்கம்.

இதைக் கேட்டுப் பொறுக்காத பார்வதி, ‘பாவம் லட்சுமி வாழ்க்கையில் என்ன சுகத்தைக் கண்டாள். பணக்காரக் குடும்பத்தில் பிறந்தும் கடைசியில் அனாதைபோலச் செத்துக்கொண்டிருக்கிறாளே...’ என இரங்கி வாய்விட்டுச் சொல்லி வருந்தினாள்.

விசுவலிங்க டாக்குத்தரின் கணிப்பு ஒருமுறையும் பிசகியதில்லை என்பதை நன்கறிந்த பார்வதி எப்படியும் நாளை நான்கு மணிக்குள் தன் உயிர்த்தோழி லட்சுமி செத்துப்போவாள் என்ற உண்மையை உணர்கையில் அவள் கண்கள் பனித்தன.

சிறுவயதிலிருந்தே தன்னோடு கூடிப் படித்து, கூடி விளையாடி ஆருயிர்த் தோழியாக வாழ்ந்துவிட்ட லட்சுமி, சாகுமுன் இன்னுமொரு தடவை அவளின் உயிர்முகத்தைக் காணத் துடித்தாள் பார்வதி. அடுப்பிலே காய்ந்துகொண்டிருக்கும் பாலைக் கணவன் பரமலிங்கத்தைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு ஏழாவது தடவையாக லட்சுமி வீட்டிற்கு விழுந்தடித்துக்கொண்டு பறந்தாள்.

அப்போது இரவு எட்டு மணியிருக்கும். கிராமத்து நாய்கள் சில நாற்சந்தியில் கூடிநின்று ஊளைச் சமாவொன்றை நடத்திக் கொண்டிருக்கையில் சுடலைக் குருவி ஒன்று லட்சுமி இறக்கப் போகும் செய்தியை ஊர்ஜிதப் படுத்தவோ என்னவோ வீடுகளின் மேலால் வானத்தில் கீச்சிட்டவண்ணம் பறந்து கொண்டிருந்தது.

இந்த அமங்கலமான சூழ்நிலையை உணர்ந்த பார்வதி மிகவும் வருந்தினாள். அவளின் மனம் மிகவும் வேதனைப் பட்டுக் கொண்டிருந்த அதேவேளையில் இன்னுமொரு ஜீவனின் மனமும் தவிப்புக்கு ஆட்பட்டு அமைதியிழந்து கொந்தளித்துக் கொண்டிருந்தது.

அக்காள் ஒருத்தியின் மூத்தபெண்ணின் ருதுசோபன விழாவிற்கு மூன்றுநாள் லீவு பெற்று குடும்பத்தோடு கொழும்பிலிருந்து வந்திருந்த அக்கவுண்டன்ட் தணிகாசலத்தின் மனம், பக்கத்து வீட்டுப் பார்வதியும் பரமலிங்கமும்பேசிக்கொண்டிருந்ததைக் கேட்கையில் தவியாய்த் தவித்தது. இந்த அமங்கல நிகழ்ச்சிகள் சாய்மனைக் கட்டிலில் படுத்திருந்த தணிகாசலத்தின் காதுகளுக்கும், மனத்திற்கும் இதமற்றதாய் சோகமாய் ஒலித்தன.

செத்துப்போக இருக்கும் லட்சுமியின் நிலைக்குத் தானும் காரணமாக இருக்குமோ என அவரின் மனத்திலே எழுந்த உளைச்சல்களை இனம் கண்டுகொள்ள முடியாத நிலையில் தவித்தார் தணிகாசலம். லட்சுமியின் நிலைக்குத் தானே முழுக்க முழுக்கக் காரணம் என ஒருகணம் தன்மேல் பழியைப் போட்டு தவித்து வருந்திக்கொண்ட தணிகாசலம், மறுகணம் எனக்கும் அவளுக்கும்தான் ஒருதொடர்பும் இல்லையென்று இருபது வருடங்களுக்கு முன்பே கோடே தீர்ப்பளித்து விவாகரத்து வழங்கிவிட்டிருக்கும்போது வீணாக நான் மட்டும் ஏன் இல்லாததையும் பொல்லாததையும் கற்பித்து மடைத்தனமாக என் மனத்தை அலைக்கழிப்பான்?’ என முனகிக் கொண்டு சிறிதுநேரம் கண்ணை மூடிக் கொண்டு சும்மா இருக்க முயன்றார்.

ஆனால் அவர் மனம் மட்டும் சும்மா இருக்காமல் கடந்தகால நிகழ்ச்சிகளை அவர் முன் கொணர்ந்து அவருக்குச் சினிமா காட்டியது. நிமிட நேரத்தில் அந்த நிகழ்ச்சிகளுக் ஆட்பட்டு ஒருவித உணர்ச்சிக்கு உட்பட்டு அந்த உணர்ச்சியின் வதையிலே சிறிது கலங்கியவராய் சாய்மனைக் கட்டிலைவிட்டு எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

ஐம்பது வயதைத் தாண்டிக்கொண்டிருக்கும் தணிகாசலம் வாழ்க்கையில் இப்படியொரு வதையிலே சிக்குண்டு அழுந்தியதே கிடையாது ஆனால் இன்று மட்டும் அவர் என்றுமில்லாதவாறு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பதற்கு முக்கிய காரணம்...

லட்சுமியைக் கைப்பிடித்துத் தாலிகட்டி, அன்றைய தினமே முதலிரவைக்கூடக் கழிக்கமுன் கல்யாணவீட்டுப் பந்தலோடு இரு குடும்பங்களுக்கிடையில் கிளம்பிய அந்தஸ்துப்பூசலால் பிரிந்து, பின் கோடேறி இலகுவில் விவாகரத்துப்பெற்று இருபது ஆண்டுகள் கழிந்தபின். இன்று மட்டும் முதன்முதலாக அவரின் உணர்ச்சிகள் கிளறப்பட்டு எப்போதோ மறுக்கப்பட்டுவிட்டலட்சுமியின்பால் விழித்துக்கொண்டமைக்குக்காரணம், ‘நாளை நான்கு மணிக்குள் அவள் செத்துப்போவாள்’ என்ற செய்திதான் - அதுவும் அனாதையாகச் செத்துப் போகிறாள் என்ற கொடூரமான செய்திதான்.

காலமெல்லாம் மறுக்கப்பட்டிருந்த ஒருவர் திடீரென்று ஒருநாள் இந்த உலகத்தைவிட்டுப் போகப் போகப்போகிறார்என்றநிலைவரும் வேளையில்தான் அவரைப்பற்றிய நினைவுகள் தலைகாட்டி நிற்பதுபோல மரணப்படுக்கையில் புரண்டு கொண்டிருக்கும் லட்சுமியைப பற்றி இருபதுவருடங்களுக்குப்பின் முதன்முதலாகச் சிந்திக்கத் [illegible] தணிகாசலம்.

எத்தனை கொடுமை இழைத்த கணவனானாலும், “நீ செத்த அன்றுதான் நான் வாய்விட்டுச்சிரிப்பேன்” என்று அவனை வீட்டைவிட்டுத் துரத்திவிட்ட மனைவி ஒருத்தி, அவனைக் கொலைக்குற்றம் ஒன்றிற்காக தூக்கிலிடும்போது அந்த மனைவியின் குடல்கூட கலங்கிப்போகிறதே... அதே நிலையில்தான் தணிகாசலம் இருந்தார்.

‘லட்சுமியை வேண்டாம்’ எனச் சட்டமூலம் தள்ளிவிட்டபோதும், அவளை மறந்து இருபது வருடங்களாகிவிட்டபோதும், இப்போது நாற்பது வயதுகூட நிரம்பாத லட்சுமி இந்த உலகைவிட்டு எப்போதைக்குமாகப் போகப்போகிறாள் என்று அறிகின்றபோது தணிகாசலத்தின் கண்கள் சிறிது கலங்குகின்றன. ஏதோ ஒரு குற்ற உணர்வு அவர் மனத்தை ஆட்கொண்டு அலைக்கழித்துக்கொண்டிருந்தது: தான் செய்துகொண்டது சரியோ பிழையோ என்று தீர்மானிக்க முடியாத நிலையில் நின்று தவித்தார் தணிகாசலம்.

லட்சுமிக்கும் தனக்கும் விவாகரத்து வழங்கியதினத்தன்று தானும் தன் குடும்பமும் அந்த வெற்றியை குலதெய்வங்களுக்கு வேள்விபோட்டும், உறவினர்களுக்கு விருந்துபடைத்தும் கொண்டாடிய நிகழ்ச்சிகளை நினைத்துக்கொண்ட தணிகாசலத்திற்கு இப்போது அவைகள் அர்த்தமற்றவைகளாகவே தோன்றின.

## (2)

மு. திருநாவுக்கரசு

இருபது வருடங்களுக்கு முன் ஒருநாள்.

மங்கலமான தினம்.

நாதஸ்வர வித்துவானின் மோகன ராகத்தில் திருமணத்திற்கு வந்திருந்த அத்தனை விருந்தினர்களும் தம்மை மறந்து லயித்திருக்கிறார்கள். ஊரே அதிசயிக்கும் வண்ணம் டாம்பீகமாக நடந்துகொண்டிருந்த அந்தத் திருமண இல்லத்தில் பலதரப்பட்ட பிரமுகர்கள் வீற்றிருந்தனர்.

பெரிய பெரிய உத்தியோகத்தர்கள், எஞ்சினியர்கள், டாக்டர்கள் தம் இஷ்டமித்திர குடும்ப சமேதராய் பட்டுவேட்டி, பட்டுச்சேலைகள் படபடக்க ஒருபுறம் அமர்ந்திருக்கிறார்கள்-இவர்களெல்லோரும் பெண்வீட்டாரின் உறவினர்களும் நண்பர்களும்.

வான்மழையையே நம்பி வாழும் குடுமிக்காரக்கமக்காரர்களும் அவர்களின் குடும்பங்களும் தங்களிடம் உள்ள உடைகளில் உயர்ந்தது எனக் கருதி டிரங்குப் பெட்டிக்கடியில் வைத்திருந்த உடைகளை உடுத்தி வந்து அந்தப் பணக்காரப் பெண்வீட்டாரின் நாகரீக உடைகளோடு போட்டியிட முடியாதுபின்வாங்கிஒதுங்கி மறுபுறம் வீற்றிருக்கிறார்கள். இவர்களெல்லாம் மாப்பிள்ளை தணிகாசலத்தின் பகுதியினர்.

இந்தப்பகுதியினர் அமர்ந்திருந்த இடங்களைப் பார்க்கப் பார்க்க லட்சுமியின் தந்தை சாம்பசிவத்திற்கு கோபம் பற்றிக்கொண்டுவந்தது “இந்த அழகான திருமணப்பந்தலை சேர்ட் போடாத வெற்றுடலோடும், குடுமிகளோடும் வந்திருந்து கெடுத்து மானத்தை வாங்கிறாங்களே இந்தக்காட்டுமிராண்டிகள்” என முணுமுணுத்துக்கொண்டவர் ‘கோவில்பிரசாதத்தை காகம் எச்சில் படுத்திவிட்டதாக’ எண்ணிப் பொருமலானார்.

சாம்பசிவம் ஒரு சிங்கப்பூர் பென்சனீயர். சிங்கப்பூரிலேயே மனைவியை இழந்தபின் றிட்டயராகிவிட்டு தாய்நாடான இலங்கைக்குப் பெருஞ்செல்வங்களோடு சிறுமி லட்சுமியுடன் வந்தவர், கொண்டுவந்த பணத்தைக்கொண்டு மாளிகை போன்ற வீடொன்றையும் கட்டி நிலபுலனகளையும் வாங்கிவிட்டுத் தன் ஒரேயொரு மகளான லட்சுமிக்குப் பருவம் வந்ததும் மாப்பிள்ளை தேடிக்கொண்டிருந்தபோதுதான் சாம்பவத்தின் கண்களுக்கு அக்கவுண்டண்ட் தணிகாசலம் தென்பட்டார்.

‘கிராமத்துக் கமக்காரர்கள் அநாகரீகத்தின் சின்னங்கள்’ என்ற எண்ணம்கொண்டிருந்த சாம்பவம் கிராமத்து மக்களோடு ஒன்றாது தனித்து வாழ்ந்தபோதும் தான் வெறுக்கும் குடுமிக்காரக் கமக்காரனின் மகன் தான் தணிகாசலம் என்ற உண்மை சாம்பசிவத்தாருக்குக் கசந்தபோதும், அவன் வகித்துக்கொண்டிருக்கும் பதவி அவருக்கு இனித்தமையாலேதான் தணிகாசலத்தைத் தன் மகளுக்குத் திருமணம் பேசிப்போனார்.

கல்யாணம்முடிந்தவுடனே தணிகாசலத்திடமிருந்து அவன் குடுமிக்கார உறவினரைப் பிரித்துவிடும் திட்டத்தை உருவாக்கி வைத்திருந்தவர், மகள் கழுத்தில் தாலி ஏறியதுதான் தாமதம் தன் திட்டத்தை உடனே அமுல் நடத்தலானார்.

மாப்பிள்ளை வீட்டாரின் பேச்சுக்களுக்கெல்லாம் சாம்பசிவம் கிண்டலாகவும்கேலியாகவும் ஏளனமாகவும் மறுமொழி சொல்லி அவர்களைத் தலைகுனியச்செய்யும் படலத்தை ஆரம்பித்திருப்பதை மணவறையில் வீற்றிருந்த தணிகாசலம் கவனிக்கத் தவறவில்லை.

‘வட்வீ வான்டெட் இஸ் த பிறைட் குறூம், நொற் ஹிஸ் பா பேறியன்ஸ்...’ என ஆங்கிலத்தில் தணிகாசலத்தின் குடுமிக்காரத் தந்தை கனகசபையைப் பார்த்து கேலியாகத் தன் சிங்கப்பூர் நண்பர் ஒருவரிடம் சாம்பசிவம் சொல்லிக்கொண்டிருப்பதைக் கண்ணுற்ற தணிகாசலம், வெகுண்டு அந்த இடத்தில் என்ன செய்வது எனத் தெரியாது விழித்துத் தவித்துக் கொண்டிருந்தான்.

அப்போது அவனுக்கொரு ஞானோதயம் உதித்தது. ‘தனக்கெளியது சம்பந்தம் என்று சொல்கிறார்களே. அது எத்தனை உண்மை பட்டு வேட்டியும் பருத்தி வேட்டியும் ஒன்றாக மதிக்கப்பட்டுவரும் காலம் வரை இத்தகைய திருமணங்கள்

[12ம் பக்கம் பார்க்க]

---

சின்னஞ்சிறுகதை

## கேட்கவேண்டிய இடம்

இ. நா.

நெஞ்சிலே சஞ்சலத்துடன் அந்த மனிதன் நடந்துகொண்டிருந்தான். அவனது வாழ்வில் நடந்துள்ள யாவும் அவனை வாட்டி வதக்கின. சஞ்சலத்தின் கோட்டத்தை அடக்கி ஒடுக்குவது எப்படி?

கடலை நோக்கினான். ஆயிரம் ஆயிரம் அலைகளை உருட்டி விதிப்பாவைபோல விளையாடும் கடல் அவனது சஞ்சலத்தை வாய்விட்டுச் சொல்வது போலவே அமைந்தது. உயர்ந்த மலையிலே ஊற்றெடுத்துத் துள்ளி விளையாடும் வெள்ளருவி அவனது கண்ணீரா? காவிலே கூவும் குயிலின் குரல் அவனது ஏக்கத்தின் பிரதிபலிப்பாகிவிட்டதே!

வீதியிலே செல்லுகிறான். எத்தனை மனிதர்கள் இவர்களெவருமே ஆறுதலற்றவர்களாக இல்லையே? எங்கோ எங்கோ எதற்கெல்லாமோ அலைகின்றனர். உலகமும் தானும் ஒன்றாகவே சஞ்சலப்படுகையில் இந்த உலகத்தில் இருந்துகொண்டு யான் எப்படிச் சஞ்சலத்தை நீக்குவேன்? இப்படியொரு கேள்வி நெஞ்சிற் பிறந்து வளர்ந்தது.

கண்களை மூடிக்கொண்டு —ஒருபடி வெளியிலே ஏகாங்கி சிந்தனையோடு சிறிதுநேரம் இருந்தான். பின்னர் தனக்குமட்டும் கேட்கக்கூடிய விதத்தில் “அமைதியே தரக்கூடிய இடமுண்டா?” என்ற கேள்வியைக் கேட்டான்.

“உண்டு;” -இப்படி ஒருகுரல் கேட்டது.

“எங்கே” என்றான் மனிதன். “உன்னிடத்திலேதான் அந்த இடம் உண்டு”- இவ்வாறு மறுகுரல் பேசியது.

‘என்ன என்னிடத்திலா? எனக்கு விளங்கவில்லையே! நீ யார் பேசுவது?”

“நான்தான் உன்மனம்.”

“என்ன என் மனமா?” இது மனிதனின் கேள்வி.

“ஆமாம்; உன்மனம்தான் நான். அமைதியைத் தேடி அலைந்தாயே மடையா! உன்மனமாகிய என்னிடம் கேட்டால் நீ அமைதியை எப்போதோ பெற்றிருப்பாய்”

மனிதன் அமைதி பெற்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரடையார் நோன்பு

-- உமாகுமாரி. குமாரசுவாமி --

காலமெல்லாம் நம் நாட்டுப் பெண்கள் விதம் விதமான நோன்புகளை நோற்று வந்திருக்கிருர்கள். மதுசூதனனை மணாளனுகப் பெற சூடிக்கொடுத்த சுடர்க்கொடி நோற்ற மார்கழி நோன்பு, வனிதையர் விரும்பும் வரலட்சுமி விரதம், கன்னியர் போற்றும் கௌரி விரதம், காரடையார் நோன்பு, ஆதிரை நோன்பு என்பன முக்கியமானவைகளாகும்.

வரலட்சுமி நோன்பன்று பெண்கள் கையில் சரடு கட்டிக்கொள்கிருர்கள். கேதார கௌரி நோன்பிலும் கன்னியர் கையில்தான் கங்கணம் கட்டிக்கொள்கிருர்கள். ஆதிரை நோன்பில் கன்னிப் பெண்கள் காலமெல்லாம் கவலையில்லாமல் வாழத் தக்க கணவனையடைய வேண்டிக் கையில் மஞ்சள் கயிறு கட்டிக்கொள்கிருர்கள். பெண்களின் கழுத்து கணவனுக்குமட்டுமே உரியது என்பதால் தெய்வச் சரடுகளைக்கூட அவர்கள் திருக்கழுத்தில் இடுவதில்லையாம்.

நம் அன்னையர் நோற்ற காரடையார் நோன்பிற்கே தனி மகத்துவம் உண்டு. துரதிஷ்டவசமாக பெருமை வாய்ந்த அந்த நோன்பைப் பற்றி நம்மில் பலர் அறியவில்லை. மாசியும் பங்குனியும் கூடும் நன்னளில் காட்டுப் பயிராகிய காராமணியையும் அரிசிமாவையும் கலந்து அடைதட்டி, மஞ்சள் கயிற்றில் மலரும் மஞ்சளும் புனைந்து ''அம்மா! உருகாத வெண்ணெயும் ஓரடையும் வைத்தேன் ஒரு காலும் என் கணவன் என்னைப் பிரியாதிருக்கவேண்டும்'' என்று வணங்கி, ஆண்டுக்கொரு முறை நம் அன்னையர் தங்கள் திருக்கழுத்தில் சரடுகளைப் பூட்டிக் கொள்ளும் நோன்பு காரடையார் நோன்பு ஒன்றுதான்.

இப்படிப்பட்ட புனிதம் வாய்ந்த நோன்புகளை ஏனோ நம் பெண்கள் மறந்துவருகிருர்கள். அதனுல்தானே என்னவோ நம்மவரின் முகங்களில் தெய்வீகக் களையைத் தேடவேண்டியிருக்கிறது. நம் அன்னையரிடம் கொழுந்துவிட்டெரிந்த அந்த தெய்வீகக் கனலை இன்று நம் பெண்களிடம் காண முடியவில்லையே! நம் அன்னையர் தாங்கள் நோற்ற நோன்புகளினுல் தங்களைப் புனிதப்படுத்தி வாழ்வாங்கு வாழ்ந்ததுடன் பிறந்த பொன்னுட்டையும் வாழவைத்தார்கள். இதையறியாத நம் பெண்கள் புதுமைப் பெண்ணைச் சிருஷ்டித்த பாரதியாரையே பதறவைக்கும் அளவுக்கு நாகரிகத்தின் உச்சியை எட்டிப் பிடித்து பழமையின் பெருமைகளை அலட்சியப் படுத்துகிருர்கள். என்னே இவர்களின் பேதமை! மஞ்சளையும் குங்குமத்தையும் மகத்தான பொக்கிஷங்களாகக் கருதிய நம் அன்னையரின் மனநிலைக்கும், தாலிச் சரட்டை அணிந்தாலும் எங்கே தங்கள் நாகரிகத்திற்கு இழுக்கு வந்துவிடுமோ என்று நினைக்கும் இன்றைய நங்கையரின் மன நிலைக்கும் தான் எத்தனை வித்தியாசம்.

பெண் வாழ்ந்தால்தான் மண் வாழும் நம் நாடு வாழும். அதற்கு நம் அன்னையர் வாழ்ந்துகாட்டிய மகத்தான, இலகுவான வழி நோன்பிருந்து மனதையும், உடலையும் தூய்மைப்படுத்துவதாகும். இதோ மாசியும் பங்குனியும் கூடும் நன்னுள் நெருங்குகிறது. நம் அறியாமைகள் எல்லாவற்றையும் ஆழப் புதைத்துவிட்டுக் காரடையார் நோன்பை நோற்போம். காலம் எல்லாம் பிரியாத காதல் கணவனைக் கைப்பிடித்து வாழ்வாங்கு வாழ்ந்து வீட்டையும் நாட்டையும் வளப்படுத்துவோம்.

## முதல் பாடம்

விட்டுக்கொடுக்கும் மனம்தான் பெரியதியாகம். வீட்டைத் துறப்பது, செல்வத்தை வழங்குவது, உயிரைக் கொடுப்பது இவைகளும் தியாகம்தான். ஆனுல் அன்பானவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழும் தியாகம்தான் பெரியதியாகம். விட்டுக்கொடுக்கும் அந்தப் பெருந்தன்மை இல்லாவிட்டால் கணவன் மனைவிகூட வாழ முடியாது. எவ்வளவு அறிவு இருந்தாலும் போரும் பிணக்கும் வளருமே தவிர அன்பும் அமைதியும் வளர முடியாது. அதனுல் கணவனும் மனைவியும் கற்க வேண்டிய முதல்பாடம் விட்டுக்கொடுப்பதுதான்.

-மு.வ.

# பெண் எனும் பொறுப்பு!

—நீலா—

பொதுவாகக் குடும்பம் என்னும் கோவிலிலே பெண் என்பவள் தீபம் என்னும் ஒளியை ஏற்றி, தன்னைச் சார்ந்தவர்களை மட்டுமல்ல, அக்கட்டுக்கு உட்படாதவர்களையும் ஒளிவெள்ளத்துள் ஆழ்த்துவதில் மெழுகுவர்த்தியென ஒளிர வேண்டும். மெழுகுவர்த்தி எவ்வாறு தன்னை அழித்து ஒளியைப் பரப்புகிறதோ, அவ்வாறு அதற்கு ஒப்பான பெண்ணும் தன்னை அழிப்பதில் முன்னேடியாகத் திகழ வேண்டும்.

தனக்கென ஒரு குடும்பத்தை அமைத்துக் கொண்டதும் அதுவரை பெண் எப்படியிருந்தாலும்சரி, இதன் பின் தன் அபிலாஷைகளை அநேகமாகக் கட்டுப்படுத்தி தனக்கென வாழ்வதை ஓரளவுக்காவது மறந்துவிடத்தான் வேண்டும்.

முந்தைய காலமல்ல இது! இன்று பாரதியார் பாடி வைத்துப்போன பல சுதந்திரங்களும் பெண்ணுக்கு நிரம்ப உண்டு. ஆனுல் அதைக் குறுக்குவழியில் பயன்படுத்துவதைத் தவிர்த்து நேரானபாதையில், நேர்மையான செய்கைகளுக்கு இட்டுச் செல்லும் வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு குடும்பத்தின் திறவுகோலே பெண்தான். அவள் சரியாக நடந்தால்தான் குடும்பம் சிறக்கும். எனவே குடும்பத்திற்கு வழிகாட்டியாக அமையவேண்டிய பெண், தன் ஒவ்வொரு செய்கையிலும், பேச்சிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம்.

மற்றவர்களைக் கட்டுப் படுத்திக்கொள்ள நினைக்கும் பெண், அதற்குமுன் தன்னையே கட்டுப்படுத்தப் பழக வேண்டும்.

குடும்பம் சீராக ஒருவரையறைக்கும், நியதிக்கும் உட்பட்டு அமைய வேண்டுமென சட்ட திட்டங்களை உருவாக்கும்போது, முதலில் அதை அமைக்கும் பெண்ணே, அதற்குக் கட்டுப்பட்டு, உணர்ந்து நடந்து வழிகாட்டியாக இயங்க வேண்டும். அப்படியன்றி நம்மை நாம் மறந்து நடக்கமுயன்ருல், நம் முயற்சியே நம்மைக் கேலிப் பொருளாக்கி விடுவது மட்டுமல்ல, மற்றவர்கள் கணிப்பில் மிகமிகத் தாழ்ந்தும் விட ஒவ்வொரு செய்கையும் காரணமாக இருந்துவிடும்.

பெண் ஏற்றுக்கொள்ளும் ஒவ்வொரு பணியும் புனிதமாகவும், அதேநேரம் நேர்மைக்கும், சத்தியத்திற்கும், மனிததர்மத்திற்கும் கட்டுப்பட்டதாகவும் அமைய [illegible] [illegible] றவர்களின் உணர்ச்சிகளையும் தன்மையையும் புரிந்து கொள்ளும் சக்தி கூடுதலாக உண்டு. அப்படிப்பட்ட சக்தி கொண்ட பெண்ணுனவள் அதை நன்முறையில் பயன்படுத்தி மனிதர்களுக்கேற்றவாறு நடப்பதை ஏன் விரும்புகிருளில்லை? அடக்குவதால் ஆற்ற முடியாத கருமத்தை அன்பால் ஆற்ற முடியும் என்பதை மறந்துவிடக் கூடாது!

''பெண்ணே! நீ யார்? எந்த நிலையில் இருக்வேண்டியவள்'' என்பதை எந்நேரமும் நினைவில் நிறுத்திக் கொள்ளவேண்டும். அந்நினைவு பணிவுடன் மற்றவர்களை உணர்ந்து நடந்து கொள்வதற்கு முன்னேடியாக இருக்க முடியும்.

பணமோ, அல்லது வசதி நிறைந்த மகிழ்வான வாழ்க்கையோ உங்கள் நல்ல பண்பையோ குணத்தையோ மாற்றுவதற்குக் காரணமாக இருந்துவிடக்கூடாது. தற்பெருமை நம்மை நாமே மறந்துவிடுவதற்குக் காரணமாக அமைந்துவிடும்.

ஆண்டவன் படைப்பில் அனைத்தும் சமம். எனவே மனிதரிடையே உயர்வு-தாழ்வு, ஏழை-பணக்காரன், படித்தவன்- பாமரன் என்ற பேதங்களுக்கு இடமில்லை. உயர்வென்பதும் தாழ்வென்பதும் மனிதன் தன் சுயநலத்திற்காக அமைத்துக் கொண்ட விதிமுறை— அடக்குமுறை. நாம் அதற்கு அடிமைப்பட்டு நம்மையே மறந்து மனிதரிடம் பேதங்காட்டி நடந்துகொள்வதென்பது எம்மிடமுள்ள சுயநலத்தையும் அற்பத்தனத்தையும் காட்டுவதாகத்தான் அமையும். நாளடைவில் மனிதரின் வெறுப்புக்காளாகி ஆணவப் படுகுழியில் வீழ்ந்து அழிவென்னும் தீயிலே வெந்துபோவதற்கு வழிவகுக்கப்பட்டுவிடும்.

குடும்பம் எனில் தன்குடும்பம் மட்டுமல்ல; பணியாற்றும் ஒவ்வொரு இடமும் குடும்பம்தான் - கோவில்தான். அங்குள்ள ஒவ்வொரு மனிதரும் நம் மனிதரே. பெண் என்பவள் தன் கணவன்— தன்குடும்பம்— தன் குழந்தை எனும் தனித்துவமான கூண்டுக்குள்; அடைந்துவிடக்கூடாது. அக்கூண்டுக்கு வெளியே வந்து மற்றவர்களையும் அறிந்து, உணர்ந்து நடந்துகொள்ளத்தான் வேண்டும். அது மட்டுமா?

நீயும் உன் குடும்பமும் வாழ்ந்தால் மட்டும்போதும் என்ற மனப்பான்மையை அகற்றி, உன் குடும்பம் வாழ்வதற்காக மற்றவர்களை நோகவைப்பது தவறு என்பதை உணர்ந்து நடக்கப் பழகிக்கொள்ள வேண்டும்.

விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வெற்றிக்கு வழிகோலும். பொறுமையும், அன்பும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் வெற்றியின் இரகசியம் என்பதை மறந்துவிடலாகாது!

## வெல்ல ரொட்டி

**சமையல்பகுதி**

கோதுமைமாவு -2சுண்டு
நீர் -1 1/2 சுண்டு
வெல்லம் -3/4 ரூத்தல்
ஏலக்காய் -சிறிதளவு

நீரில் வெல்லத்தைப் போட்டு கொதிக்கவைத்து அதில் தேங்காய் துருவலையும் கொட்டிக் கிளறிவிட்டு ஏலக்காய் பொடியைப் போடவும். இறுகிய மாவை இறக்கிநெய் தொட்டுத் தேய்த்துப் பிசையவும். பின்னர் தேசிக்காய் அளவு சிறு உருண்டைகளாக உருட்டிக் கொள்ளவும்; வாழை இலையில் எண்ணெயைத் தடவி போளியைப்போல் ஓர் உருண்டையை வைத்துத் தட்டவும். தோசைக் கல்லை மெல்லிய நெருப்பில் வைத்து நெய்யைத் தடவி தட்டிய ரொட்டியை எடுத்து இலையுடன் கவிழ்த்து இலையை சுடுத்துவிடவும். சுற்றிலும் நெய்யை விட்டு இருபுறமும் வேகவிட்டு எடுக்கவும். மாலை தேநீருடன் உண்ணச் சிறந்தது.

- சுசி



தயாரிப்பு:

குணம்

புன்னகை பூவையர்க்கு
பொன்னகை வேண்டும்!
உத்தரவாதமுள்ள



தங்க, வைர
நகைகள்

உறுதியும்நுட்பமும் வினைத்திட்பமும் வாய்ந்தவை

ராணி ஆபரண மாளிகை

224, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

இன்றைக்கே விஜயஞ் செய்யுங்கள்

நன்றும் நகைகளை வாங்குங்கள்!

MANAGER: A. KARAPUTUGALA

''லைடன்'' LEYDEN
தயாரிப்புகள்
★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரி சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ கால்மேஸ் (Nylon & Cotton)

லைடன் காமென்ஸ்

74A, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்

போன்: 330

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழம் பெரும் நடிகருடன் ஒரு பேட்டி

# கலை அரங்கம்



# அற்புதம் நிகழ்த்திய 'நாடக யுவராஜ்'

**"ஈழத்து நாடக உலகில் சமீபத்தில் பழம்பெரும் நடிகர்கள் இருவர் 'அற்புதம்' நிகழ்த்தினர்கள். 'நடிகமணி' வைரமுத்து, 'சந்திரமதி'யாகத்தோன்றி'அற்புதம்' செய்ய 'நாடகயுவராஜ்' சி.ரி. செல்வராஜ் மற்றெரு அற்புதத்தை நிகழ்த்தினர்:"**

**ஆயிரம் தடவைக்கு மேல் அரிச்சந்திரனாக மேடையேறி சக்கைபோடு போட்ட 'நடிகமணி' சமீபத்தில் 'சந்திரமதி'யாகத் தோன்றி நடித்த 'அற்புதம்' நிகழ்ந்தபோது, ஈழத்து நாடக உலகில் இன்னெரு 'அற்புத'மும் நிகழ்ந்தது.**

'நடிகமணி' வைரமுத்து 'அரிச்சந்திர'னாக வரும்போது எப்படியிருப்பாரோ, அதேபோன்று, அவருக்கு ஈடு கொடுக்கும் விதத்தில் அன்றைய தினம் 'அரிச்சந்திர'னாகத் தோன்றி 'அற்புத'த்தை நிகழ்த்தினர் —

பழம்பெரும் நாடக நடிகரான 'நாடகயுவராஜ் சி. ரி. செல்வராஜ்!

உடுவில் திறந்தவெளியரங்கில், 'நடிகமணி' சந்திரமதியாக நடிக்க, அரிச்சந்திரனாக 'நாடகயுவராஜ்' சி. ரி. செல்வராஜ் சமீபத்தில் நடித்தார்.

உணர்ச்சித் துடிப்பையும், உயரிய நடிப்பையும் வெளியிட்டு லட்சோப லட்சம் ரசிகர்களைத் தன் தனித்தன்மைவாய்ந்த நடிப்பால் கவர்ந்த 'நடிகமணி' வைரமுத்துவின் 'அரிச்சந்திர' பாத்திரத்தைப் பல வருடங்களுக்குப்பின் அன்று சி. ரி. செல்வராஜ் செய்தபோதிலும், ரசிகர்களின் இதயங்களில் 'நடிகமணி'யைப் போன்று ஓர் இடத்தைப் பெற்றுக் கொண்டுவிட்டார்!

'நடிகமணி'யும், 'நாடகயுவரா'ஜும் ஈழத்து நாடக உலகின் இரு கண்கள் என்பதனை அன்றைய நாடகத்தைப் பார்த்தவர்கள் ஒத்துக்கொள்ளத்தான் செய்திருப்பார்கள்!

## 'நடிகமணிக்கு ஈடுகொடுத்தார்'

''சி. ரி., சி. ரி'' என்று நண்பர்களாலும், ரசிகர்களாலும் செல்லமாக அழைக்கப்படும் சி. ரி. செல்வராஜ் ஈழத்து பழம்பெரும் நடிகர்கள் வரிசையில் சேர்க்கக் கூடிய திறமையும், ஆற்றலுமிக்கவர்!

அப்போது தமிழகத்தில் பிரபலமடைந்திருந்த எம். எம். மாரியப்பா, எஸ். பிச்சையப்பா, எம். எம். சிதம்பரநாதன் போன்றவர்களுடன் சேர்ந்து நடித்த பெருமையும் 'சி. ரி.'க்கு உண்டு!

அவர்களுடைய நடிப்புக்குச் சோடைபோகாமல், ஈடுகொடுத்து நடித்தார்!

இலங்கை போக்குவரத்துச்சபையில் 'டிக்கட்' பரிசோதகராக இப்போது கடமையாற்றும் கலைஞர் 'சி. ரி.'யை சமீபத்தில் சந்தித்து நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்தேன்.

பழகுவதற்கு இனியவரான 'நாடகயுவராஜ்' பழையகால நாடகங்களையும், அன்று தொடக்கம் இன்றுவரையான நாடக நிகழ்ச்சிகளையும் என்னிடம் மனம்விட்டுக் கூறினர்.

## 'செல்வராஜ்' நாடகப் பெயர்

செல்லத்தம்பிதான்' 'சி. ரி.'யின் தந்தையார்! 1925-ம் ஆண்டு பிறந்தார். தந்தையார் இவருக்கு வைத்த பெயர் திருச்செல்வம். ஆனல், 'திருச்செல்வம்' என்ற இவருடைய பெயர் நாடக உலகில் எடுபடாது என்று இவருக்கு 'செல்வராஜ்' என்ற பெயரைச் சூட்டினராம், ஈழத்து நாடக உலகமேதை ஒருவர்;

அவர் சூட்டிய பெயரினுல்தான் என்னவோ, ''சி. ரி'' இன்று ஈழத்து நாடக உலகில் மின்னிக்கொண்டிருக்கிருரோ?

'செல்வராஜ்' என்ற அந்த அதிர்ஷ்ட பெயரைச் சூட்டியவர், பழம்பெரும் நடிகர்களுக்கெல்லாம் ஆசானுக்கு ஆசானக விளங்கிய 'புரபசர்' கே. சரவணமுத்து அவர்கள்தான்!

முல்லைத்தீவில் பிறந்த 'சி. ரி,' மூன்று வயதில் தாய். தந்தையர் பிரிந்து போய்விடவே தமது பெரியம்மாவுடன் யாழ்ப்பாணம் வந்தார்.

யாழ். மத்திய கல்லூரியில் 6-ம் வகுப்புவரை பயின்றவர். பின்னர் தன் கல்வியை வண்ணை விவேகானந்தா வித்தியாசாலையில் தொடர்ந்தார்.

இப்பாடசாலை 'பெற்றுர் தின விழா'வில் 'பாதுகா பட்டாபிஷேகம்' என்ற நாடகத்தில் 'சிரி' முதன் முதலாகப் பரதனாகத் தோன்றி நடித்து 'சபாஷ்' வாங்கினர். இந்நாடகத்தைப் பழக்கியவர் புரபசர் சரவணமுத்து.

## சரவணமுத்து ஐயாவை மறக்கமாட்டேன்

''என்வாழ்நாளில் சரவணமுத்து ஐயா அவர்களை என்றுமே நான் மறக்க மாட்டேன். 'சாந்தி நிலையம்' என்ற நாடகப் பாடசாலையை ஆரம்பித்து, முறைப்படி நடிப்புச் சொல்லித் தந்த மேதை அவர். கொழும்பில் ஸ்ரீலங்கா சுபோத விலாஸ் என்ற நாடகசபையில் சரவணமுத்து ஐயா அவர்களும், கலையரசு சொர்ணலிங்கம் அவர்களும் ஏராளமான நாடகங்களை அரங்கேற்றியுள்ளார்கள்'' என்று தன் நாடகக் குருவின் பெருமையை தன்னை மறந்து அடுக்கிக்கொண்டு போனர் 'சிரி'!

எடுப்பான குரல் சிரிக்கு இருக்கிறது. எந்தப் பாத்திரமானுலும் கச்சிதமாகச் செய்துவிடும் ஆற்றலும் அவருக்கு உண்டு!

அழகாகப் பாடுவார்; எத்தனை மணி நேரமென்றுலும் கேட்டுக் கொண்டிருக்கலாம்!

'போர்' மட்டும் அடிக்காது.

'பவளக்கொடி', 'ஸ்ரீவள்ளி', 'குலேபகாவலி' 'தூக்குத் தூக்கி', 'பாமா விஷயம்', 'அசோக்குமார்,' 'அம்பிகாபதி', 'ஞான சௌந்தரி', 'அல்லி அர்ச்சுன', 'கண்ணகி', 'லலிதாங்கி' போன்ற பல நாடகங்களில் கதாபாத்திரமேற்று நடித்து பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் இதயங்களில் இடம் பெற்றிருக்கிருர்.

ஈழத்தின் மூலை முடுக்கெல்லாம் இவர் நாடகங்கள் மேடையேற்றப்பட்டு ரசிகர்களின் அமோக பாராட்டைப் பெற்றிருக்கிறது.

இவருடைய மகன் மகாதேவனும் இவரைப் போலவே அருமையான நடிகர்! கதாநாயகனுக பல நாடகங்களில் நடித்துள்ளார். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?

## சாகும்வரை நடிப்பேன்!

**'சாகும் வரை நடித்துக் கொண்டேயிருப்பேன். கலையையே நான் எல்லாவற்றிலும் பார்க்கப் பெரிதாகமதிக்கிறேன்' என்று பெருமையோடு சொல்லிக் கொள்ளும் சி.ரி,—**

**பழம் பெருமை வாய்ந்த நாடகக் கலையை பேணிப் பாதுகாத்து வரும் சிலரில் ஒருவர்!**

— பாமா ராஜகோபால்

---

அரியாலை சனசமூக நிலையத்தாரின்

# 'நல்லதம்பி' கூத்து வரவேற்கத்தக்க முயற்சி

''பித்தாபிறைசூடி!..'' என்று பழங்கால 'அண்ணவி' மாரின் சுருதியில் 'வணக்கம்' கேட்கிறது; தவில்முழங்குகிறது. இரண்டு பையன்கள் - வேட்டி அணிந்து துண்டு போட்டவர்கள்- பழைய காவியேறிய வேட்டியொன்றைத் திரையாகப் பிடித்துக்கொண்டிருந்தவர்- 'சரசர' வென்று வேட்டியைச் சுருக்கிக்கொண்டு ஓட—

இரண்டு பேர் சந்தனம், குங்குமம். விபூதியை உடல் முழுவதும் அப்பி ஈஸ்ட்மன் கலர் ஆசாமிகளாகத் (தோளில் அல்லது தலையில்?) பெற்றேமாக்ஸ் வெளிச்சத்துடன் நிற்கிருர்கள்,

''தேவ தேவ தேவராஜ...'' என்று கதறிக்கொண்டு தேவேந்திரன் மேடைக்கு வருகிருர். அவரைத் தொடர்ந்து,

''நாகரீகக் கோமாளி வந்தேனையா!...'' என்று கணீரென்று ஒலித்துக்கொண்டு, இரண்டுகால்களையும் சொடக்கிக்கொண்டு பொம்மைக் குதிரையில் வருகிருர், ஓர் (கஷ்டமாக) ஐந்தடிமனிதர்...

(சனங்கள்- பொதுமகா ஜனங்கள் சிரிக்கிருர்கள்.) 'பளா! பளா!! நீங்கள் யார்?... ..., எங்கே வந்தீர்கள்?...-தேவேந்திரன் 'ரிஸ்ட் வாட்சைக்' கடைக்கண்ணுல் கவனித்துக்கொண்டே கேட்கிருர்.

''பளாபளா! நாங்கள் அரியாலையூர்!''... என்கிருர் கோமான். தொண்டை கட்டி அண்ணவியிடம் [illegible] வாங்கிக்குடிக்கிருர். மேடையிலிருந்தே ''புறிச [illegible] வெளியே வெற்றிலைக்காவியைத் துப்புகிருர் (சனங்கள் சிரிக்கிருர்கள்) 'எதற்கு வந்தீர்கள்?' என்று தேவேந்திரன் கேட்கும்போது அண்ணவியார் தேவேந்திரனின் முடியைச் சரிசெய்துவிடுகிருர். இப்படியாக ஆரம்பிக்கிறது அண்மையில் அரியாலை சனசமூக நிலையத்தார் அளித்த 'நல்லதம்பி'யின் பகுதியான 'மது ஒழிப்புக்'கூத்து முதல்முயற்சி. தமிழரின் பழங்கலைகள் மறைகின்றன என்று கவலுறும் சமயத்தில் வரவேற்கத்தக்க முயற்சி.

தவிலின் நாதத்தைவிட தவில்காரரின் தலை ரசிப்பதற்கு ஜோராக இருக்கிறது—ஆட்டம்!

எல்லா விஷயத்திலும் பழமைக்கு மெருகூட்டி [illegible] தொண்டையில் நம்பிக்கை வைக்காமல் 'மைக்'கைப் புகுத்தியது ஒரு குறை! கோமாளியாக வந்து மதுவிலக்குப் பிரச்சாரம் செய்த 'வெள்ளை' தனபாலசிங்கம் பல வார்த்தைகளை விளங்க முடியாமல் 'யக்' குரலில் உச்சரிப்பது இன்னெரு குறை. தேவேந்திரனுக நடித்த திரு. என். எஸ். லோகேஸ்வரன் எல்லை மீறிக் 'கொப்பி' பார்ப்பது மூன்ருவது குறை. அண்ணவியாராக பி. கணேஷரத்தினமும், நாரதராக பரமநாதனும் சோடை போகாமல் நடிக்கிருர்கள்.

கூத்து என்ற ரீதியில் முதல்முயற்சி, அதுவும்காந்தியவாத மது ஒழிப்பு முயற்சி என்ற ரீதியில் தயாரிப்பாளர்களின் முதுகில் ஓங்கி ஒரு 'ஷொட்டுக்' கொடுக்கலாம்.

— கேரிஜ —

---

பேராதனை


## பல்கலைக்கழகத்தில் வேல்ஆனந்தன் குழு

இன்று பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நடைபெறும் தமிழ்ச் சங்கவிழாவில் ஈழத்தின் பிரபல நாட்டியக்கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரின் முழுநேர நாட்டிய நிகழ்ச்சி சிறப்பு அம்சமாக இடம் பெறுகிறது. வேல் ஆனந்தனின் சிரேஷ்ட மாணவியும் பிரபல நர்த்தகியுமான குமாரி பத்மினி நடராஜா உட்பட குமாரி ஜெயராணி கணேசன், செல்வி நளாயினி இராசதுரை, சந்திரகலா செல்வரத்தினம், ஸ்ரீதேவி சிவரத்தினம், விஜயசகோதரிகள் மலர், மாலினி, சாந்தி கௌரி நடராசா, பவளராணி பரராசசிங்கம் ஆகியோர் நாட்டிய நிகழ்ச்சியில் பங்கெடுக்கிருர்கள். நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளை பல்கலைக்கழக தமிழ்ச் சங்கத்தின் தலைவரும், விவசாயத்துறை பட்டதாரி மாணவனுமாகிய ஆனந்த ஜெயசேகரம் பூர்த்தியாக்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதகுலத்தின் மபெரும் பாய்ச்சல்

கொடிநாட்டும் வீரர்



ஈகிள் தரை இறங்கிய செய்தி கிடைத்த உடன் விண்வெளி வீரர்களின் வீடுகளில் மகிழ்ச்சி கரைபுரண்டோடியது திருமதி ஆல்டிறின் இதைப்பற்றி கேள்விப் பட்டதும் 'என்னல் இதை நம்பவே முடியவில்லை'' என்று ஆச்சரியப்பட்டார்.

கட்டிலின்மீது வரைபடங்களையும், உலகப் படங்களையும் வைத்துக்கொண்டு சந்திரப் பயணத்தை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த ஆம்ஸ்ட்ரோங்கின் துணைவியார் 'நல்லது நல்லது, நல்லது' என்று கூறியபடி கட்டிலில் துள்ளிக் குதித்தார். பிரமிப்பூட்டும் சம்பவம் என்று திருமதி கொலின்ஸ் அதிசயப்பட்டார்.

சந்திரத் தரையிலிருந்து 70 மைல் உயரத்தில் கொலம்பியாவில் வலம் வந்து கொண்டிருந்த கேணல் கொலின்ஸுடன் தொடர்பு கொண்ட கட்டுப்பாட்டதிகாரிகள் 'அமைதிக்கடலில் ஈகிள் இருக்கிறது' என்று தெரிவித்தார்கள்.

'ஆம், நான் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்தேன். பிரமாதம்' என்று கொலின்ஸ் பதிலளித்தார்.

கட்டுப்பாட்டு நிலையத்தினர் குதூகலத்துடன் சந்திர வீரருக்கு அறிவித்தார்கள் 'இங்கு இந்த அறையில் ஏன் உலகம் முழுவதும் புன்முறுவல் பூத்த முகங்களே காணப்படுகின்றன என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள்' என்று.

'அவர்களில் இருவர் இங்கும் இருக்கின்றனர்' -அமைதிக்கடல் தளத்திலிருந்து பதில் வந்தது.

'கட்டளைக் கலத்திலிருக்கும் என்னையும் மறந்து விடாதீர்கள்' என்றார் கேணல் கொலின்ஸ்.

ஆம்ஸ்ட்ரோங் அமைதியான

## சந்திரப்பயணம் 11

## -பேனு-

மனிதர் என்று பேர் போனவர். ஆனல் நிலா வாகனம் சந்திரனில் இறங்கிய வேளையில் அவர் எவ்வளவு தூரம் அதிர்ச்சியடைந்திருந் தார் என்பதை அவரது இருதயத் துடிப்புக் காட்டியது. அவரது இருதயத்தின் சாதாரணத் துடிப்பு நிமிஷத்திற்கு 77 ஆகும் ஆனல் இறங்குவதற்கான ரொக்கட் தீர்க்கப்பட்டபோது அதன் வேகம் நிமிஷத்துக்கு 110 ஆக அதிகரித்தது. கலம் சந்திரத் தரையில் இறங்கிய போது அவரது நாடித்துடிப்பு 156வரை ஏறியது. ஆனல் தரை இறங்கிய சில நிமிடங்களில் இருவீரர்களும் சகஜநிலைக்கு வந்து விட்டார்கள். சந்திரனில் பூமியிலிருந்ததைவிட எடை குறைந்தவர்களாய் இருப்பதில் கஷ்டமொன்றுமில்லையென்று ஆம்ஸ்ட்ரோங் கூறியபோது கட்டுப்பாட்டு நிலையத்தில் அவர்களின் உடல் நிலைபற்றி மிகவும் அக்கறையோடு கவனித்துக் கொண்டிருந்த டாக்டர் சார்ல்ஸ் ஏ. பெரி மிகவும் மகிழ்ச்சியடைந்தவராகத் தலையை ஆட்டிக் கொண்டார்.

### அபதிருக்கு தகவல்


கலம் தரை இறங்கிய சற்றைக்கெல்லாம் . 'நாஸா' அதிபர் டாக்டர் பெயின் வாஷிங்டனில் அதிபர் நிக்ஸனுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, பின் வருமாறு தெரிவித்தார்.

'அதிபர் அவர்களே, ஈகிள் அமைதிக்கடலில் தரை இறங்கி விட்டது என்பதையும் நமது வீரர்கள் பத்திரமாக இருப்பதோடு சந்திரனில் ஆராய்ச்சியில் ஈடுபட ஆயத்தமாகிருர்கள் என்பதையும் 'நாஸா' குழுவின் எல்லோரது சார்பிலும் தங்களுக்குத் தெரிவிப்பதில் பெருமையடைகிறேன்'

சந்திரக்கலத்தின் கருவிகளை பரிசோதித்த பின்னர் ஆம்ஸ்ட்ரோங்கும்கேணல்ஆல்டிரினும் திட்டமிட்டதற்கு முன்பதாகவே தரையில் இறங்குவதென்று முடிவு செய்தனர்.

வீரர்கள் தங்கியிருந்த கூடத்தில் பவன அமுக்கத்தை மாற்றி அமைப்பதில் சிரமம் ஏற்பட்டதால் வீரர்கள் சந்திரத் தரையில் இறங்குவதற்காக வெளியில் வருவது சற்றுத் தாமதமாயிற்று. கூடத்திலிருந்த பிராணவாயு முழுவதும் குழாய் வழியாக அப்புறப் படுத்தவேண்டியிருந்தது. இது முடிந்ததும் வெளிவருவதற்கான கதவைத் திறந்தார்கள். கலத்தில் பொருத்தப்பட்டிருந்த 9 படிகளைக் கொண்ட ஏணியின் உச்சியில் அமைக்கப்பட்ட தாழ்வாரத்திற்கு ஆம்ஸ்ட்ரோங் மெதுவாக வந்தார்.

'ஹூஸ்டன்! நான் தாழ்வாரத்தின்மீது நிற்கின்றேன்' என்று அவர் அறிவித்தார். பின்னர் ஏணிவழியாக இறங்கத் தொடங்கினர் இரண்டாவது படிக்கு இறங்கியதும் ஒரு விசையை இழுத்துவிட்டார் உடனே கலத்தில் ஒரு பக்கத்திலிருந்து ஒரு கருவி வெளியில் வந்தது. அதில் பத்திரமாக வைக்கப்பட்டிருந்த டெலிவிஷன் காமிரா ஆம்ஸ்ட்ரோங் சந்திரத் தரையில் முதல் அடிவைப்பதை உலகத்துக்கு படம் பிடித்துக் காட்டத் தயாராய் இருந்தது.



அமைதிக்கடல் பகுதியில் நிலாவாகனம் தரைஇறங்கியபொழுது அங்கு சீதோஷ்ணம் பூஜ்யநிலையில் இருந்தது. சூரிய ஒளிபடாத இடங்களில் குளிர் அதிகமாகவிருந்தது.


சந்திரனில் 14 நாட்களுக்கு நீடிக்கும் இரவு வேளையில் குளிர் 280 பாகைவரை குறைந்துவிடுகின்றது. பூமியில்போன்று பகல் வெப்பத்தை தேக்கி வைக்கும். கார்ற்றுமண்டலம் அங்கு [illegible] வில் குளிர் அதிகம் அதுபோல் பகல் வேளைகளில் சந்திரனின் வெப்பம் 280 பாகைவரை அதிகரிக்கின்றது.

### சந்திரஉடை

இவ்வாறு மனித உடலுக்கு பரிச்சயமற்ற வெட்ப தட்பநிலைகளுக்கு ஏற்றாற்

# அம்புலித் தரையில் ஆம்ஸ்ட்ரோங்கின் அடிச்சுவடு

போல் சந்திர வீரர்களின் உடைகள் தயாரிக்கப்பட்டிருந்தன. இந்த உடைகள் வீரர்களின் பாரத்தைவிட அதிக பாரமுடையவை இவைகள் காற்றழுத்தம் கொண்டவைகளாக இருந்ததுமட்டுமின்றி காற்று இல்லாத சூழ்நிலைகளில் நடமாடுகையில் உடல் பாதிக்காதபடியும் தீவிரகுளிர், தீவிர உஷ்ண நிலைகளிலும், விண்கொள்ளிகளின் தாக்குதல்களிலும் பாதுகாப்பளிப்பவையாகவும் அமைக்கப்பட்டிருந்தன. இந்த உடைகளைப்போட்டுக்கொண்டுவீரர்கள் [illegible]மது தலை[illegible] அங்குலத்துக்குமேல் முடியாதது பே[illegible] முழங்காலுக்கு கீழே நீட்டவும் முடியாத[illegible] ருலும் நடப்பதற்கு[illegible] வதற்கும், கருவி[illegible] தோ[illegible]டுவதற்கு[illegible] களைஉபயோகிப்பத[illegible] லாவகமாகபயன்ப[illegible] தாகஇவை அமைக்[illegible] ருந்தன. ஒவ்வொ[illegible]



அப்பலோ-11 வீரர்கள் ஆம்ஸ்ட்ரோங்கும், ஆல்டிரினும்நிலா தரையில் நடமாடிய சுவடுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் பூமியில் 185 ருத்தல் பாரம்கொண்டது. இரு வீரர்களும் வீட்டிலிருந்து புறப்படும்போது ஒவ்வொருவரும் சுமார் 165 ருத்தல்பாரம் இருந்தார்கள். ஆனுல் சந்திரனில் இறங்கியதும் தனித்தனியே 58 ருத்தலுக்குச் சற்று அதிகமாகத்தான் அவர்களின் பாரம் இருந்தது. இந்த உடைகளும் அவைகளின் பாகங்களும் பிளாஸ்டிக், செயற்கை ரப்பர், செயற்கைச் சணல், தங்கம், வெள்ளி உட்பட பல்வேறுவகையான உலோகங்கள் ஆகியனவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு உடையிலும்மின்சாரம், தண்ணீர், பிராணவாயு சாதனங்கள் பொருத்தப்பட்டிருந்தன. ஒருவிசிறி, குளிர் சாதனம், இருமுனைதொடர்புக்கான ரேடியோ ஆகியவையும் பொருத்தப்பட்டிருந்தன. வீரர்கள் பேசாமலிருந்தால் கூட இந்த ரேடியோ அவர்கள் உடல் நிலை, கருவிகளின் நிலை போன்றவற்றை கலத்திலுள்ள கருவிகளுக்கு அறிவித்து அங்கிருந்து பூமிக்கு அஞ்சல் செய்துகொண்டிருந்தன.

## மிகநிதானமாக ...

ஆம்ஸ்ட்ரோங் ஒவ்வொரு அடியையும் மிகநிதானமாக எடுத்துவைத்து இறங்கினுர் "ஏணியின் அடிக்கு வந்துவிட்டேன், சந்திரக்கலத்தின் கால்குமிழ் சட்டங்கள் தரையில் ஓர் ஈர் அங்குலம் தான் பதிந்திருக்கின்றன. தரை ஒரே தூசிமயமாகத் தெரிகின்றது. நான் இறங்கப்போகிறேன்" இவ்வாறு ஆம்ஸ்ட்ரோங் கூறினுர்.

அடுத்த விநாடியே அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

## வரலாற்று நிகழ்ச்சி

ஆம். யுக யுகாந்திரமாக வானத்தை அண்ணாந்து பார்த்து சந்திரனை இளம் பெண்களின் குளுமையான வதனங்களுக்கு ஒப்புவமை காட்டி பேதலித்துக் கொண்டிருந்த இந்தச் சாதாரண மனிதனின் சுவடே பட்டறியாத அந்தப் புனித மண்ணின்மீது ஆம்ஸ்ட்ரோங்கின் காலடி பதிந்துவிட்டது. அப்பொழுது இலங்கைநேரம் காலை 8 மணி 26 நிமிடம் 20 விநாடி.

'ஒருமனிதனின் சிறுகாலடி தான் இது. மனிதகுலத்துக்கோ இது ஒரு ராட்சத பாய்ச்சல்'. என்ருர் ஆம்ஸ்ரோங்.


சந்திரத் தரையில் முதல் அடிவைத்தமுதல்மனிதனின் வாயிலிருந்து பிறந்த முதல் வார்த்தைகள் இவை. ஆம்ஸ்ரோங் மேலும் சொன்னுர்.-

மேற்பரப்பு மென்மையாகவும், புழுதி படிந்தும் காணப்படுகின்றது. எனது காலால் இதை ஏற்றித் தள்ளமுடியும். தூளாக்கப்பட்ட நிலக்கரிபோல் எனது சப்பாத்தின் அடியிலும் பக்கங்களிலும் அப்பிக்கொள்கின்றது. ஓர் அங்குலத்தின் எட்டில்ஒரு பகுதிதான் நான் நகர்கிறேன். ஆனுல் எனது காலடிகளையும், சுவடுகளையும் மணற்றரையில் பார்க்க முடிகின்றது. நடமாடுவதில் கஷ்டமே இல்லை. பூமியில் நிறைகுறைந்த நிலையில் வசிப்பதற்கு பயிற்சி எடுத்தபொழுதைவிட இங்கு நடமாடுவது இலகுவாக இருக்கிறது, நிச்சயமாகவே நடமாடுவது கஷ்டமாயில்லை.

ஆம்ஸ்ட்ரோங் சந்திரத் தரையில் நடமாடியபடி புகைப்படங்கள் எடுத்தார், மண் மாதிரிகளையும் சேகரித்தார். அவர் இறங்கிய 30 நிமிடங்களின் பின்னர் ஆல்டிறினும் சந்திரத் தரையில் இறங்கினுர்.

முதலில் இரு வீரர்களும் மிகக்கவனமாகவே நடமாடினர்கள். ஆனுல் மிக எளிதாகவும் மிதப்பது போலவும் சந்திரத்தரையில் நடமாட முடியும் என்பதை விரைவில் உணர்ந்துகொண்டார்கள்.

தங்களைத் தவிர வேறு ஆள் நடமாட்டமில்லாத உலகமொன்றில் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் இருந்தஇடத்துக்கு கிழக்கே தொடுவானத்தில் சூரியன் உதயமாகிக்கொண்டிருந்தான். சூரிய வெளிச்சம் மிகப்பிரகாசமாக சந்திரத் தரையில் விழுந்துகொண்டிருந்தது. காற்ருே, நீர்த்தன்மையோ, பரந்த வெளியில் தூசிப்படலமோ இன்மையால் சூரியனின் பிரகாசத் தன்மை அங்கு பூமியில் போன்றுகுறைவதில்லை.



கருவிகளைப்பொருத்துகிருர்கள்

## கொடிநாட்டினர்.

சந்திரக்கலத்தின் கால்களில் ஒன்றில் சொருகி வைக்கப்பட்டிருந்த அமெரிக்க கொடியை வீரர்கள் இருவரும் எடுத்து சந்திரத் தரையில் நாட்டினுர்கள்.

காற்று இல்லாமையால் ஒரு வயர் கம்பியின்மூலம் அக்கொடி பறப்பதுபோல் விரித்துவிடப்பட்டிருந்தது.

வீரர்கள் இருவரும் மிக நிதானமாக அங்குமிங்கும் நடமாடி மண்மாதிரிகளையும் பாறைத்துண்டுகளையும் சேகரிக்கத்தொடங்கியதுடன் தங்களுடன் எடுதுச்சென்றிருந்த கருவிகளையும் சந்திரத்தரையில் பொருத்தினர்கள். சந்திரத்தரையில் உண்டாகும்அதிர்ச்சிகளை பூமிக்கு தெரிவிக்கும் சிறிய அளவிலான சீஸ்மிக் கருவியைப் பொருத்தினுர்கள். அது உடனடியாகவே இயங்கத் தொடங்கியது.

லேஸர் கதிர்களை பூமிக்கு பிரதிபலித்தனுப்பும் ஒருகருவியையும்பொருத்தினுர்கள். இந்தக்கருவியின் பிரதிபலிப்பு சமிக்ஞைகள்மூலம் பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான தூரத்தை துல்லியமாக அளவிடமுடியுமென் கருதப்பட்டது.

கேணல் ஆல்டிரின் நிலவில் இறங்கி சில விநாடிகளுக்குள் மெல்லிய அலுமினிய சுருள்தகடு ஒன்றை சூரியனை நோக்கியவாறு நாட்டினர். சூரியக் கதிர்களினின்றும் வீசுறும் அணுமூலங்களைக் கவர்ந்து கொண்டுவருவதற்கான கருவி இது. சுவிஸ் ஆய்வுக் கூடம் ஒன்று இதனை ஆராயவிருந்தது.

நிலாத்தரையில் வீரர்கள் இருவருக்கும் பணிக்கப்பட்டிருந்த வேலைகளில் மண் மாதிரிகளைச் சேகரிப்பதே பிரதானமாகும். சந்திரனைப்பற்றி பல நூற்ருண்டுகளாக இருந்துவரும் அபிப்பிராயங்களைப்பற்றி இந்த மண்மாதிரிகளை ஆராய்வதில் விஞ்ஞானிகள் ஒரு முடிவுக்கு வரமுடியும்என்று நம்புகிருர்கள். சந்திரன் நமது பூமியிலிருந்து பிரிந்து சென்றிருந்தால் நிலவிலிருந்து கொண்டுவரப்படும் பாறைத்துண்டுகள் அதை உறுதிப்படுத்தக்கூடும். அல்லது அது ஒரு பெரிய விண் கொள்ளியாயின், அதன் பாறைத்துண்டுகளில் பூமியிலுள்ள பாறைத்துண்டுகளில் காணப்படுவதைவிட வித்தியாசமானபொருட்கள்இருக்கவேண்டும்.

சந்திரனில் இறங்கிய அப்பலோ-11 வீரர்கள் இருவரும் அங்கு கடைசியாக மேற்கொண்டவேலை நிலாத் தரையைக் குடைந்து சிறு குழாயை செலுத்தி நிலாவாகனத்திலிருந்த பாவிக்கப்பட்ட வாயுக்களை அதன் மூலம் அப்புறப்படுத்தியதாகும். இந்தக் குழாயை சந்திரத்தரைக்குள் செலுத்துவது எவ்வளவு கஷ்டம் என்பதை கேணல் ஆல்டிரின் தொலைக்காட்சியில் காட்டினுர்.

ஆம்ஸ்ட்ரோங்கும், கொலின்ஸும் இறங்கிய இடம் அப்பலோ திட்டநிபுணர்களால் ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டிருந்த ஐந்து இடங்களில் ஒன்ருகும். ஆளில்லா லூனு ஓர்பிட்டர் கலங்கள்மூலம் எடுக்கப்பட்ட படங்கள் மூலம்இந்தஇடங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. சந்திரனின் பூமியை நோக்கிய பகுதியில் சந்திர மத்திய ரேகையின் குறுக்கே இந்த இடங்கள் அமைந்துள்ளன. சந்திரனில் அதிக பிரயாசை எடுக்காமல் இறங்கவும் பூமியுடனுன தொடர்புகள் இலகுவாக இடம்பெறவும் இந்த இடங்கள் வசதியாகவிருக்கும் என்றுஎதிர்பார்க்கப்பட்டது. நிலாத்தரையில் வீரர்கள் இறங்கி நடமாடுவதற்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்தவேளையில் கேணல் ஆல்டிரின் பூமியுடன் தொடர்புகொண்டு கூறிய சில வார்த்தைகள் நினைவுகூரத்தக்கவை:-


இதனைக் கேட்டுக்கொண்டிருப்பவர்கள், யாராயிருந்தாலும், எங்கிருந்தாலும்சரி; ஒருகணம்நிதானமாக கடந்த சில மணி நேரங்களில் இடம்பெற்ற நிகழ்ச்சிகளைபற்றி சிந்திக்கும்படியும் அவரவர்க்கு உரியமுறையில்நன்றிதெரிவிக்கும்படியும் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்; என்ருர் அவர்.

(தொடரும்)

# உறைபனிக்கடலை ஊடுருவிச் செல்லும் ராட்சதக் கப்பல்



பல மாதகால பிரயத்தனங்களின் பின்னர் அமெரிக்காவின் ராட்சத எண்ணெய்க் கப்பலான எஸ். எஸ், மான் ஹற்றன் வடதுருவ உறைபனிக் கடலை ஊடுருவிப் பிரயாணம் செய்து வடமேற்குக் கடற்பாதையில் முதல் தடவையாகப் பிரயாணம் செய்த வணிகக் கப்பல் என்ற பெயரைப் பெற்றிருக்கின்றது.



1498-ம் ஆண்டில் இத்தகைய மாலுமி ஜோன் கபோட் கிழக்குக் கோடியில் நிலைநாட்டிய சாதனையின் பின்னர் வணிகக் கப்பல் மாலுமிகள் இந்தப் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கிருர்கள்.

பனிப்பாறைகளை உடைத்தெறிவதற்காக இக்கப்பலின் முன்பக்கம் விசேஷ சாதனம் பொருத்தப்பட்டிருந்தது. பனிப் பாறைகளைத் தகர்க்கும் துறையில் பயிற்சி பெற்ற பொறி இயலாளர்கள் குழுவொன்றும் இதில் பிரயாணம் செய்தது. அலஸ்கா ராஜ்யத்தில் வடக்கு முனையில் சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்ட எண்ணெய்க் கிணறுகளிலிருந்து வட அமெரிக்காவின் உறைந்துபோன பகுதிகள் வழியாக வருடம் முழுவதும் பிரயாணம் செய்வதற்கு வழிகாண முடியும் என்பதை 115,000 டன் எடை கொண்ட இந்தக்கப்பல் உறுதிபடுத்தியுள்ளது. மான்ஹற்றன் கப்பல் பனி உடைக்கும் இரு கப்பல்களுடனும் உளவு பார்ப்பதற்

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயத்தைச் சாராமல் இலக்கியம் பொதுநோக்குடன் படைக்கப்படவேண்டும்

[இலக்கியத்துக்குச் சமயநோக்கு அளிக்கலாமா? என்று 14 2-70 வெளியான கருத்துக்கு வாசக அன்பர்களின் கருத்தைக் கேட்டிருந்தோம் அந்த வரிசையில் இங்கு முதலாவது கட்டுரையைப் பிரசுரிக்கின்றேம் மேற்படி கருத்தையொட்டி- ஆராய்ச்சிபூர்வமான கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன]

க. கணேசு, பி. ஏ. (இலங்கை)

"எப்பொருள் யார் யார்
வாய்க்கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள்
காண்பதறிவு"

என்ற வள்ளுவரின் தமிழ் மறைக்கிணங்க ஒருபொருள் சிறப்புடையதோ சிறப்பற்றதோ என்பதனை அதனை ஆக்கியோனைக் கொண்டு முடிவு செய்வது பொருத்த மற்றது. செந்தாமரைப்பூ சிறந்ததா? என்பதனை அறிவதற்கு அது பிறந்த சேற்றினையும்; முத்துச் சிறந்ததா? என்பதனை அறிவதற்கு அது பிறந்த சிப்பியையும் ஆராய்ந்து அவை சிறப்புக்குறைந்தவை என்று கணிக்க முடியாது. தாமரை மலரையும், முத்தினையும் அதற்கேற்ப மத்தால் அவற்றிறை பெறும் சிறந்த பயனை நாம் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாகி விடுகின்றேம்.

உலகிலுள்ள மதங்கள் மனிதனைக் கொலை, களவு, கள், காமம் முதலிய பஞ்சமா பாதகங்களிற் சிரத்தையின்றிக் கண்ணியம், கடமை கட்டுப்பாட்டில் உயர்ந்து வையத்துள் வாழ்வாங்கு வாழும் வழியை அமைத்துக் கொடுப்பதுடன் வானுறையும் தெய்வத்துள் வைக்கும் நிலையையும் ஏற்படுத்துகின்றன. இதேபோன்று இலக்கியமும் மனிதனை அறிஞனுக்கும்— வையத்துள் வாழ்வாங்கு வாழவைக்கும் நோக்குடனே இயற்றப்பட்டுள்ளன. இலக்கிய நோக்கிலும் சமய நோக்கு ஒருபடி உயர்ந்து காணப்படுகின்றது வையத்திலும் வானத்திலும் வாழ்தலாகிய இரு நிலைகளுக்கும் வழிகூறும் பெரும் பொருளாகிய சமயத்தினை வையத்துள் வாழ்வாங்கு வாழும் ஒரு நிலையைக் கூறும்நோக்கினைக் கொண்ட இலக்கியத்தின் மகிமையை உயர்த்தப் பேரறிஞர்கள் கருவியாகக் கொண்டனர்.

இதனுல் இலக்கியமும் சமயமும் இரண்டறக் கலந்து விட்டன. இவை மரபாக மாறி நிலவியதனுற் தமிழகத்தில் காலத்துக்குக் காலம் தோன்றிய பேரறிஞர்கள் தம் அரும்பெரும் விலைமதிப்பற்ற கருத்துக்களைத் தம் பரம்பரையினரின் சமயமரபுக்கு ஏற்ப இலக்கியமாக வெளியிட்டனர். அவர்கள் தம் கருத்தினை வெளியிடச் சமயங்களைக் கருவியாகவே பயன்படுத்தினர் நாம் அவர்கள் உபயோகித்த கருவிக்கு முக்கியத்துவம் கொடுக்காது கருத்துக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பவர்களாக இருந்தாற்றான் மெய்ப்பொருள் காண்பவர்களாவோம். உதாரணமாக பாயாசத்தினை ஒருவர் வெள்ளிப் பாத்திரத்திலும் மற்றையவர் குளிர்பானத்தைக் கண்ணுடிப் பாத்திரத்திலும் குடிக்கின்றனர். இதனை வைத்துக்கொண்டுவெள்ளிப் பாத்திரத்திலேதான் எப்பொழுதிலும் பாயாசம் குடிக்க வேண்டும்; கண்ணுடிப் பாத்திரக்காரன் குளிர்பானம்தான் குடிக்க வேண்டும் எனக் குடிக்கும் கருவிகளைக் கொண்டு பாகுபடுத்துவது ஏற்புடையதல்ல எப்பாத்திரமுடையோனும் தன் விருப்பத்திற்கு இணங்கக் குடிக்கும் பொருள்களின் சிறப்பையாராய்ந்து உயர்ந்த பொருட்களைப் பருகுவதே முறையாகும். இதே போன்றுதான் சமயத்தைக் கருவியாகக் கொண்ட இலக்கியங்களையும் பயன்படுத்த வேண்டும்.

துறைபோகக் கற்கும் கல்வியே சிறப்புக் கல்வியாகப் பெரியோர்கள் மதிக்கின்றனர். கல்வி கற்பதன்நோக்கம் அறிவை வளர்ப்பதாகும். அறிவுக்கு இலக்கணம் கூறும் முறையாக வள்ளுவர்

'எப்பொருள் எத்தன்மை
த்தாயினும்
அப்பொருள்
மெய்ப்பொருள்
காண்பதறிவு'

என்கின்ருர். வேறுபட்ட கொள்கையினர் வேறுபட்ட வகையிற்கூறியிருப்பினும் எதைக் கூறுகின்ருர் என்ற வினுவினை முதலில் நீக்கிவிட்டு எப்படிக் கூறுகின்ருர்.

ஏன் அதை அப்படிக் கூறுகின்ருர். என்ற வினுக்களுக்கு விடைகாண முற்படுவோமாகில் அறிவை வளர்க்க - மெய்ப்பொருளைக் காண ஏதுவாக இருக்கும். அறிஞனை உருவாக்கும் கருவியே கல்வி. கல்வியைக்கற்கும் மாணவன் குறுகிய நோக்கிற் செல்லாது பரந்த நோக்கிக் சென்ருற்ருன் சிறந்த பொருளைப் பெறமுடியும். கல்விகற்கும் இளம் உள்ளங்களைச் சமயப் பாகுபாட்டைக்கொண்டு பிரித்து வைத்திருப்பது கீழ்க்காணும் எடுத்துக்காட்டுக்கொப்பாகும். உதாரணமாக ஓரிடத்தில் இஸ்லாமிய மதத்தினரின் கடையும், கிறீஸ்தவ மதத்தினரின் கடையும், இந்துமதத்தினரின் கடையும் சிறந்த முறையில் அமைந்திருக்கின்றன. பொருள்வாங்கச்செல்வோர் எம்மதத்தினரின் கடையாக இருப்பினும் தம்மனத்துடன் பல கடைகளிலும் சென்று சிறந்தபொருள் எங்குண்டு, விலைச்சகாயம் எங்குண்டு என்று ஆராய்ந்து தம் விருப்பத்திற்கேற்ற பொருளைத் தெரிந்தெடுப்பதுதான் உலகியல் முறையும் பொருத்தமானதாகும். அதுவின்றி இஸ்லாமியர்கள் எல்லாம் இஸ்லாமிய கடைக்கும், கிறீஸ்தவர்கள் எல்லாம் கிறீஸ்தவக் கடைக்கும், இந்துக்கள் எல்லாம் இந்துக்கள் கடைக்கும்தான் சென்று பொருள் வாங்க வேண்டும் என்று பாகுபடுத்துவோமாகில் அதுபொருள் பெறச்செல்வோரின் பொருள்பற்றிய பொதுவான தரத்திலும் விலையிலும்உள்ள வேறுபாட்டையறிந்து குறைந்த விலையில் உயர்ந்த பொருளைப் பெறும் அறிவைக்குறைத்து கடைக்காரன் எதைக்கூறினும் ஏற்கும் நிலைக்காக்கிவிடும் என்பது யாவரும் உணரக்கூடியதாகும்.

அதுவுமன்றி இலக்கிய வரலாற்றினைச் சங்ககாலத்தில் இருந்து இக்காலம்வரையும் ஆராய்ந்து பார்ப்போமாகில் ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட ஒரு மரபை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. சிறப்பாக இலக்கியம் கற்கவேண்டுமாகில் முற்பட்ட இலக்கியமரபை நன்கறியவேண்டியது அவசியமாகும். கிறீஸ்தவ இஸ்லாமிய இலக்கியங்கள் பதினெட்டாம் நூற்ருண்டுக்குப் பின்னரே முக்கியம் பெற்றுள்ளன அதற்கு முற்பட்ட இலக்கியங்களெல்லாம் இந்து இலக்கியங்களாகவேகாணப்படுகின்றன. ஓர் இஸ்லாமிய மாணவனே, கிறிஸ்தவ மாணவனே தம் இலக்கியத்தை மட்டும் கற்க முற்படுவானுகில் முற்பட்ட தமிழின்சிறந்த செல்வங்களைப்பெறப் பாக்கியமற்றவனுகவும் இலக்கியவரலாற்றில் குறுகிய ஒருசில பகுதியை ஆராய்பவனுகவே காணப்படுவான். அறிவு விருத்திக்குமிடமிருக்காது.

எனவே இலக்கியத்துக்கு சமயம்வரம்பாக அமையாது பொதுநோக்குடன் மாணவர்களைக் கற்க வழிவகுப்பதே தமிழின் வளர்ச்சிக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்ததாக அமையும்

## மூச்சோட்டம்

ஏககாலத்தில் மூக்குத் துவாரங்கள் இரண்டிலும் மூச்சோட்டம் நடப்பதாக நினைப்பது தவருகும். மூச்சோட்டம் சிறிது நேரம் இடதுதுவாரத்திலும், சிறிது நேரம் வலதுதுவாரத்திலும் நடக்கும். வலது துளையில் மூச்சோட்டம் ஏற்படுவதால் உடலுக்கு வெப்பமும், இடது துளையில் நடப்பதால் குளிர்ச்சியும் ஏற்படுகிறது. இவற்றிற்கு முறையே சூரியகலை சந்திரகலை என்று பெயர். குளிர்சாதனம்போன்று இது உடலின் வெப்பநிலையைச் சீராகக் காப்பாற்றுகிறது.


நீங்கள் வீடு கட்டும் பொழுது
ஒட்டுப் பலகை
கதவுகளை பாவித்து
விலையை 40% குறைக்கவும்
விலை ரூபா 60/- தொடக்கம் ரூபா 156/- வரையாகும்.



☐ ஒட்டுப் பலகை கதவுகள் பாரம் குறைந்ததை, நீண்ட காலம் பாவிக்கக் கூடியவை எழில் மிக்கவை. இலகுவில் பொருத்த கூடியவை. புலரக மரங்களில் தேர்ந்தெடுத்து உற்பத்தி செய்யப்பட்டவை. இரிகம்பலிகை, கூலன்கிக், சற்றின் ஆகிய ஆடம்பர ரகங்களிலும் சாதாரண ரகங்களிலும் கிடைக்கும்.

☐ கதவுகள் பின் குறிப்பிட்ட அளவுகளில் விநியோகிக்கப்படும் :

உயரம் : 6' 9"
அகலம் : 2' 3", 2' 9", 3' 6"
கனம் : 1¼"

☐ விட்டத்திற்கு உபயோகிக்கப்படுகிற மரம் நீண்டகால உழைப்பிற்காக சிறந்த முறையில் பதப்படுத்தப்பட்டவையாகும்.

உற்பத்திக்கு உபயோகிக்கப்பட்ட பசை ஈரத் தன்மையை எதிர்க்கும் வன்மையுடையது.

இக்கதவுகள் பாவனையாளருக்கு உடனடியாக விற்பனைக்கு கிடைக்கும்

இலங்கை
ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
கிளை: 18, பலாலி வீதிச் சந்தி, ... யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 508.

இலங்கை
ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனம்
420, பௌத்தலோக மாவத்தை
கொழும்பு 7.
தொலைபேசி : 95846, 92903

THUNDERFLASH


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சங்கமத்துறை

—கங்காபுத்திரன்—

## நீ ஒரு மனிதன்:

''உன்னைச் சூழ்ந்துள்ளோர் நெறி தவறித் தமது தவறுக்கு நீதான் காரணம் என்றபோதும் உன்னுல் நேர்மையாக இருக்க முடியுமாஞல்.................

மற்றவர் உன்மீது நம்பிக்கையை இழந்துள்ள போதிலும் உன்னுல் தன்னம்பிக்கையை இழக்காமல் இருக்க முடியுமாஞல்..........

சமயத்தை எதிர் நோக்கி நீ காத்துக்கொண்டிருக்கும்போதும் அலுப்புக்கொள்ளாமல் இருக்க முடியுமாஞல்............

உன்னைப்பற்றிய பொய்ச் செய்திகள் உலவும் போதும் உன்னுல் பொய்வழியில் செல்லாதிருக்க முடியுமாஞல்............

உன்னைப் பிறர் வெறுக்கும்போதும் நீ வெறுப்புக்கிடம் கொடுக்காமலிருக்க முடியுமாஞல்...........

பாமரர்களுடன் வாழும்போதும் நற்பண்புகளை நழுவ விடாமலிருக்க முடியுமாஞல்......... ...

தம்பி! உனதுதானடா இந்த வையகம். இதிலுள்ள எல்லாம் உனதுதான். அவ்வளவு ஏன்? நீ ஒரு மனிதன்''

—கிப்ளிங்.

வாழ்வின் இலட்சியப் படிகளிலே ஏறிக்கொண்டு செல்ல முனைபவர்கள் இடைவெளியில் தமது இலட்சியக் கோட்பாடுகளை இழந்து பலவீனப்பட்டுவிடுவது இன்றைய உலகத்தின் சகச நிகழ்ச்சியாகிவிட்டது. ஆஞல்; ஏமாற்றத்தின் பின்னே நம்பிக்கை ஒளித்திருக்கின்றதென்பதை அறிஞர் கிப்ளிங் மிகத் தெளிவோடு கூறுகிருர். அவரது வாக்குகள் நமக்கு வழிகாட்டக்கூடியனவ அதன்படி நாம் நடக்க முயன்ருல் உண்மையில் உறுதி படைத்த மனிதஞக முடியும்.

★

## 'ஓம், ஆம்'—

பிரணவ சப்தத்தின் மூன்று எழுத்துக்கள்தாம் (அ. உ. ம்) என்பன. இவ்வெழுத்துக்களே காலத்துக்கும் சிந்தனைக்கும் அப்பாற்பட்ட 'ஓம்' என்ற பிரணவ சப்தமாக மாறியிருக்கின்றன, அலை கடலின் இரைச்சலில், சூறவளியில் பிரணவ ஓசையைக் கேட்கின்ரேம். இதுவே 'ஓம்' என்ற தத்துவத்தின் சுருக்கமான தாற்பரியமாகும்.

ஆஞல் தலைப்பில் போட்டுள்ள 'ஓம் என்பதற்கும் இங்கு யான் குறிப்பிடும் 'ஓம்' என்பதற்கும் ஸ்நானப்பிராப்தியே கிடையாது. யாழ்ப்பாணப் பகுதியில் ஒருவர் சொல்லுவதை மற்றவர் ,ஓம்' என்று ஆமோதிக்கிருர். உதாரணமாக ''நீர் இந்தக் காரியத்தைச் செய்கின்றீரா? என்ருல் 'ஓம் செய்கின்றேன்' என்பர் ஒருவர். ஆஞல் இந்த 'ஓம்' என்று யாம் எதைக் கொள்கிரேமோ அது தமிழகத்தில் 'ஆம்' என்று மாறிவிட்டது. இந்த 'ஓம்' என்பதுக்கும் 'ஆம்' என்பதுக்கும் உள்ள பேதத்தின் காரணமாக சில வருடங்களுக்கு முன்னர் கச்சதீவுக்குச் சென்ற இலங்கை வாலிபர்கள் இந்தியாவுக்குச் செல்லும் வள்ளத்தில் தொத்திக்கொண்டபோதிலும் அங்கு செல்ல முடியவில்லை ஓம் என்பதுக்கும் ஆம் என்பதுக்கும் உள்ள சப்தபேதம் உண்மையை உணர்த்திவிட்டது.

★

## பொறுப்புணர்ச்சி அவசியம்

''இளம் பெண் ஆண்களைக்காண வெட்கப்படுவாள். ஓடி ஒளிவாள், ஆடிப்பாடி ஒய்ந்த கிழவிகளுக்கு ஆடவரும் ஒன்றுதான்; ஆட்டுக்கல்லும் ஒன்றுதான். வாலைக்குமரி போன்ற வளர்பிறைச் சந்திரன் பகலைப்பார்ப்பதில்லை. ஆஞல் வெட்கங்கெட்ட கிழவி போன்ற தேய்பிறை ஜோதிருபஞன அருணன் உதித்ததும் ஒடுங்கிய முகத்தையும் பொக்குவாயையும் காட்டிப் பால்ய கனவுடன் சிரிக்கும்.''

இது ஓர் அறிஞனின் நெஞ்சக்கமலத்திலே பூத்த கருத்தாகும். இளமையின் பொறுப்பற்ற தன்மையையும், முதிர்ச்சியின் பக்குவ நிலையையும் வெளிப்படுத்தும் இந்தக் கருத்து, நம்மவர்க்கு இன்று தேவையாகவுள்ளது.

பொறுப்பற்றதனமாக இன்றைய வாலிபர் பலர் நடந்து கொள்ளுவதையும், அதஞல் அவர்களது வாழ்க்கையின் பெரும்பகுதி விரயமாவதையும் காண்கின்ரேம். இளமையும் உற்சாகமுமே எதிர்கால உலகத்துக்குத் தேவை. ஆஞல் பொறுப்புக்களைத் தட்டிக்கழித்து விடுகின்ற உற்சாகத்திஞல் எவ்வித பலனும் நமக்கு ஏற்படப்போவதில்லை. வயலிலே பசுமையுடன் நிமிர்ந்து நிற்கின்றன பயிர்கள். வெறும் பயிர்களால் பலனுண்டா? அப்பயிர்களின் கதிர் முற்றித் தலைசாய்கின்ற வேளையிலேதான் உலகுக்கு அது பயனுகின்றது. ஆகவே அடக்கமும் பண்பும் நமக்கும் தேவையென்பதை உணர்ந்து செயலாற்றுகின்றவர்களாக நம் இளைஞர்கள் வளர்ந்துவரவேண்டும். அப்போது அவர்கள் முற்றிய கதிர் எப்படிப் பயனுடையதாகின்றதோ அதுபோல தாமும் பயன் பெறலாம்.

தேவாரத் திருவமுது

# கண்டறியாத காட்சி

சிவபிரான் திருவருளால் திருவையாற்றுத் திருத்தலமே திருக்கைலாசமாகவும் அங்குள்ள சகல ஜீவராசிகளுமே சக்தியும் சிவமுமாகவும் அமைய அப்பர் சுவாமிகள் முன்பு தாம் ஒருபோதும்கண்டுஅறியாத அருமையான காட்சியைக் கண்டு தம்வசமிழந்து ''மாதர்ப் பிறைக் கண்ணியானை'' என்று தொடங்கிப் பாசுரந்தோறும் ''கண்டறியாதன கண்டேன்''என்று முடிக்கும் திருப்பதிக விளக்கம்.

**காதல் மடப்பிடியொடும் களிறுவருதல்**

மாதர்ப் பிறைக்கண்ணி
யானை மலையான் மக
ளொடும் பாடிப்
போதொடு நீர் சுமந்
தேத்திப் புகுவாரவர்
பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற
போது
காதல் மடப்பிடியோடுங்
களிறுவருவன கண்டேன்
கண்டே னவர்திருப்
பாதம் கண்டறி யாதன
கண்டேன்.

திருநாவுக்கரசு சுவாமிகள் தலயாத்திரை செய்யுங்கால் காசியம்பதியிலே விசாலாட்சியம்மை பாகராம் விசுவநாதவிமலனை வணங்கிய பின்பு, திருக்கைலாசத்திலே பார்வதியன்னை பாகராம் கைலாசபதியைத் தரிசிக்கும் நோக்கமாக வடகைலைநோக்கி நடந்துசெல்வராயினர். கால்கள் தேய்ந்தன. தவழ்ந்துசென்ருர். முழங்கால்களும் கைகளும் தேய்ந்தன. உருண்டு சென்ருர். உடலும் முற்ருகத் தேய்ந்து அசையத்தானும் வலுவில்லாதவராய் அபசமாய்க்கிடந்தார். அப்போது கருணையங்கடலாகும் எம்பிரான் ஒரு முனிவராக அவர் முன் தோன்றி அருங்கானகத்தில் அவர் வந்த நோக்கத்தைக் கேட்டார். முனிவரைக் கண்டதஞல் அப்பருக்குப் பேசும் வாய்ப்புக்கிட்டியது. திருக்கைலைக் காட்சியைக்கண்டு வணங்காமல் திரும்புவதில்லையென உறுதியாகக் கூறிஞர். உடனேசிவபிரான் மறைந்து ''நாவுக்கரசனே எழுந்து

**க. வை ஆ. சர்மா**

இத்தடாகத்தில் மூழ்குவாய் உனக்குத் திருக்கைலைக் காட்சி கிடைக்கும்'' என அருள்வாக்கு அளித்தார். அப்பர் சுவாமிகள் அதனைக் கேட்டு ஆச்சரியவசத்தராகி எழுந்து அப்பொய்கையில் மூழ்கியபோது தாம் திருவையாற்றில் ஒரு தடாகக்கரையில் நிற்பதை உணர்ந்தார். அத்திருப்பதியிலுள்ள சராசரங்களெல்லாம் சக்தியும் சிவமுமாகப் பொலிவதைக் கண்டார். அப்பொலிவு கண்டவாகீசவள்ளலார் திருவையாற்றுத் திருக்கோவிலுக்குச் சென்றுதரிசித்தார். அது அப்போது திருக்கைலயங்கிரியாக விளங்கியது கண்டு தரிசித்து வணங்கிஞர். இறைவன் திருவருளால் அக்காட்சி மறைந்து திருவையாற்றுத் தலமே புலப்பட்டது. அப்போது பாடிய பதிகமே 'மாதர்ப் பிறைக்கண்ணியானை' என்பதாகும்.

அழகிய பிறைச்சந்திரனையும் கொன்றை மலர்மாலையையும் சிரமீது சூடிக்கொண்ட கைலாசபதியானவர் பர்வதவர்த்தனி பாகராக விளங்குகிருர். மெய்யடியார்கள் அப்பிராஞரைத் தரிசித்து வணங்க வேண்டி அன்றலர்ந்த பூக்களையும் தூயநீரையும் சுமந்துகொண்டு துதிகளைப் பாடியவண்ணம் திருச்சந்நிதியை அடைகிருர்கள். அவர்களோடு தமியேனும் எனது உடலில்இருந்த ஊறுபாடுகள் எவையுமில்லாமல் திருவையாற்றுத் திருப்பதியினுள் புகுகின்றேன். புகுந்து தரிசிக்கும்போது அங்கே காதல்கொண்ட பிடியானையும் களிற்றியானையும் காட்சியளிக்கின்றன. அவற்றை நுனித்து நோக்க இறைவியோடு சேர்ந்திருக்கும் இறைவனது திருவடிச் சுவடுகளே தென்படுகின்றன. இவைமுன்பு தமியேன் ஒருபோதுங் கண்டு அறியாதகாட்சியன்ரே! (1)


**கோழிபெடையொடுங்கூடிக் குளிர்ந்து வருதல்**

போழிளங் கண்ணியினனைப்
பூந்துகி லாளொடும்பாடி
வாழியம் போற்றியென்
றேத்தி வட்டமிட்
டாடாவருவேன்
ஆழிவலவனின் றேத்தும்
ஐயாறடைகின்றபோது

(13-ம் பக்கம் பார்க்க)

10,000

மசி-பேர்குசன்
உரிமையாளர் பிழை
விட்டிருக்க முடியாது.



10,000 மசி – பேர்குசன்,
நாட்டின் ட்ராக்டர்கள் தொகையில்
75% மானவை.

10,000 மசி – பேர்குசன் ட்ராக்டர்கள்,
பல கோடி ரூபாய்
பெறுமதியான பதில் உறுப்புக்கள்,
துணைகொண்டவை.

10,000 மசி – போகுசன்
உரிமையாளரே இத் ட்ராக்டரின்
வேளாண்மைப் பாவனைச்
சிறப்புக்கு அத்தாட்சி.

10,000 மசி – பேர்குசன்.
நாடெங்கிலும் இருபத்து மூன்று
நிலையங்களில் சேவை வசதி
கொண்டுள்ளன.

முதலாவதாக விற்கப்பட்ட மசி – பேர்குசன் இன்றும்
பாவனையில் உள்ளது. எனவே . . . 10,000 மசி – பேர்குசன்
உரிமையாளர் பிழை விட்டிருக்க முடியாதே!

பிரவுண் அன் கொம்பெனி லிமிட்டெட்
விவசாயப் பிரிவு,
தேவநம்பியதீசன் வீதி, கொழும்பு 10.
டெலிபோன் 93097.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

(5-ம் பககத் தொடர்ச்சி)

நிகழவே கூடாது. ஏழை. பணக்காரன் என்ற தாழ்வுணர்ச்சியும், மேலுணர்ச்சியும் ஒன்ருகச் சங்கமமாகும் வரை, இந்த இரு துருவங்கள் ஒன்ருகச் சேரும்வரை இத்தகைய கல்யாண நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடாது. பணத்திற்கு ஆசைப்பட்டு தெரியாத்தனமாக மாட்டுப்பட்டு என் தந்தையையும், உற்ருரையும் தாழ்வுணர்ச்சிக்கு ஆளாக்கிவிட்டோமே' என நினைத்து வருந்தினன் தணிகாசலம்.

தாலி கட்டப்பெற்ற இரு மணி நேரத்தின்பின் குடுமிக்காரர்களையும் பட்டிக்காட்டார் என்று எண்ணப்பட்ட மாப்பிள்ளை வீட்டுக்காரர்களையும் கலைக்கும் படலத்தை மேற்கொள்ளத் தொடங்கினர் சாம்பசிவம்.

'வயிறு முட்டத்தான் சீவியத்திலே முதன்முறையாகவும் கடைசி முறையாகவும் ருசியாகத் தின்று தீர்த்து விட்டீர்களே... இன்னுமேன் இங்கு நின்று மானத்தை வாங்குகிறீர்கள்?' என இரைந்து கொண்டு நின்ருர் சாம்பசிவம்.

ஆனல் மாப்பிள்ளையின் உறவினர்கள் இதையும் பொறுத்துக் கொண்டனர். 'தம்பியை ஒருதரம் கண்டு சொல்லிவிட்டுப் போகத்தான் காத்துநிற்கிருேம்' என அடக்கமாக நின்ற ஒரு கிராமத்தான் அமைதியாகப் பதில் சொன்னன்.

'இனி உங்களுக்கும் என் மாப்பிள்ளைக்கும் ஒரு தொடர்பும் கிடையாது. அவனைக் காசு கொடுத்து நான் வாங்கிவிட்டேனே. இனி அவனைப் பார்க்கவேண்டும் என இந்தக் கோலத்தோடும் உடுப்புக்களோடும் இவ் வீட்டுவாசலை மிதித்தீர்களோ நான் பொல்லாதவனுகி விடுவேன்...' எனக் கத்திக் கொண்டு நின்ற சாம்பசிவத்தாருக்குப் பொறுமையிழக்காது தனக்கே உரிய அமைதியோடு 'யாருக்குப் பணம் கொடுத்து என் மகனை வாங்கினீர்கள்? பணமெல்லாவற்றையும் சீதனமென்ற பெயரில் உங்கள் மகளுக்கல்லவா கொடுத்திருக்கிறீர்கள்...?' எனக் கேலியாகவும் கிண்டலாகவும் பதில் சொன்னர் தணிகாசலத்தின் தந்தை கனகசபை.

'பெற்ருேர்கள் தம் ஆண் பிள்ளைகளுக்குச் சீதனம் பெற்றுக்கொடுப்பது இம்மியளவும் தம் சொந்த நன்மைகளுக்காகவல்ல எல்லாம் பெண்ணின் புதுக் குடும்ப நன்மைக்காகவே. பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுக்கும் சீதனத்தில் பெற்ருேர் ஒரு சதமும் தொடுவதில்லை' என்பதை உணர்த்துவதாய் அமைந்த கனகசபையின் பதிலைப் பொறுக்கமுடியாத சாம்பசிவம் 'திமிராடா உனக்கு போடா வெளியாலே... இவ்வளவு நேரமும் மணவறைப் பந்தலில் நின்று மானத்தை வாங்கியது போதாதென்று வாய்வேறு காட்டுகிருயா பிச்சைக்காரநாயே'' எனக் கத்திக்கொண்டு அவர்கள் எல்லோருக்கும் வாசலைக் காட்டினர்.

கனகசபையின் கண்கள் கலங்கின. உடலை வருத்திக் கஷ்டப்பட்டு வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி மகனைப் படிப்பித்து கடைசியில் இப்படி அவமதிப்பிற்கு ஆளாக நேர்ந்திருக்கிறதே என மனம் நொந்து வெளியேறிக் கொண்டிருந்தார், கனகசபை. அவரைத் தொடர்ந்து அவரின் உறவினர்களும் அமைதியாகக் குனிந்த தலையோடு வெளியேறிக்கொண்டிருந்தனர்.

வாசலில் நடந்துகொண்டிருந்த இவ்வளவையும் கேட்டுக்கொண்டு கம்பளம் விரிக்கப் பெற்ற 'செற்றி'யின்மீது பந்தலில் லட்சுமியோடு அமர்ந்திருந்த தணிகாசலம் விருட்டென எழுந்து வாசலுக்கு ஓடிவந்தான்.

ஓடிவந்தவன் வாசலில் தன் தந்தையைத் தாங்கிக் கொண்டு ''உங்கள் பணத்தையும், உங்கள் பெண்ணையும் நீங்களே வைத்திருங்கள்...'' எனச் சாம்பசிவத்தைப் பார்த்துச் சொல்லிவிட்டு தன் தந்தையோடும் உறவினர் நண்பர்களோடும் வெளியேறியவன் வெளியேறியவன்தான். அதன்பின் அந்தப் பக்கமே அவன் தலைகாட்டியதில்லை.

ஆனல் தணிகாசலத்தின் தந்தை கனகசபை அவனின் முடிவைப் பலமாக எதிர்த்தார். ''என்னதான் இருந்தாலும் நீ அவளுக்குத் தாலி கட்டியவன்...... மாமனரின் அகங்காரத்திற்காக அந்தப் பெண்ணைத் தண்டிக்கலாமா? நீ அப்படி எங்களோடு புறப்பட்டு வந்தது என்னவோ எங்களுக்கெல்லாம் அப்போது பெருமையாகவும் சந்தோஷமாகவும் இருந்ததுதானடா... ஆனல் இப்போ அந்தப் பெண்ணின் நிலையை நோக்கும்போது அது பெரும் பாவமாகத்தான் தோன்றுகிறதடா...... தம்பி... அவமானப்பட்டது நாங்கள்தானே...... அதைப் பற்றி நாங்கள் பறவாய்ப் படாதிருக்கும்போது நீ மட்டும் ஏன் பொருட்படுத்துகிருய்?... நீ பெண் பாவத்திற்கு ஆளாகக் கூடாது என்றுதான் நான் இவ்வளவும் சொல்லுகிறேன்... யோசித்துப் பாரடா தம்பி...'' என அந்தக் குடுமிக்காரத் தந்தை மகனின் விவாகரத்து எண்ணத்தைப் பலமாகக் கண்டித்தார். ஆனல் தணிகாசலமோ பிடிவாதமாகவே இருந்தான்.

''அப்பா, நான் அவளுக்குத் தாலி கட்டியதுதான் ஒரேயொரு குற்றமேதவிர அவளை நான் ஒருபோதும் தீண்டியதோ அவளோடு பேசியதோ கிடையாது. அத்தோடு எங்கள் சமூகத்தோடு பழகியிராத சமூகம் அது. அந்தச் சமூகத்தை ஏன் இந்தச் சமூகத்தோடு இழுத்தடித்து அவர்களைத் துன்புறுத்துவான்—?

''இந்த நிலையில் இரு குடும்பங்களின் நன்மைக்காக விவாகரத்துச் செய்வதில் யாதும் பிழை இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. மேலும் சாம்பசிவத்தாரிடம் லட்சத்திற்குமேல் செல்வம் இருக்கிறது. நாங்கள் முன் வந்து விவாகரத்துக் கொடுத்து அவர்களை விடுதலைப் படுத்திவிடுவோமானல் அது அவர்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும்—

'நாங்கள் விவாகரத்து வழங்கிவிட்டோமானல் லட்சுமியை நாளைக்கே வேறு தங்கள் சமூகத்தோடு ஒத்தவன் ஒருவனுக்குக் கட்டி வைத்து மகிழ்ந்து கொள்வார் சாம்பசிவம்' எனத் தந்தைக்குச் சமாதானம் சொல்லிவிட்டுத் தன் விவாகரத்து வழக்கைத் தொடர்ந்தான் தணிகாசலம்.

மூன்று தவணைகளுக்கும் லட்சுமி கோர்ட்டில் பிரசன்னமாகாததால் நீதிபதி இலகுவில் தணிகாசலத்திற்குச் சார்தகமாக விவாகரத்தை வழங்கித் தீர்ப்பளித்தார்.

லட்சுமியும் கோட்டுக்கு வந்து தனக்குத் தாலி கட்டிய புருஷன்தான் வேண்டும் என்று வாதாடுவாள் என ஒருவிதத்தில் எதிர்பார்த்திருந்த தணிகாசலம், லட்சுமி கோர்ட்டுக்கே வராது விட்டது தன்னை அவளும் அசட்டை செய்துவிட்டதாக

(13ம் பக்கம் பார்க்க)



இரு அலைவரிசை கொண்ட

ஸோனி றி ஆர்-627 எம் எஸ்

அதி அகண்ட சிற்றலையிலும், மத்திய அலையிலும் கேட்கலாம. பெரிய விசை மிகுந்த தொணி பரப்பி. தொடர்பான தொனிக்கட்டுப்பாடு. நீண்ட இழுத்து விடக்கூடிய ஒலிக்கமபம. அழுக்கு விசை அலைத்தேர்வு. சுழற்றி மாற்றக்கூடிய தட்டிற் பொருத்திய மீடடர் கெடடியான கைப்பிடி

ரூ. 285/-

-உன்னத தொனி ஈர்ப்பும் தொனிச்சிறப்பும் கொண்டது




ஸீடில்ஸ் ஸினிரேடியோ 9, கொன்ஸிலிஸ்டரி கட்டிடம, கொழும்பு 11. தொலைபேசி: 27311

கிளைகள் கண்டி, யாழ்ப்பாணம, கம்பகா அம்பலாந்தோட்டை. பம்பலப்பிட்டி.

TEAM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் வளர்ந்துவரும் புதிய அரசியல் சக்தி கருணாநிதி

## இந்துஸ்தான் டைம்ஸ் விமரிசனம்

**தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி பாரதத்தில் தற்பொழுது வளர்ந்துவரும்ஓர் அரசியல்சகதியாகவிளங்குகிருர். அடுத்துவரும் பத்தாண்டுகளில் அரசியல் உலகத்தின் கவனத்தைத்தன்பால் இழுக்கும் தலைவராக அவர் இருப்பார் இந்தியாவின் அடுத்த பிரதமராக வரும் வாய்ப்புக்கூட அவருக்குஇருக்கின்றது.**

இவ்வாறு புதுடில்லியிலிருந்து வெளிவரும் இந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை விமரிசனம் செய்திருக்கின்றது. இந்திய அரசியல்பற்றிய அந்த சுவையான விமரிசனக் கட்டுரை இங்கு தரப்படுகின்றது.

காலம் சுழல்கிறது! தனக்கே உரித்தான முறையில் அது பழைய விஷயங்களுக்காகச் சில இடங்களில் பழிவாங்கவும் செய்கிறது.

முன்னர் 1950 வாக்கில் தென்னகத்தில் சுற்றுப் பயணம் செய்த நேரு ''தற்கால அரசியல் கட்சி'' என்று ஒதுக்கித்தள்ளிய- விளைவுகள் எதையும் ஏற்படுத்த முடியாதது என்று அலட்சியப்படுத்திப் பேசிய திராவிட முன்னேற்றக் கழகம்— இன்று 1960-ம் ஆண்டுக்குப் பிறகு வளர்ந்துவிட்ட நிலையில் தாராளமனப்பான்மையுடனும் இருக்க முடிகிறது.

ஜின்னுவின் அரசியலைப் பற்றி நேரு கொண்டிருந்த வஞ்சினம் எத்தகையது என்று மவுலானு ஆசாத் தமது ''இந்தியா விடுதலை அடைகிறது'' என்ற நூலில் எத்தனை விளக்கமாக எழுதினுரோ அதே வன்மத்துடன் நேரு பேசியபோதும் காலம் மாறிய நிலையில் இன்று திராவிட முன்னேற்றக்கழகம் அரசியல் பெருந்தன்மை காட்டுகின்றது.

சுருங்கச் சொல்லின் தமிழக முதல்வர் கருணாநிதியின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய மாநில அரசியலகட்சி என்ற தனித்தன்மையையும் இழந்துவிடாமல், அகில இந்திய அரசியலிலும் தனது சிறப்பான பணியை ஆற்ற முற்படுகிறது. எடுத்த எடுப்பில் இது முன்னுக்குப்பின் முரணுன முயற்சிபோல் தோன்றும்.

### மாநில தனித்தன்மை

அகில இந்திய அரசியலில் செயல்படும் முயற்சியில் எந்த மாநில அரசியல் கட்சியும் தன்னுடைய மாநில நலன்பற்றிய கொள்கைகளைத் தளர்த்திக்கொள்ள வேண்டியிருக்கும். அதன் விளைவாக, அவர்களுக்கு உள்ள ஒரே பலமான மக்கள் ஆதரவையும் ஓரளவுக்கு அளித்துக் கொள்ள நேரிடும்.

கருணாநிதி இந்த முரண்பாட்டை மிகவும் சாமர்த்தியமாகச் சமாளித்திருக்கிறுர்.

பஞ்சாப் மாநிலத்தில் குருணம்சிங்கின் தலைமையில் செயல்படும் இன்னொரு மாநில அரசியல் கட்சியான அகாலிக் கட்சியுடன் ஒத்துழைத்து; ஒன்றுபட்டு அகில இந்திய பிரச்னைகளில் செயல்படுவதன்மூலம் இரண்டு கட்சிகளும் தங்களுடைய மாநிலத் தனித்தன்மையைக் காத்துக்கொள்ள முடிகிறது.

இந்தக் கருத்துக்களுக்கு அரசியல் சட்ட ரீதியாக உருவம் கொடுப்பதற்கு கருணாநிதி திட்டவட்டமான கொஞ்சம் அதிர்ச்சி தரும்படியான யோசனைகளையும் கூறியிருக்கிறார்.

### பத்தாண்டுகளில் உலகின் கவனத்தை இழுப்பாராம்

திருச்சியில் நடைபெற்ற ஓர் அரசியல் மாநாட்டில் அவர் ''மாநிலத்தில் சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி'' என்ற இரண்டடுக்கு அரசியல் திட்டத்தை விளக்கினுர். தோராயமாக இதன்படி மாநிலங்களில் சுயாட்சியும் மத்திய அரசில் கூட்டாட்சியும் நடைபெறும்.

கருணாநிதி கூட்டாட்சிக்கும், கூட்டணியாட்சிக்கும் உள்ள வேறுபாட்டை விளக்கினுர். கருணாநிதி கொடுத்திருக்கும் அரசியல் விளக்கமானது முற்றிலும் புதுமையானது.

### அடுத்த பிரதமர்

இதன்படி மாநிலங்களில் முதல் அமைச்சர்கள் தேர்ந்தெடுக்கப்படும் சமயத்திலேயே மாநிலத்தின் ஆளும் கட்சிகளால் மத்திய அரசின் அரசியல் நிர்வாக அமைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டுவிடும். இதன்மூலம் பாராளுமன்றத்திஞல் தனியாகத் தேர்ந்தெடுக்கப்படும் மத்திய நிர்வாக அமைப்பு என்றமுறை வேரறுந்துவிடும்.

இந்த முறையில் பார்த்தால் இந்தியாவின் அடுத்த பிரதமரே கருணாநிதியாகத் தானிருக்க முடியும்.

அவரது திட்டத்தின் இரண்டொரு அம்சங்கள் புரட்சிகரமானவை. முதலாவதாக இது அரசியல் கட்சிகள் தாமாக முன்வந்து ஏற்படுத்திக்கொள்ளும் அரசியல் ஏற்பாடு அல்ல. அரசியல் சட்டத்திலேயே அமைக்கப்படும் மாற்றம் இது.

1972 பொதுத் தேர்தலிலோ அல்லது அதற்குமுன்னுலேயே ஏதாவது இடைக் காலத்தேர்தல் நடந்தாலோ எந்த ஒரு கட்சியும் தனித்து நின்று பெரும்பான்மையாக வர முடியாது என்ற கருத்தின் அடிப்படையில் மாற்று யோசனை என்பதே கூட்டணிக் கட்சிகளின் ஆட்சி என்பதாகத்தானிருக்க முடியும். இதுபற்றிப் பேச்சுகளும் பரவலாக அடிபடுகின்றன.

### கூட்டணிகள்

அரசியல் கட்சிகள், வலது அல்லது இடதுசாரிகள் என்ற அடிப்படையில் பிரிந்துவிட்ட இரண்டு காங்கிரஸ் அமைப்புகளில் ஏதாவது ஒன்றைச் சேர்த்தோ சேர்க்காமலோ கூட்டணிகள் அமைப்பது என்றும் பேசப்படுகிறது. திராவிட முன்னேற்றக் கழகம் இதே அடிப்படையில் சிந்தித்தாலும் வலதுசாரி இடதுசாரி கட்சிகளின் ஒருங்கிணைப்பு என்பது தற்போதைய சூழ்நிலையில் அர்த்தமற்றது எனக் கருதுகிறது.

இன்றைய அரசியல் ஒரே உறுதிப்பாடான கருத்து மாநில அரசியல்தான். இந்த நிலைமைக்கு தேசியக் கட்சிகள் என்று சொல்லும் அகில இந்திய அரசியல் கட்சிகளே தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக ஜனசங்கத்தின் மாநிலப் பிரிவுகள், சண்டிகார், பெல்காம் போன்ற பிரச்னைகளில் தத்தம் மாநிலங்களுக்குச் சாதகமாக முரண்பட்ட கருத்துக்களையே வெளிப்படுத்துகின்றன. இதுதான் இன்றைய அரசியலின் உண்மை நிலை.



உண்மையில், இதற்கு மாறுன எந்த அமைப்பும் குழப்ப நிலையையே உண்டாக்கும். இந்தக் கருத்தை மேலும் விளக்கினுல், இன்றைய சூழ்நிலையில் அகில இந்திய அரசியல் கட்சி என்று சொல்வதற்கு ஒரு கட்சியே இந்தியாவில்இல்லை

(14-ம் பக்கம் பார்க்க)

### உறைபனி

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கென ஹெலிகப்டர்களுடனும் புறப்பட்டுச் சென்றது. முதலில் ஒருவார காலம் துருவ வட்டத்திற்கு மேலே பனிப்பாறைகளையுடைத்துத் தன் கருவிகளைப் பரிசோதித்தது. பலதடவைகள் அது தரைதட்டி நின்றது. பாறைகளைத் தகர்த்தெறிந்தது இவ்வாறே உறைந்துபோன 1280 கிலோமீற்றர் தொலைவைச் சிரமத்துடன் கடந்து போபோர்ட் கடல்பகுதியை சென்றடைந்தது.

### சிறுகதை

(12ம் பக்கத் தொடர்ச்சி]

வும் இந்த விவாகரத்தில் அவளுக்கும் பூரண திருப்தியெனவும் எண்ணிக்கொண்ட தணிகாசலம் 'தந்தையைப் போலத் தலைவீக்கமானவள்தான் மகளும். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா' எனக் கறுவிக் கொண்டான்.

விவாகரத்துப் பெற்றுக் கொண்ட அடுத்தமாதமே தன் ஏழை மாமன்மகள் ஒருத்தியான அம்பிகாவை மணந்துகொண்ட தணிகாசலம் மனைவியை அழைத்துக்கொண்டு கொழும்பிலேயேபோய் நிரந்தரமாகக் குடி கொண்டான். ஏதாவது நன்மை தீமைகளுக்கு மட்டும் கிராமத்திற்கு இரண்டு மூன்றுநாள் லீவில் வந்துவிட்டுப் போவான். மற்றும்படி அவனின் வாழ்க்கை முழுதும் கொழும்பிலேயே இன்பமாகக் கழிந்தது.

(அடுத்த வாரம் முடியும்)

### கண்டறியாத . . .

(11ம் பக்கத் தொடர்ச்சி)

கோழிபெடையொடுங் கூடிக்
குளிர்ந்து வருவனகண்
டேன்.
கண்டேனவர்திருப்பாதங்
கண்டறியாதன கண்டேன்.

இகழ்விண்டலருங் கொன்றைப்பூமாலையணிந்து பொலிவு பொருந்த தஅழகிய அறம்வளர்த்த நாயகிபாகராம் ஐயாற்றுப் பெருமானை வாத்திய இசையுடன் போற்றிப் பாடிக்கொண்டு வட்டவடிவாக ஆடியவண்ணம் வருவேன். சக்கிரப் படையைத் தாங்கிய திருமாலானவர் அனுதினமும் நின்று வழிபாடு செய்யும் திருவையாற்றுப்பதியை அப்படி அடையும்போது சேவற்கோழியானது தனது பேட்டுக்கோழியுடன் கூடி மகிழ்ந்து கொக்கரித்து வருகின்ற காட்சியைக் காண்கின்றேன் அப்போது அந்தக்காட்சியைத் தியானிக்கும்போது சக்தியும் சிவமும் சேர்ந்து விளங்கும் அருமைவாய்ந்த திருக்காட்சியே அடியேனுக்குப் புலப்படுகின்றது. இவை முன்பு ஒருபோதும் காணுத திருக்காட்சியாமே. (2)

(தொடரும்)


இருப்பு எடுக்கும் மலிவுவிற்பனை

16-ந் திகதி முதல் 31-3-70 வரை சகல விற்பனைப்பகுதிகளிலும்
விலைகள் மிக மிக குறைக்கப்பட்டுள்ளன.
உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்

சேட் பகுதி

| | வ. வி. | ம வி |
|---|---|---|
| சோடியாக் நைலோன் | 20 - 50 | 10 - 00 |
| ஸ்கைவே | 24 - 50 | 19 - 50 |
| டியூரே | 24 - 50 | 19 - 50 |
| மோட்டெக்ஸ் | 25 - 50 | 22 - 00 |
| பென்கேர் | 42 - 50 | 36 - 50 |
| ரீகல் | 22 - 50 | 16 - 50 |
| டிப்ளொமற் | 11 - 00 | 8 - 00 |
| சோடியாக் பிளேயின் | 28 - 50 | 14 - 50 |
| டயா பிறின்ஸ் | 20 - 00 | 14 - 00 |

சேலைப் பகுதி

| | வ. வி. | ம. வி. |
|---|---|---|
| கைத்தறி சேலை | 36 - 50 | 20 - 50 |
| ,, ,, | 26 - 50 | 19 - 50 |
| டெக்கிரேன் சேலை | 39 - 50 | 30 - 50 |
| ஸில்க் சேலை | 35 - 00 | 21 - 50 |
| பிளேயின் நைலக்ஸ் | 63 - 00 | 56 - 00 |

வொயில் சாறிகள் ரூபா 15/-ல்இருந்து ரூபா 24/- வரைக்கும்

போன் :7099

ரொலறம்ஸ்

46, பெரியதெரு :: யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் வளர்ந்துவரும் ...

(13-ம் பககத்தொடர்ச்சி) என்று வாதித்தாலும் மிகையாகாது.

## மாறுபட்ட குரல்கள்

ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களேவேறுவேறுமாநிலங்களில் தங்கள் மாநிலத்தின் நலன்களுக்கேற்றவாறுமாறுபட்ட குரல்களில் பேசுவதோடல்லாமல் காங்கிரஸ் கட்சிகள் உட்பட எந்தக் கட்சிக்கும் அமைப்பு முறையில் எல்லா விஷயங்களிலும் அகில இந்திய ஒருமைப்பாடு கிடையாது.

கொஞ்சம் மிகையாகக் கூறுவதுபோல் தோன்றினலும் இதையே கொஞ்சம் மாற்றிச் சொல்லும்போது, ''காங்கிரஸ் கட்சிகூட இரண்டாகப் பிரிந்தது உண்மைதான். ஆனல் அவை இரண்டும் அகில இந்தியக் கட்சிகளாக மலரவில்லை'' என்றுதான் கூறவேண்டியிருக்கிறது.

## அலட்சியப்படுத்த முடியாது

பிரிந்த கிளையில் அவற்றில் எதுவும் அகில இந்தியத் தன்மையை அடையவில்லை. எடுத்துக்காட்டாக புதிய காங்கிரஸ் என்ற பெயரைச் சொல்வதற்குத் தமிழகத்தைப் பொறுத்தவரையில் எதுவுமே இல்லை. அவ்வாறே மராட்டிய மாநிலத்தில் பழைய காங்கிரசின் பெயர் சொல்ல ஒன்றும் கிடையாது.

நிகழ்ச்சிகள்போகிறபோக்கில் இந்த இரு காங்கிரஸ் கட்சிகளும், அந்தந்த மாநிலத்தின் நிலைமைக்கேற்றவாறு மற்ற அரசியல் கட்சிகளுடன் தனித்தனியாகக் கூட்டுச்சேரவேண்டிய கட்டாயம் ஏற்படும். சம்யுக்த சாஷலிஸ்டுக் கட்சியுடன் பீகாரில் புதிய காங்கிரஸ் கூட்டுச்சேரும். அதே கட்சியுடன் உத்தர பிரதேசத்தில் பழைய காங்கிரஸ்கூட்டுச்சேரும். இப்படி நேர்ந்தால் அகில இந்திய தேசிய அரசியல்கட்சி என்ற தத்துவமே அடையாளந் தெரியாமல் தேய்ந்து உருமாறிவிடும்.

இந்தப்பின்னணியில்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த புதிய அரசியல் கருத்து சுடர்விடுகின்றது. இந்தக் கருத்துக்கள் பலமானவைதானு, நாட்டின் நலத்திற்கு உகந்தவைதானு? என்பது சர்ச்சைக்குரிய விஷயம். ஆனல் நேருவின் பழைய தவறுகளை எச்சரிக்கையாக அல்லது பாடமாக எடுத்துக்கொண்டோமானல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்தக்கருத்துக்களை நாம் நிச்சயமாக அலட்சியப்படுத்தமுடியாது.

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றல் இன்றுவரை மாநிலங்களுக்கு விரிவான அதிகாரங்கள் என்று இதுவரை பேசப்பட்டுவந்த ஒரு கருத்துக்கு கருணநிதி அவற்றின் புதிய பரிமாணங்களை விளக்கி புதிய கூட்டாட்சிக்கு விளக்கம் கூறியுள்ளார். இதற்காக அவர் கூறும் விளக்கத்தின்படி மாநிலம் மத்திய நிர்வாகத்தை பொருள் பொதிந்த வகையில் செயல்படுத்தமுடியும்.

மத்திய கூட்டாட்சி என்பது மாநிலங்களுக்கு அதிக பொறுப்பும் அதிக அதிகாரங்களும் என்ற பொருளில் மட்டுமல்ல, மத்திய ஆட்சியில் மாநிலத்திற்கு நேரடியான பொறுப்பும் கலந்து செயல்படும் உரிமையும் மாநிலத்திற்கு இருப்பதே ஆகும். ஆகவே கருணநிதியவர்களின் புதிய கருத்துகள் பழைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரிவினைக்கொள்கையின் மறு உருவமேஎன்று வாதிப்பவர்கள் இதைத் தவருகப் புரிந்துகொண்டவர்களாவார்கள்.

மத்திய ஆட்சியில் அதிகமான ஈடுபாடும் மத்திய நிர்வாகத்தில் அதிகமான பங்கும் வேண்டுமென்று கேட்பது—அது மாநிலங்களின் பிரதிநிதித்துவ அடிப்படையிலேதான் என்றலும்-அது எப்படிப் பிரிந்துபோகும் கொள்கையாக இருக்க முடியும்?

## வளர்ந்துவரும் சக்தி

இந்தக் கருத்துக்களைவிரும்பாதவர்கள்கூட இன்றைய அகில இந்திய அரசியல் சூழ்நிலையில் கருணநிதி முக்கியத்துவத்திலே வளர்ந்துவரும் ஓர் அரசியல் சக்திஎன்பதை ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும்.

சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் காங்கிரசைப் பிரித்துவிட்டதால் ஏற்பட்ட சூழ்நிலையை அவர் தக்கமுறையில் பயன்படுத்திக்கொண்டுவிட்டார் என்பது உண்மையே. இந்த விஷயத்தில் அவருடைய நடவடிக்கைகளை அண்ணவுடைய செயல்களுடனும் ஒப்பிட்டுப்பார்ப்பது பயனுள்ளதாக இருக்கும்.

## அண்ணவும் கருணவும்

ஒரு தலைவருக்குரிய ஆற்றலும் திறமையும்பெற்றவராக அண்ண அவர்கள் இருந்தாரென்றலும் அவரிடம் சில அமைதித்தன்மைகளும் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மைகளும் இருந்தன. ஒரு காலத்தில் அவருக்குத் தோழராக இருந்து பின்னர்விரோதியாகமாறிய திரு. ஈ. வெ. கி. சம்பத்கூட இந்த மிருதுத்தன்மைகளால் அண்ண எப்படி தனக்கு நல்ல பெயரைச் சம்பாதித்துக்கொண்டார் என்பதை அருமையாக விளக்கி இருக்கிருர்.

இதற்கு மாருக கருணநிதி துடிப்புடன் புதுத்திட்டங்களுடன் பெரிய குறிக்கோளுடன் தன்னம்பிக்கையுடன் செயல்படுகிருர். அவரே இந்த ஓர் ஆண்டு காலத்தில் என்ன காரியங்களைச் சாதித்திருக்கிருர் என்பது யாவரையும் வியப்பில் ஆழ்த்தும்.

ஆறே மாதங்களில் தன்னுடைய கட்சியின் முழு அதிகாரத்தைத் தன்வசமாக்கிவிட்டார். அவருடைய முன்னுள் போட்டியாளர்கள் அவரது உயர்வு பற்றி காழ்ப்படையாமல் இருக்கும்படி செய்துவிட்டார்.

அண்ண அவர்களின் காலத்தில் இருந்ததைவிட தமதுகட்சியின்செல்வாக்கை மேலும்அதிகமாக்கிக்கொண்டுவிட்டார். அண்ண அவர்கள் இந்திய அரசியலில், அவர் இராஜ்யசபை உறுப்பினராக ஆனகாலத்திலிருந்தே ஈடுபடத்தொடங்கிவிட்டார். இதற்கு முன்னர்தான் முதலமைச்சராக வருவதற்கு முன்னல் டெல்லிப் பக்கம் வந்திருப்பாரோ இல்லையோ என்று கருதப்படும் கருணநிதியின் நிலைமையோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அவருடைய அரசியல் செல்வாக்கு அவர் முதலமைச்சராகும் தமிழகத்தின் எல்லையைத் தாண்டவில்லை.

## அரசியல் உலக கவனம்

ஆனல் இன்று அவர் அகாலிக்கட்சியுடன் குறிப்பிடத்தக்க அளவுக்கு சிறந்த தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கிருர். இந்த நல்லெண்ணத்தைப் பிரதிபலிக்கும்வகையில் குருநாம் சிங் தமிழகத்திற்கு வந்திருந்து திராவிடமுன்னேற்றக்கழகத்தின்விருந்தினராக அவர்களது திருச்சி அரசியல் மாநாட்டிலேயே கலந்துகொண்டார்.

கருணநிதிகூட வேடிக்கையாக குருநாம்சிங் ஒரு மணமகளென்று குறிப்பிட்டு நாட்டுக்கு நன்மை பயக்குமானல் தான் ஒரு தாடியுள்ள மணமகளை மணந்துகொள்ளவும்தயாராக இருப்பதாகக் குறிப்பிட்டார். இந்த நகைச்சுவைக்கும் வேடிக்கைக்குமிடையே ஒரு திடமான அரசியல் நோக்கமிருப்பதைப்புரிந்துகொள்ள வேண்டும்.

அடுத்துவரும் பத்தாண்டுகளில் அரசியல் உலகத்தின் கவனத்தைத்தன்பால் இழுக்கக்கூடிய தலைவராக கருணநிதி இருப்பார்.

# இலங்கையின் நெற்செய்கை ..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும்பாலும்மூன்றுமாதத்துக்கும் ஆறுமாதத்துக்குமிடையில் அறுவடை செய்யக்கூடிய நெல்லினங்களே பயிரிடப்பட்டு வருகின்றன. (உ+ம்) பச்சைப்பெருமாள், எச் 4 போன்றன. இவ்விடைக்கால இனங்கள் காலநிலையைப்பொறுத்து பற்பல இடங்களில்பரவலாகப்பயிர் செய்யப்படுகின்றன.

### பயிரிடும் முறை

பண்படுத்தும் முறையினை நோக்கின் உழவுமுறை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பெரும்பான்மையாக உழவு இயந்திரங்களினலும், சிறுபான்மையாக எருதுகளினலும்மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பெரும்பான்மையாக நீர்ப்பாய்ச்சல் மூலம் நெற்பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் கிராமங்களில் உள்ள மக்கள் எருமைமாடுகள்மூலம் நிலத்தைப்பண்படுத்துகின்றனர். இம்முறை இன்றும் கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையான இடங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. இது ஒரு பழமை பேண் முறையாகும் பயிரிடும்முறையை நோக்கின் நான்குவிதமான முறைகள் கையாளப்படுகின்றன. அவையாவன: 1. புழுதிவிதைப்பு, 2. முளைகட்டி விதைத்தல் 3. வரிநெல்விடல்: 4. நாற்று நடல் என்பனவாம். புழுதி விதைப்பு எனப்படுவது மழைகாலத்திற்கு சிறிது முன்பு நிலத்தினை உழுது அவற்றில் நெல்லினை விதைத்து மறுத்துவிடல். இவ்வாருக விதைக்கப்பட்ட நெல் மழைபெய்ததும் முளைத்துப் பயிராகின்றது. கடும் வெயிலினல் சிலவேளைகளில் விதைக்கப்பட்ட நெல்மணிகளில் பெரும்பகுதி புளுங்கிவிடுவதுமுண்டு. இனி முளைகட்டிவிதைக்கும் முறையினை நோக்கின் நெல்மணிகளை சாக்குகளிலிட்டு 20 மணி நேரம்வரை ஊற வைத்து முளைத்த பின்னர் முளைகளாகவேயெடுத்து பண்படுத்தப்பட்ட சேற்று நிலத்தில் வீசியெறிதல். இவ்விரண்டுமுறைகளுமே இன்று பெரும்பான்மையாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன எனினும் சிறுபான்மையாக

(15-ம் பக்கம் பார்க்க)


வெற்றிகாரமான 2வது வாரம்
MANOHARA
JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya, Prepoya 4 shows
HELGA
The most revealing Sex education Film ever released!
(Strictly for adults only)
கருவுற்பத்தி முதல் பிரசவம் வரையில் இதுவரை திரைக்கு அனுமதிக்கப்படாத பல சம்பவங்களை புதிய சாதனைக் கருவிமூலம் வெளிப்படுத்திக் காட்டும் பிரசவ சித்திரம்.
ஹெல்கா
(கட்டாயமாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)
பாஸ்கள்-சலுகைகள் ரத்து

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p m.
Poya, Pre-poya 4 Shows
Brad Harris
in
MASSACRE AT MARBLE CITY
(Color)

வல்வெட்டித்துறை
றஞ்சன தியேட்டர்
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர். - ஜமுன நடித்த
தாய்மகளுக்கு கட்டிய தாலி

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 4காட்சிகள்
சிவாஜி, ஜி.வரலட்சுமி
எம். என். நம்பியார்
மற்றும் பலர் நடித்த
ஹரிச்சந்திரா

வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன்-ஏ.வி.எம்.ராஜன்
விஜயநிர்மலா-நாகேஷ்-எம்.ஆர்.ஆர்.வாசு
நடித்த
பந்தயம்
பாடல்கள்: கண்ணதாசன்
இசை: கே வி மகாதேவன்

வெற்றிகரமான 2 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்


சிவாஜிகணேசன் பத்மினி
பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனேரமா
மற்றும்பலர் நடித்த

சிவாஜிகணேசன் அளிக்கும்
ஸ்ரீ விஜயலக்ஷ்மி பிக்சர்ஸ்
தில்லானு மோகனம்பாள்
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்
A. P. நாகராஜன்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30
நடித்த
குலமகள் ராதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாரம் உங்கள் ராசிபலன்

ஜோ தி ஷ ம ணி மேல் க ர வை
— காவ. சிவப்பிரகாசன் —

(15—3—70— —21—3—70)

**மேடம்-** மனதில் நிம்மதி ஓரளவு உண்டு. தெய்வ சிந்தனை, பிறதேச சஞ்சாரம், கலை சம்பந்தமாய் ஈடுபாடு, வழக்கு வகை பாதிப்பு, பெண்வகை ஈடுபாடு, இவற்றிற்கு இடமுண்டு. உடல் எரிவு, சுரம் ஏற்படலாம். இவ்வார அதிர்ஷ்ட எண் 2.

**இடபம்** குடும்பத்தில் தீய பலன் நடக்கலாம். பெண்பாலார் விபத்துக்குள்ளாவர். அதிர்ஷ்டவகை பணவரவு, பிறர்க்கு உதவி புரியும் பாங்கு, சினேகிதர் வழிப் பொருள் சேர்க்கை, தொழில் சம்பந்தமான பிரயாணம்உண்டு. அதிர்ஷ்ட எண் 9.

**மிதுனம்-** தொழிலை எதிர்பார்த்திருப்பவருக்கு நல்ல காலம். முயற்சி பலிதம். தொழில் ஸ்தாபனங்களில் தேவையற்ற வாக்குவாதம். தூரத்து உறவினரிடமிருந்து சந்தோஷ சமாச்சாரம். படிப்பில் நாட்டம். அதிர்ஷ்ட எண் 5.

**கடகம்-** மங்களவிஷயங்கள் நடைபெறும், பலருக்கு விவாக நிச்சயதார்த்தம் உண்டு. சொத்து சேரும். பல விஷயங்களில் முன்னேற்றம் உண்டாகும். ஆபரணப்பேறு கிட்டும். கமத்தொழில் நிலைப்படும். அதிர்ஷ்ட எண் 3.

**சிங்கம்-** வயதுவந்தவார் சிலருக்கு ஆயுள் கெடுதல் நிகழலாம். சுரம், விஷநீர்ப்பீடை உண்டாகும். பாலுணவு விருத்தியுண்டாகும். சினேகிதர் வாக்குவாதம் சிறு சச்சரவுக்குள்ளாக்கும். வியாபாரிகளுக்கு மந்தநிலை. அதிர்ஷ்ட எண் 6.

**கன்னி-** சந்தோச சமாச்சாரம் கடல்கடந்து வரும். சதிகாரர்கை மேலோங்கும். விபத்து, மனை மாற்றம். பொருட்சேதம் ஓரளவுக்கு உண்டு. மனச்சஞ்சலம் கடைக்கூறில் குறைவுபடும். படிப்பில் மேலோங்கும் அமைவுண்டு. அதிர்ஷ்ட எண் 8.

**துலாம்-** இல்லாள் வகையால் பணம், பொருள், சொத்து சேரும். புத்திர உற்பத்தி உண்டு. மணிமுத்து ஆம் நவரத்தினங்களையும் கையாளும் வாய்ப்பு ஏற்படலாம். புதுமனை அமைக்கும் நிலை உண்டு. தேவையற்று கோஷ்டிச் சண்டையில் ஈடுபட வேண்டாம். அதிர்ஷ்ட எண் 1

**விருச்சிகம்-** ஆடை ஆபரணப்பேறு, கீர்த்தி இவை கைகூடும் நிலையேற்படினும் ஒரு சிலருக்கு சிறைபோகும் நிலையேற்படும். புத்திரநாசம் உண்டு. வியாபாரவகையில் லாபம்உண்டு. அதிர்ஷ்டத்தை 4எண் கொண்டு பெறவும்

**தனு:** பிரயாணத்தால் விபத்து, இரத்தக்காயம், பொருள் நஷ்டம், ஏற்படலாம். இரத்தாசயம் சப்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படும் நிலையுண்டு. பிறரால் பணவகை ஏமாற்றம் அடைவீர். குடும்பநிலைப்பேறு, பிதாவழி நன்மையுண்டு, இவ்வார அதிர்ஷ்ட எண் 7.

**மகரம்:** கோள்களின் நிலை கஷ்ட பலனையே குறிக்கிறது. ஆயினும் ஓரளவு வியாழ சுபம் உண்டு. வாகனக் கொள்வனவு, உடல் நிலை முன்னேற்றம், படிப்பில் நாட்டம், கலை ஈடுபாடு உண்டு. பிராயணம் தீமைபயக்கும், அதிர்ஷ்ட எண் 9.

**கும்பம்:** வாகனசுகம், சோதரர்வகை நன்மை, யாத்திரை, தொழில்பலிதம் உண்டு. ஒரு சிலர்க்கு சலத்தில் கண்டம், உடலிளைப்பு வாதரோகம் ஆகிய தீய பலன்களுமுள. வியாபாரிகள் அதிகமூலதனம் இடுவது நல்லதல்ல. அதிர்ஷ்ட எண் 5.

**மீனம்:** பிரயாணச் சிறப்புண்டு. கற்ருரால் கௌரவம் கிடைக்கும். கிழமை முற்ருகச் சுறுசுறுப்புண்டு. வாரஇறுதியில் உடல்நோவு, சளிப்பிடிப்பு, சொறிவு நோய்ஆகிய தீய பலன் நிகழலாம் வியாபாரிகளுக்கு முன்னேற்றகாலம் அதிர்ஷ்ட எண் 3.

## இலங்கை யின்

14-ம் பக்கத்தொடர்ச்சி)

விவசாய உபகரணங்கள் மூலம் வரி நெல்லிடலும், நாற்று நடுதலும் மேற் கொள்ளப்படுகின்றன.

இனி இலங்கையின் நெற்செய்கைப்பரம்பலை நோக்கின் பயிர் செய்யப்படுகின்ற நிலங்களில் 2/5 பங்கு நிலங்களே நெற்பயிர்ச்செய்கையின் கீழ் உள்ளன.

இவை பெரும்பாலும் வடமாகாணம், தென்மாகாணம், மத்திய மாகாணம், மேல் மாகாணம், கீழ்மாகாணம், வடமத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம், வடமேல் மாகாணம், என்னும் மாகாணங்களை உள்ளடக்கிய பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனினும் இலங்கையில் கீழ்மாகாணம்' தென்மாகாணம், வடமேல் மாகாணம் ஆகிய மூன்று மாகாணங்களிலும் ஏனைய மாகாணங்களைவிட அதிக நிலப்பரப்பில் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இம்மூன்று மாகாணங்களிலும், பெரும்போக, சிறுபோக பயிர்ச்செய்கையின் அளவு கால நிலையைப்பொறுத்து வேறுபடுகின்றது. ஆகவே இன்று நெல் விளைவிக்கப்படும் நிலப்பரப்பில் ஏறத்தாள 60 வீதம் உவர் வலயமாகவும், 40 வீதம் ஈரவலயமாகவும் உள்ளன. இவ்வாருக இலங்கையில் நெற்செய்கை பரம்பியுள்ளது

பண்பாட்டு காரணியை ஆராயுமிடத்து இன்று நெல் உற்பத்திசெய்யப்பட்டு வரும் பகுதியிலுள்ள மக்கள் பண்டுதொட்டு நெற்பயிரையே செய்கைபண்ணி வருவதனுல் இப்பிரதேசங்களில் குடியடர்த்தி கூடியுள்ளதைக்காணக்கூடியதாய் இருக்கின்றது. (உ-ம்) தென்மேற்குப் பிரதேசம் ஆரியரின் வருகையின்போது விவசாய நிலமாகக் காட்சியளிக்கவில்லை. ஆனுல் அவர்கள் இலங்கைக்கு வந்தவுடன் களனிகங்கையின் அருகில் தமது குடியேற்றங்களை நிறுவி பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர். அத்துடன் ஐரோப்பியரின் வருகையினுல் இப்பிரதேசத்திலுள்ள மக்கள்வியாபாரபயிர்ச்செய்கையையும் மேற்கொண்டனர். இவ்வாருக பயிர்ச்செய்கையின் ஆதிக்கத்தினுல் இப்பிரதேசம் குடியடர்த்திமிக்க பிரதேசமாக மாற்றமடைந்தது. இதனுல் இங்கு வாழ்கின்ற மக்கள் தாம் தொன்றுதொட்டு பின்பற்றிய முறையிலேயே நெற்செய்கையில் ஈடுபடுகின்றனர் என்பது தெளிவு. மேற்கூறப்பட்ட வழிவகைகளிலேயே இன்று நெல் விவசாயம் நடைபெறுகின்றது.

(அடுத்தவாரம்முடியும்)

**யாழ்ப்பாணம் ஐக்கிய இலாபநிதி லிமிட்டெட் சேமிப்பு வைப்பாளருக்கு ஒரு முக்கிய அறிவித்தல்**

8-3-70-ல் கூடிய மேற்படி சேமிப்பாளருடையபொதுக் கூட்டத் தீர்மானப்படி சேமிப்பாளர் அனைவரும் தங்களது முழுப் பெயர், விலாசம், சேர்ந்த திகதி, செலுத்திய பணம், புத்தக இலக்கம் ஆதிய விபரங்களை அந்த வட்டாரப் பிரதிநிதிகளிடம் அல்லது எமக்கு உடனடியாக கீழே காண்பிக்கும் விலாசத்திற்குத் தருமாறு வேண்டுகின்ருேம்.

14-3-70 தொடக்கம் தினமும் காலை 9 தொடக்கம் 12 மணி வரை காரியாலயம் செயற்படும்.

மலாயன் சிலோன் அசோசியேசன் மேல்மாடி, 54, ஜும்மா மசூதி ஒழுங்கை பெரியகடை, யாழ்ப்பாணம்.

**ந. தம்பித்துரை,**
தலைவர்,
மேற்படி சேமிப்பாளர் சங்கம்.
1984

### தேவை

வீடு:

கைத்தொழில் ஸ்தாபனத்திற்கு யாழ் மாநகர எல்லைக்குள் சகல வசதிகளுடன் உள்ள விசாலமான வீடு குத்தகைக்கு அல்லது வாடகைக்கு தேவை. விபரங்களுடன் எழுதவும். சி. ஆர். எஸ் என்டபிறைசஸ், கொக்குவில். 1916

### விற்பனைக்கு

பாவித்துக்கழித்த 45 கலன் வெற்று றம்களும், A40 எஞ்சின் ஒன்றும், செசி பிறேப் ஒன்றும் விற்பனைக்கு உண்டு வேலைநேரத்தில் மட்டும் பார்வையிடலாம். மில்க்வைற் சோப் தொழிற்சாலை காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 1912

தற்கால வசதிகளடங்கிய கல்வீடும், 3 1/4 பரப்பு நிலமும், சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள், கண்டி-யாழ்ப்பாணம் வீதியில், சங்கத்தானை இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு வேதாரணியம், தென்மராட்சி யூனியன், சாவகச்சேரி 1917

## நானும் ஒரு வாத்தி...

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை ஆரம்பமாகி வகுப்புகள் நடைபெறும் பொழுது ஆரம்ப வகுப்புகளில்தான் எத்தனை ரக முறைப்பாடுகள்! ஆசிரியனுக்கு அது ஒரு சோதனைதான். நீதிபதிக்கும் ஆசிரியனுக்கும் ஒரு வித்தியாசம். நீதிபதி சட்டப் புத்தகங்களைப் பார்த்து தண்டிக்கிருர். ஆசிரியன் மாணவனின் எதிர்காலத்தைப்பார்த்து தண்டிக்கின்ருன். தண்டிக்கப்பட்ட குற்றவாளியைப் பற்றி நீதிபதி சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆசிரியனுல் தண்டிக்கப்பட்ட ஒரு மாணவன் பழுதாகிவிட்டால் ஆசிரியனும் குற்றவாளியாகிவிடுகின்ருன்.

கல்வியிலிருந்து ஒதுங்க விரும்பி கடைசி வாங்கிலிருக்கும் மாணவனை முன்னுக்குக்கொண்டுவருவதற்காக ஆசிரியன் ஒடுவன் வகுப்பில் நடத்தும்போராட்டம் இருக்கிறதே அது முன்னுக்கு வந்த ஒரு மாணவனுக்குத்தான் தெரியும்.

'பாடசாலைக்கு நேற்று ஏன் வரவில்லை?' என்றகேள்விக்கு கிராமப்புறமாணவர் சிலரிடமிருந்து வரும் பதில் 'அம்மா பிள்ளையைப் பார்க்கச் சொல்லிவிட்டு, ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டா' என்பதாக இருக்கிறது. குடும்பநலத்திட்டம் நகரத்தைவிட்டு வெளியேநகரவில்லையா? உற்பத்தித்துறையில் மனிதஇனம் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ளாவிட்டால் அறிவுத்துறைக்குக்கூட அது இடையூருக இருக்கும்போல் தெரிகிறது.

கிராமப்புறத்து ஆரம்ப பாடசாலையொன்றில் ஆசிரியனுக இருக்கும் ஒருவன்ஒவ்வொரு மாணவனின் குடும்பசூழ்நிலைபற்றியும் அறிந்திருக்க வேண்டிய அவசியமிருக்கிறது

துடுக்குத்தனமாக எப்போதும் பேசிக்கொண்டிருக்கும் சிறுமி ஒருத்தி அன்று சோகமாய் நின்றுகொண்டிருந்தாள். அவள் காதைப் பார்த்தேன். அவளதுசிவந்த சொக்கையில் அசைந்து கொஞ்சி விளையாடும் அந்த சிமிக்கியைக் காணவில்லை 'எங்கேஅவை?'- கலவரத்துடன் கேட்டேன். சில புதிய புத்தகங்களை என்முன்னே எடுத்து வைத்து விட்டு ''அம்மா அடைவு வைத்துவிட்டா'' என்று விம்மலுக்கிடையே கூறினுள். நான் சில நிமிடம் அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன். ''இங்கே பாரடா வாத்தி அழுகிருர்'' -என்ற வேடிக்கை கலந்த குரல் வகுப்பின் ஒரு மூலையிலிருந்து கேட்டபின்தான் எனதுநிலைஎனக்குச் சரியாக விளங்கியது.

'பிச்சைபுகினும் கற்றல் நன்றே' என்று கூறும் ஔவையையும்; அறநெறி கூறும் வள்ளுவனையும்; வீரம்பேசும் கம்பனையும்; 'காலை எழுந்தவுடன் படிப்பு' என்று கடமை கூறும் கவி பாரதியையும்; 'மலை வாழையல்லவோ கல்வி' என்று வாயாரக்கூறும் பாரதிதாசனையும், பல மைல் தூரம் சென்று படித்த ஆபிரகாம் லிங்கனையும், கிரேக்கத்தின் அறிவுச்சுடர் சாக்ரடீசையும், ''வேகமாகப்படி இல்லாவிட்டால் விழுந்துவிடுவாய்'' என்று எச்சரிக்கை செய்யும்கோர்க்கியையும், சமயம் வளர்த்த நாவலரையும்; இசை வளர்த்த விபுலானந்தரையும், வேடிக்கையாகப்பேசும் பெர்ணட் ஷோவையும் எனக்கு முன்னுல் இருக்கும் சின்ன வாங்குகளில் நான் சில வேளைகளில் காண்பதுண்டு. அப்படி ஒரு பிரமை. அறிவு, அறிவு, அறிவு -அது எத்தனை நல்ல மனிதர்களையெல்லாம் சந்திக்கவைக்கிறது

பாடசாலைக்கு தாமதித்து வரும் மாணவர்களை தமது சைக்கிளிலேயே கொண்டு வந்து சேர்க்கும் ஆசிரியர்களும் இருக்கிருர்கள் என்பது இங்குவந்த பின் தான் எனக்குத் தெரியவந்தது. இதனுல் சைக்கிளில் ஆறு முடியாத கூட்டம் இவர்களை வளைத்துக் கொண்டு 'வாத்தி என்னையும் ஏத்திக் கொண்டு போ' என்று உரிமை கொண்டாடும் சமயத்தில் இவர்கள் தடுமாறித்தாமே சிரிப்பதுமுண்டு.

பழக்கம் சிலவேளைகளில் விசித்திர விளைவுகளையும் ஏற்படுத்திவிடுகிறது.

அன்ருெருநாள் மத்தியானம் மாடொன்று எங்கிருந்தோ வெருண்டு வந்து எங்கள் பாடசாலையின் பக்கத்தால் பாய்ந்து ஓடிய போது அதன்கழுத்தில் கட்டப்பட்டிருந்த அழகுமணி வேகமாக அடித்துவிட்டது. மாடுசெய்தவேலையை மாணவர்கள் பார்க்கவில்லை. மணியின் குரல்கேட்ட அவர்கள் தத்தமது புத்தகங்களைக் கையில் அவசர அவசரமாக எடுத்துக்கொண்டு பாடசாலையிலிருந்து வீட்டுக்குக் கிளம்பிவிட்டார்கள். தடுப்பதற்காகத் தலைமை வாத்தியார் போட்ட சப்தம் அவர்களது இளமைவேகத்துக்கு முன்னுல் எம்மாத்திரம்.

ஆசிரியன் நடிகனுகவும் இருக்கவேண்டுமென்கிருர்கள். இதில் ஆரம்ப பாடசாலை ஆசிரியன் எந்தரக நடிகர் வரிசையைச் சேர்ந்தவன்?

### விற்பனைக்கு

முனிசிப்பல் எல்லையில் வண்ணுர்பண்ணை வடமேற்கில் ஆறுகால் மடத்தடியில் மெயின் ரோட்டுச் சந்தியில் 8 பரப்பு விசாலமான 2 மேல் மாடி அறைகளுடன் வருவாயுடைய தென்னங்கன்றுகளும், நன்னீர் கிணறும் உண்டு. குடியிருப்புக்கோ, தொழில் ஸ்தாபனம் அமைப்பதற்கோ மிகத் திறமையான இடம். விபரங்களுக்கு: Mrs. அரியராசா C/o சி. பொ. வேலாயுத பிள்ளை, அடைவுகடை, கல்லூரி வீதி, கொக்குவில். 1911


## வலிகோப்டெக்ஸ்

**வலிகோப்டெக்ஸ் யாரிப்புகள்**
மறுமுறை உங்கள் துணிகளை வாங்கும் பொழுது சங்கானை வலிமேற்கு சமாஜத்தில் புடவைகளை வாங்கி அணிந்து ஆனந்தம் அடையுங்கள்.

**தரமான சாறிகள் – ரவுக்கை - பாவாடைத் துணிகள்-பட்டுவேட்டி சால்வைகள்-காற்சட்டைத்துணிகள்**

தயாரிப்பாளர்கள்:
**வலி.மேற்கு ப.நோ.கூ:ச. சமாஜம், மின்தறிநிலையம் - சங்கானை.**
தொலைபேசி: மானிப்பாய் 525

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணிமொழிகள்!

ஜனநாயக அமைப்பில் பொதுஜன அபிப்பிராயம்தான் சமூகத்தைத் தூய்மையாக வைத்திருக்கும். அதேசமயத்தில் பிடிவாதமின்றி மற்றக்கருத்துக்களுக்கும் மதிப்புக் கொடுக்கவேண்டும். நம் மனத்திற்குச்சரி என்று தோன்றுவதை அஞ்சாமல் சொல்லவும் செய்யவும் துணியவேண்டும்.

0 0 0

கட்டுப்பாட்டுடனும் அறிவுடனும் நடக்கும் ஜனநாயகத்திற்கு ஈடாக உலகில் எதுவும் இல்லை. பாரபட்சம் உள்ளதும் அறிவில்லாததும் குருட்டு நம்பிக்கைகள் கொண்டதுமான ஜனநாயகம் குழப்பத்தில் சிக்கி அவதிப்படுவதோடு-இறுதியில் அழிந்தும்போகும்.

—மகாத்மா காந்தி.




மில்க்வைற் தயாரிப்புகளின்
மேலுறைகளைச் சேகரித்து
அனுப்பிப் பரிசுகளைப் பெறுங்கள்.
மில்க் வைற் சோப் தொழிற்சாலை-யாழ்ப்பாணம்
GNANAM ARTS, Col.


## 'ஈழநாடு' கிரிக்கெட் புதிர்

# யார் பக்கம் வெற்றி

## சென். ஜோன்ஸுக்கா சென்றலுக்கா?

### திருமண அழைப்பு

**வரதராசா-இரத்தினஜோதி**

எனது சகோதரன் பொன்னையா வரதராசாவிற்கும் மானிப்பாய் கந்தப்பா அவர்களின் பெருமகள் இராசரெத்தினம் இரத்தினஜோதிக்கும் 18-3-70 புதன்கிழமை காலை 9 மணி முதல் 10 மணிவரையுமுள்ள சுபவேளையில், நல்லூர் சிவன் கோவிலில் திருமணம் நடைபெற இருப்பதால் உறவினர்களையும், நண்பர்களையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். க. தருமலிங்கமும் பாரியாரும், 330 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1920


Now showing
REGAL JAFFN
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya, Pre-poya 4 Shows
SEVEN SLAVES AGAINST ROME


**யா**ழ். மத்திய கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெறவிருக்கும் 72 வது கிரிக்கெட் போட்டியையொட்டி கிரிக்கெட் பிரியர்களுக்கு உற்சாகமளிக்கும் புதிர் போட்டியொன்றை ஈழநாடு 'றுப்பி' விளம்பரதாரரின் ஆதரவுடன் நடத்துகிறது. புதிர்போட்டி இதோ!

இப்போட்டிசம்பந்தமான நிபந்தனைகள்:

O ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப்பலாம்.

O எல்லாம் சரியான விடைகளுடன் கூப்பன் கிடைக்காத பட்சத்தில் ஆகக்கூடிய சரியான விடையுடன் வரும் கூப்பனுக்கு முதல்பரிசு வழங்கப்படும். மற்றும் நான்கு பரிசுகளும் வழங்கப்படும்

O கூப்பன்களை 'ஈழநாடு' கிரிக்கெட் புதிர்', 'ஈழநாடு' த. பெ. இல: 49, யாழ்ப்பாணம் அல்லது 'ஈழநாடு கிரிக்கெட் புதிர்', 'றுப்பி விளம்பரதாரர்', 18, வேம்படி றேட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

O புதிய போட்டிக்கான மத்தியஸ்தர்களின் தீர்ப்பே இறுதிமுடிவாகும்.

O கூப்பன்களுடன் வராத விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

O புதிருக்கான விடைகள் கிடைக்கவேண்டியகடைசிக் காலம்: 20-3-70 காலை 10 மணிக்குமுன்னர்.

O உங்கள் விடைகளை அழகாக தெளிவாக எழுதவேண்டும்.

### புதிருக்கான கேள்விகள்

1. இக்கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கான கோஷ்டியைத் தெரிவு செய்வதற்கு பூவா, தலையா போட்டுப் பார்க்கும் போது யாருக்கு வெற்றி கிடைக்கும்?

2. இந்தக்கிரிக்கெட் போட்டியில் யாருக்கு இறுதிவெற்றி கிடைக்கும்?

3. யார் கூடுதலான ரன்களை எடுப்பார்கள்?

4. கூடுதலான விக்கெட்டுகளை 'பேஸ்மென்' களா 'ஸ்பின்னர்'களா எடுப்பார்கள்?

கூப்பன் இரண்டாம் பக்கம் பார்க்க

5. முதல் இன்னிங்ஸில் கூடுதலான ரன்களை யார் எடுப்பார்கள்?

6. யார் கூடுதலான விக்கெட்டுகளை வீழ்த்துவார்கள்?

7. சென் ஜோன்ஸ் காப்டனு, சென்றல் காப்டனு கூடுதலான ரன்களை எடுப்பர்?

8. முதலாவது இன்னிங்ஸில் எந்தக்கோஷ்டி கூடுதலான ரன்களை எடுப்பார்கள்?

### பரிசுகள் வழங்குபவர்கள்

**1-ம் பரிசு:** ஏ. கே. எஸ் வழங்கும் மணிக்கூடு.

**2-ம் பரிசு:** ஒட்டஸ்வழங்குகிறார்கள் (நாளே பரிசு விபரம்)

**3-ம் பரிசு:** அமிர்தாஸ் வழங்கும் மணிப்புரி சாரி அல்லது டெர்லின் ஷேர்ட்.

**4-ம் பரிசு:** ஆர் பி கோ தயாரிப்புகளின் பிரதம விநியோகஸ்தர் பாலா டிஸ்றிபியூட்டர்ஸ் யாழ்ப்பாணம். வழங்கும்-2 போம் தலையணைகள்.

**5-ம் பரிசு.** மில்க்வைற் ஸ்தாபனம் வழங்கும்பரிசுப் பொட்டலம்.


### மரண அறிவித்தல்

**ச இளையதம்பி**

நீர்வேலிவடக்கு ச. இளையதம்பி காலமாகிவிட்டார். இவர் ஆச்சிக்குட்டியின் கணவரும் ராஜா சோடாக் கம்பெனி உரிமையாளர் தவராஜா, தருமராஜா துரைசிங்கம், தவலிங்கம், கமலாகரன், இராசாம்பிகை, இந்திராணி ஆகியோரின் தந்தையும் சுவாமிநாதனுடைய மாமனுமாவர். மரணச்சடங்கு இன்றுமாலை 2 மணிக்கு நடைபெறும். தவராஜா 1665


## யாழ். ராணியில் காண்பிக்கப்படுகின்றது

ஈழத்தின் தலைசிறந்த தயாரிப்பு!
பெண்குலத்தின் பெருமையை விளக்கும் உன்னத காவியம்



★ ஸ்ரீ சங்கர் (இரு வேடங்கள்) ★ உதயகுமார்
★ எஸ். எஸ். சின்னையா
★ ஏ. எஸ். ராஜா ★ ஹெலனா குமாரி-மஞ்சுளா
★ எம். செபஸ்தியான்

நடித்த
கீதாலயம் பிலிம்ஸ் அளிக்கும்

# "மஞ்சள் குங்குமம்"

டைரக்ஷன்: எம். வி. பாலன்
நடனம்: லீலா நாராயணன்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org